பக்கங்கள்: 16+சூரியகாந்தி-6=இருபத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 03 ஞாயிற்றுக்கிழமை (15-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:81

# கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்களிப்புக்கு கண்காணிப்புக் குழு உதவி பெற யோசனை

## தேர்தல் திணைக்களத்தில் நாளை கூட்டம்

கொழும்பு,பெப்ரவரி15

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்களிப்பை நடத்துவதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உதவியைப் பெறுவது தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது. தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நாளை கூட்டும் கூட்டம் ஒன்றில் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுடனும் அரசின் சமாதானச் செயலக அதிகாரிகளுடனும் இதுபற்றி நேரில் கலந்துரையாடவுள்ளார்.**

வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்டங்களில் தேர்தல் ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக அந்த மாவட்டங்களின் அரச அதிபர்கள், பிரதித் தோதல் ஆணையாளர் ஆகியோருடன் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்று ஆராய்ந்தார். நண்பகல் 12.30 மணியளவில் இந்தக் கூட்டம், தேர்தல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தில் கிளிநொச்சி, மருதங்கேணி ஆகிய பிரதேசங்களையும் -

வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவு, வவுனியாவின் ஒருபகுதி, மன்னாரின் ஒருபகுதி ஆகிய பிரதேசங்களையும் -

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சில பிரதேசங்களையும் -

சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இந்தப் பிரதேசங்களில் உள்ள மக்கள் வாக்களிக்க கொத்தணி முறையில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பான யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது. அந்த யோசனையை ஏற்க வடக்கு - கிழக்கு அரச அதிபர்கள் மறுத்துவிட்டனர். அதனால் ஏற்படும் சிக்கல்கள் குறித்து அவர்கள் தேர்தல் ஆணையாளர்களுக்கு விளக்கமளித்தனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் வாக்குச்சாவடிக்குள்ளும் செல்வர்

### தேர்தல் திணைக்களம் அனுமதி

கொழும்பு,பெப்.15

தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபடும் வெளிநாட்டு, உள்நாட்டுக் கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குள் செல்ல இம்முறை அனுமதிக்கப்படுவர்.

தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக தேர்தல் திணைக்களத்தில் நேற்றுக் கூட்டப்பட்ட மாநாட்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை முழுவதிலும் உள்ள அரச அதிபர்கள், பிரதித் தேர்தல் ஆணையாளர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

கடந்த தேர்தல்களின் போது கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இம்முறை உள்நாட்டு, வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 24ஆம் திகதி நண்பகல் 12 மணி வரையும் நியமனப்பத்திரங்கள் மாவட்ட செயலகங்களில் ஏற்கப்படவுள்ளன.

விடுமுறை தினமான 18ஆம் திகதியும் சனி, ஞாயிறு தினங்களிலும் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## ம.ம.முன்னணி, இ.தொ.காங்கிரஸ் ஐ.தே.முன்னணியில் இணைவு!

கொழும்பு,பெப்.15

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி ஆகியன போட்டியிடவுள்ளன.

இக்கட்சிகளின் தலைவர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடந்த பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளன.

இ.தொ.காவுக்கு நுவரெலியா, கொழும்பு மாவட்டங்களில் நான்கு இடங்களையும் -

மலையக மக்கள் முன்னணிக்கு மூன்று இடங்களையும் - வழங்க பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன்படி மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் நுவரெலியாவிலும் ராதாகிருஷ்ணன் கொழும்பிலும் போட்டியிடவுள்ளனர்.

மனோ கணேசன் தலைமையிலான மேல்மாகாண மக்கள் முன்னணியும் ஐ.தே.முன்னணியுடன் சேர்நது போட்டியிடும் எனத் தகவல்கள் தெரிவித்தன. (ம-3)

## சு.கட்சித் தலைவர்கள் சிலர் ஐ.தே. முன்னணிக்குத் தாவலாம்!

கொழும்பு,பெப்.15

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்கள் சிலர் ஐ.தே.முன்னணியில் எந்த நேரமும் இணையலாம் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த சமயம் அமைச்சாகளாகப் பதவி வகித்த றொனி டி மெல், ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரும் ஐ.தே. முன்னணியில் இணையும் வாய்ப்பு உருவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

அதேவேளை -

ஐ.தே.முன்னணித் தலைவர்கள், வேட்பாளர் பட்டியல்களைத் தயாரிக்கும் பணியில் நேற்று நள்ளிரவு வரை ஈடுபட்டனர் எனத் தகவல் ஒன்று தெரிவித்தது. (ம-3)

## விபத்தில் பொலீஸ் அதிகாரி உயிரிழந்தார்!

கொழும்பு,பெப்.15

பொலநறுவ மாவட்டத்தில் கதிரிவெல என்னும் இடத்தில் நேற்று இடம்பெற்ற சொகுசு பஸ் - பொலீஸ் ஜீப் விபத்தில் பொலீஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த இரு பொலீஸார் பொலநறுவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(ம-3)

## வேறு கட்சிகளுடன் இணைந்து செயற்பட கூட்டணி தனது அனுமதி பெறவேண்டுமாம்

### பொதுச் செயலருக்கு சங்கரி கடிதம்

கொழும்பு,பெப்.15

ஏதாவது கட்சிகளுடன் இணைந்து செயற்படுவது, கூட்டணி அமைப்பது தொடர்பாகப் பேசுவதானால், முன்கூட்டியே தன்னுடன் பேசி அனுமதி பெற்றே செயற்படவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கட்சி உறுப்பினர்களுக்கும் பொதுச் செயலருக்கும் அறிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியன் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனுக்கு நேற்றுமுன்தினம் அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் 11.02.2004இல் 'டி.சி.கொழும்பு 6933 எஸ்.பி.எஸ்" வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளைக்கு அமைவாக இக்கடிதத்தை எழுதுவதாக ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தின விவரம் வருமாறு:-

தமிழர் விடுலைக் கூட்டணி சார்பான எந்தவிதமான தீமானங்களையோ அல்லது முடிவுகளையோ கட்சியின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் இன்று திரும்புவார்

கிளிநொச்சி,பெப்.15

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இன்று வன்னி திரும்புகிறார்.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் சுவிஸில் மந்திராலோசனைகளை நடத்தியபின் இன்று முற்பகல் கொழும்பு திரும்பும் தமிழ்ச்செல்வன் நண்பகல் மட்டில் வன்னி வந்துசேர்வார்.

திரும்பிய கையோடு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக அவர் கலந்துரையாட இருக்கின்றார்.

நாளை அல்லது நாளைமறுதினம் தமிழ்ச்செல்வன் தமிழ்த தேசிய கூட்டமைப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கின்றார். (ம-3)

## வேட்பாளர், சின்னம், கொள்கைப் பிரகடனம் தொடர்பாகக் கூட்டமைப்பு இன்று முடிவு

கொழும்பு,பெப்.15

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு செய்தல், தேர்தல் சின்னம் மற்றும் கொள்கைப் பிரகடனம் என்பவற்றை இறுதி செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கூடி முடிவெடுக்க இருக்கிறது.

கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெறும் இக்கூட்டத்தில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

மாகாண மட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறித்து கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவிருக்கின்றது.

கூட்டமைப்பு எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது, எந்தக் கொள்கையை முன்வைத்து தேர்தல் கொள்கையைத் தயாரிப்பது ஆகிய விடயங்கள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கூட்டமைப்புப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ம-3)

## பிரசாரங்கள்

கொழும்பு,பெப்.15

ஐக்கிய தேசிய முன்னணி தனது பிரசாரத்தைக் கண்டியிலும் சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டமைப்பு தனது பிரசாரத்தை அநுராதபுரத்திலும் சமய வழிபாடுகளுடன் ஆரம்பிக்க இருக்கின்றன.

எதிர்வரும் 26ஆம் திகதி கண்டியில், பீடாதிபதிகளின் ஆசியைப் பெறுவதுடன் தலதா மாளிகையில் விசேட வழிபாடுகளை நடத்தித்தனது பிரசாரத்தை ஐக்கிய தேசிய முன்னணி ஆரம்பிக்கின்றது. அன்று முதலாவது பொதுக்கூட்டமும் அங்கு இடம்பெறும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முன்னணியின் முக்கிய தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர்.

சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டமைப்பு தனது பிரசாரத்தை அநுராதபுரம் ரஜமகா விகாரையில் சமய வழிபாட்டுடன் அடுத்த வாரம் ஆரம்பிக்கின்றது.

சு.கட்சி, ஜே.வி.பி.யின் முக்கிய தலைவர்கள் இந்தப் பிரசாரத்தில் ஈடுபடுவர். (ம-3)

## வீட்டு நஷ்டஈட்டுக் கொடுப்பனவை ஒரு லட்சமாக உயர்த்த முடிவு!

### உலக வங்கி இணக்கம்

கொழும்பு,பெப்.15

வடக்கு - கிழக்கில் வீடமைப்பு நஷ்டஈட்டுக் கொடுப்பனவை 75 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு லட்சத்துக்கு பத்தாயிரம் ரூபாவாக உயர்த்த உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் மூன்று லட்சம் வீடுகளை புனரமைக்கும் திட்டம் ஒன்று உலக வங்கியின் உதவியுடன் எதிர்வரும் மே மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

இத்திட்டம் குறித்து ஆராய நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அரச அதிபர்கள் வீடமைப்புக் கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து இக்கொடுப்பனவை ஒருலட்சத்து பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்க உலக வங்கி அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தனர்.

இத்திட்டம் வடக்கு - கிழக்கு மாகாணசபை ஊடாக செயற்படுத்தப்பட இருக்கின்றது. (ம-3)

## இந்திய முன்னாள் பிரதி அமைச்சர் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம்,பெப்.15

இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார பிரதி அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் ராஜ்யசபை உறுப்பினருமான எட்வோடோ பெலாரோ நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான இவர் கொழும்பில் தற்சமயம் தங்கியிருந்து இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்ந்து வருகிறார்.

யாழ். வரும் அவர், யாழ். அரச அதிபர், யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆகியோரைச் சந்தித்துக்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஈராக்கில் தொடரும் தாக்குதல்கள்

# நேற்றும் 22 பேர் கொல்லப்பட்டனர்!

பக்தாத்,பெப்.15

ஈராக்கின் முக்கிய நகரான பலூஜாவில் முகமூடி அணிந்த ஆயுததாரிகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் குறைந்தது 22பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர். ஈராக்கிய பாதுகாப்புப் படையினரின் வளாகம் மற்றும் அரச கட்டடம் என்பவற்றில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஈராக்கியப் படையினர் மீது இந்த வாரத்தில் நடத்தப்பட்ட மூன்றாவது பெரிய தாக்குதல் இதுவாகும். இவற்றில் சுமார் 100 பேர் வரையிலானோர் இறந்துள்ளனர்.

நேற்றைய தாக்குதலில் குறைந்தது 14 ஈராக்கியப் பொலீஸாரும 3 ஆயுததாரிகளும் கொல்லப்பட்டனர் என்று அதிகாரிகள் கூறினர்.

அரச கட்டடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகள் பலர் இந்தத் தாக்குதலின் போது அங்கிருந்து தப்பி வெளியேறியுள்ளனர். ஆயுததாரிகள் ஒவ்வோர் அறை அறையாகச் சென்று கிரனேட்டுக்களை வீசித் தாக்குதல் நடத்தினர் என்றும் கூறப்படுகின்றது.

இதே வளாகம் இரண்டு நாள்களுக்கு முன்பாகவும் தாக்குதலுக்கு இலக்கானது. அமெரிக்காவின் மத்திய கிழக்குக்கான படைத் தளபதி ஜெனரல் ஜோன் அபிஷயிட் அங்கு விஜயம் செய்திருந்தபோது இத்தாககுதல் நடத்தப்பட்டது. ஆனால், அவர் காயமேதுமின்றித் தப்பிக்கொண்டார்.

நேற்றைய தாக்குதலை சுமார் 50 பேர் கொண்ட ஆயுதம் தரித்த குழு ஒன்றே நடத்தியது என்று கூறப்பட்டது.

"அடையாளம் தெரியாத நபர்கள் மோட்டார்களைச் சுட்டார்கள்; வெடிகுண்டுகளை வீசினார்கள். அத்துடன் இலகு ரக இயந்திரத் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார்கள். நாலாபுறமும் இருந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது" - என்றார் ஈராக்கியப் பொலீஸ் அதிகாரியான எரஸன் அபு இஸா.


"எங்களிடம் இருந்த ஏ.கே. ரக துப்பாக்கிகளைவிட அவர்களிடம் இருந்த ஆயுதங்கள் சக்திவாய்ந்தவை" - என்றும் அவர் கூறினார்.

தாக்குதல் நடந்த இடத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள உள்ளூர் மேயர் அலுவலகம் மீதும் ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

உடனடியாக அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடந்த இடத்தை நோக்கி நகர்த்தப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதலால் இறந்தவர்களின் உறவினர்கள் கடும் ஆத்திரமடைந்துள்ளனர் என்று பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.


பழிக்குப் பழி வாங்க அவர்கள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆயுதங்களைத் தாங்கிய சில குழுவினரும் இறந்தவர்களின் உறவினர்களும் வீதிகளில் இறங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

பலூஜா பகுதியில் சுனி இன முஸ்லிம்களே பெரும்பான்மையாக வசிக்கின்றார்கள். அமெரிக்கப் படைகள் ஈராக்கில் நிலைகொண்டுள்ளதற்கு இவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)



நேற்று பலூஜா நகரில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்த ஈராக்கியப் பொலீஸார் இருவர்.

# பிலிப்பைன்ஸில் தம்பதியர்கள் நேற்று முத்தமிட்டுச் சாதனை!



முத்தச் சாதனையில் ஈடுபட்ட தம்பதிகள்

மணிலா,பெப்.15

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்று ஆயிரக்கணக்கில் கூடிய தம்பதியினர் ஒரேநேரத்தில் முத்தமிட்டு புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளனர்.

காதலர் தினமான நேற்று மணிலாவில் கூடிய 5ஆயிரத்து 122 தம்பதியினர் இந்தச் சாதனையை நிகழ்த்தினர்.

நள்ளிரவு காதலர் தினம் பிறந்த நேரத்தில் அனைத்துத் தம்பதியினரதும் உதடுகள் 10 செக்கன்கள் சேர்ந்திருந்தன.

இதற்கு முன்னர் சிலி நாட்டில் 4ஆயிரத்து 445 தம்பதியினர் சண்டியாகோ நகரில் ஒரே நேரத்தில் முத்தமிட்டமைதான் இதுவரை சாதனையாக இருந்து வந்தது.

பிலிப்பைன்ஸ் முத்தச் சாதனையில் பங்குகொண்டவர்கள் திருமணமானவர்கள் அல்லது திருமணம் நிச்சயிக்கப்பட்டவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனாலும் காதலர்கள் பலரும் அங்கிருந்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

மணிலா நகர மேயர் லிட்டோ அட்டின்ஸாவும் இந்த முத்தச் சாதனையில பங்குகொண்டார். அவரது மனைவியை அவர் முத்தமிட்டார்.

"நாங்கள சுமந்துகொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு சிறிய இடைவெளியைக் கொடுப்பதற்காக நாம் இதனைச் செய்தோம். எங்கள் பணிகளில் இருந்தும் அரசியல் நெருக்கடிகளில் இருந்தும் சிறிய தருணம் விடுபட இது சந்தர்ப்பமாக இருந்தது" - என்றார் மேயர். (ம)

## அணு எரிபொருள் விற்க ஈரான் தயார்!

சியோல்,பெப்.15

அணு எரிபொருள்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு ஈரான் தயாராகிவிட்டது என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஹமால் ஹற்றாஸி நேற்றுத் தெரிவித்தார்.

ஈரானிய அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் இந்தத் தகவலைத் தெரிவித்தது.

பொதுமக்களுக்கான அணுசக்தித் திட்டங்கள் என்ற போர்வையின் கழ் அணு ஆயுதங்களை ஈரான் தயாரிக்கின்றது என்று அமெரிக்கா சந்தேகிக்கின்றது. இக்குற்றச்சாட்டை ஈரான் மறுத்து வருகின்றது.

தமது நாட்டிற்கு பெருமை சேர்க்கும் அணுசக்தித் திட்டங்களை ஈரான் ஒருபோதும் கைவிடாது என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவத்தார். ஐ.நா. மேற்பார்வையின் கீழ் தனது அணுத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு கடந்த ஆண்டின் இறுதியில் ஈரான் சம்மதித்திருந்தது.

சர்வதேச அணுசக்தித் தடை பரவல் ஒப்பந்தத்தின் கீழ் நாடுகள் யுரேனியத்தைச் சேமித்து வைப்பதற்கு அனுமதியுண்டு. ஆயினும் அவ்வாறு சேமித்து வைப்பதைக் சம்பந்தப்பட்ட நாடுகள் சர்வதேச அணு சக்தி அமைப்பிற்குத் தெரியப்படுத்தவேண்டும்.

யுரேனியத்தைச் சேமிக்கும் தனது திட்டங்களை இடைநிறுத்துவதாக கடந்த ஒக்ரோபரில் சர்வதேச அணு சக்தி அமைப்பிற்கு ஈரான் வாக்குறுதி அளித்திருந்தது. ஆயினும் கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்ட அணுஎரிபொருள் ஏற்றுமதி தொடர்பான அறிவிப்பால் ஈரான் தனது வாக்குறுதியை மீறிவிட்டதாகவும் நம்பப்படுகின்றது.

அணுசக்தியை உருவாக்கும் முறைகள் பரப்பப்படுவதைத் தடுப்பதற்கு உலகளாவிய ரீதியில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜேர்ஜ் புஷ் அறிவித்துச் சில தினங்களிலேயே ஈரானின் அறிவிப்பு வெளியாகியிருந்தது. இவ்விடயம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கு முன்னர் அணுசக்தி தொடர்பான தனது திட்டங்களை வெளியிடுவதற்கு ஈரானுக்கு இன்னும் கால அவகாசம் வழங்கப்படுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ம-து)

## ஆப்கானில் அமெ.சிப்பாய் பலி!

காபூல்,பெப்.15

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிற்கு 150 கிலோமீற்றர் தென்மேற்காகவுள்ள காஸ்னி என்ற நகரில் இடம்பெற்ற தாக்குதலில் அமெரிக்கப் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

தலிபான்கள் எனச் சந்தேகிக்கப்படுவோருடன் அமெரிக்கப் படைகள் ஆப்கானில் அடிக்கடி மோதிக்கொண்டிருக்கின்றன.

உலக அரங்கில்

காஸ்னி நகரின் அருகில் சென்றுகொண்டிருந்த அமெரிக்கப் படையணியினர் மீது கடந்த வெள்ளிக்கிழமையன்று நடத்தப்பட்ட இத்தாக்குதல் ஒரு நிலக்கண்ணி வெடித் தாக்குதலாக இருக்கலாமென்று அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இவ்வாறான தாக்குதல்களே அமெரிக்கப் படையினருக்கு எதிராக நடத்தப்படடு வருகின்றன. (ம-து)

# ஹெயிட்டியின் வடக்கு நகர்களில் மனிதப் பேரழிவு ஏற்படும் அபாயம்

## உதவும் அமைப்புக்கள் எச்சரிக்கை

லண்டன்,பெப்.15

கரீபியன் நாடான ஹெயிட்டி நாட்டில் கிளர்ச்சியாளர்கள் வசம் இருக்கும் வடக்கு நகரங்களில் மனிதப் பேரவலம் உருவாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று உதவும் நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. நாட்டின் ஏனைய பகுதிகளுடனான தொடர்பை இந்தப் பகுதி தொடர்ந்தும் இழந்துள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று அது தெரிவித்துள்ளது.

ஏனைய பகுதிகளில் இருந்து உணவுப் பொருள்களோ மருந்துகளோ ஹெயிட்டி நாட்டின் வடபகுதிக்குச் செல்வது முற்றாகத் தடைப்பட்டுள் ளது.



வன்முறைக் கும்பலால் வீதியில் டயர்கள் எரிக்கப்படுகின்றன.

நிர்வாகச் சீர்கேடுகளும் ஊழலும் தலைவிரித்தாடும் ஹெட்டியில் பிரதமர் ஜேன் பார்ட்டன்ட் அரிஸ்டிட் பதவி விலகவேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் பெரும் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றன. இதனை அடக்கப் பிரதமர் ஆயுதப் படைகளைப் பயன்படுத்துகின்றார். அதற்கு எதிராக நாட்டின் வடபகுதியில் ஆயுதக் கிளர்ச்சி வெடித்துள்ளது, கிளர்ச்சியாளர்கள் அங்கிருந்த பொலீஸாரைத் துரத்தியடித்துவிட்டு அப்பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்த வன்முறைகளில் சுமார் 50 பேர்வரையானோர் கொல்லப்பட்டனர். வன்முறைகள் மேலும் பெருகிக் கொண்டே செல்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடரும் வன்முறையினாலும் அரச படையினரின் கட்டுப்பாட்டினாலும் கிளர்ச்சியாளர்கள் வசம் இருக்கும் வடக்கு நகரங்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் செல்வது முற்றாகத் தடைப்பட்டுள்ளது. இந்த நிலைமை மேலும் தொடர்ந்தால் அங்கு பெரும் மனித அவலம் ஏற்படும் என்று உதவும் அமைப்புக்கள் உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன. உடனடியாக உதவிகளை அனுப்பும்படியும் அவை கோரியுள்ளன.

வெள்ளிக்கிழமை இந்தப் பிரச்னை பற்றிக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் கொலின் பவல், ஹெய்ட்டியில் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பிரதமரைப் பதவி விலக்குவது வழியாகாது என்று தெரிவித்தார்.

ஹெய்ட்டி சுதந்திரம் பெற்று 200 வருடங்கள் ஆகின்றபோதும் அது இரு தடவைகள் அமெரிக்காவினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. (ம)

# புஷ் படையில் பணியாற்றிய ஆவணங்கள் வெளியிடப்பட்டன

வாஷிங்டன்,பெப்.15

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் வில்லியம் புஷ், வியட்நாம் போரின்போது தான் பணியாற்றிக்கொண்டிருந்த தேசிய பாதுகாப்புப் படையில் இருநது சொல்லிக் கொள்ளாமல் ஓடி வந்தவர் என்ற குற்றச்சாட்டுப் பரவலாக எழுப்பப்பட்டுள்ளதை அடுத்து அவர் படையில் பணியாற்றிய காலம் தொடர்பான ஆவணங்களை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.



தேசிய பாதுகாப்புப் படையில் பணியாற்றிய புஷ்

1968 முதல் 1973 வரையான காலப்பகுதிகளில் அவர் பணியாற்றியது தொடர்பான 100 பக்கங்களைக் கொண்ட ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான எந்தவித ஆதாரங்களும் இல்லை என்று கூறப்படுகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் புஷ்ஷின் பிரதான போட்டியாளராக வருவார் என்று கருதப்படும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோன் ஹெரி, இந்த விவகாரத்தில் இருந்து புஷ் தூய்மையாக வெளிவரவேண்டியது கட்டாயம் என்று வலியுறுத்தியுள்ளார்.

வியட்நாம் போருக்கு அனுப்ப ஆயத்தங்கள் நடந்தபோது, அப்போது டெக்ஸாஸ் மாநில சபை உறுப்பினராக இருந்த தனது தந்தையின் செல்வாக்கைப் பயன்படுத்தி புஷ் சொல்லாமல் கொள்ளாமல் தேசிய பாதுகாப்புப் படையில் இருந்து ஓடிவிட்டார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு: (ம)

# பொம்மைகளுக்கும் விவகாரத்து அமெரிக்க நிறுவனம் பெற்றது

லண்டன்,பெப்.15

அமெரிக்காவின் பிரபல பொம்மை தாயாரிப்பு நிறுவனம் 'பார்பி' என்ற பொம்மையைத் தயாரித்தது. இந்த அழகிய 'பார்பி' பெண் பொம்மை 1959ஆம் ஆண்டில் இருந்து மிகவும் பிரபலம் அடைந்தது. பிறகு அந்தப் பெண் பொம்மைக்கு ஜோடியாக 'கென்' என்ற இளைஞர் பொம்மையும் தயாரிக்கப்பட்டது.

'பார்பி - கென்' ஜோடியை இந்த நிறுவனம் இப்போது பிரித்து விட்டது. மனிதர்கள் விவகாரத்து செய்து கொள்வது போல இந்தப் பொம்மைகளுக்கும் விவகாரத்து வாங்கி விட்டார்கள்.

'பார்பி' பொம்மை தனியாக விற்கப்படும் .

இதேபோல் 'கென்' பொம்மையும் தனியாக விற்கப்படும்.

- என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

| | | | |
|---|---|---|---|
| வெ. | செவ். ரா. | | சனி |
| சூ. ▲ | இராசிச் சக்கரம் | | |
| புத. | | | வியா. |
| | சந். | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 15-02-2004 - 21-02-2004

### மாற்றம் :

**கேட்டை நட்சத்திரம் - வீருச்சிக இராசியில் சந்திரன் நிற்கும்.**

அரசியலில் திடீரென மாற்றங்கள் கொடுக்கும். தெற்கில் வன்முறைகளைச் சில அரசியல்வாதிகள் தூண்டுவார்கள். அரசியல் அழுத்தங்கள் அதிகரிக்கும். தெற்கில் யு.எம்.பியும் வடக்கே விடுதலைப் புலிகளின் சார்புக் கட்சியொன்றும் மக்களின செல்வாக்கைப் பெறும். சிங்களக் கட்சிகள் தமிழ்க் கட்சிகளின ஆதரவை நாடிநிற்கும் நிலை. அரசியல் அழுத்தங்கள் ஏற்படும். இந்தியாவில் வடக்கே வன்முறை தோன்றும். தெற்கே கருணாநிதியின் செல்வாக்கு அதிகரிக்கும். மத்திய கிழக்கில் அழிவுகள் தொடரும். வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றால் மழைவீழ்ச்சி திடீர் என கொடுக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

உலகத்தில் ஏமாற்றத் தெரிந்தவர்களிடம் இருந்து தப்பிக்கொள்ளவேண்டும். ஏமாற்றங்களைச் சந்தித்து வேதனைப்படுவீர்கள். சட்டத்தை மதித்து நடவுங்கள் அல்லது சட்டம் உங்களைத் தண்டித்துவிடும். தொழில்ஸ்தானத்தில் கலகலப்பாகப் பேசி நடப்பீர்கள். வீடு வாகனச்சிறப்புக் கிடைக்கும். தாயாரோடு கருத்துவேற்றுமை, உங்கள் கருத்துக்களுக்கு பிறர் உதவுவார்கள். தலைநோ, கண்கூச்சம் கொடுக்கும். நிர்வாகத்துறையினர் இரும்பு, அச்சுத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன்.*

### இடபம்

உதயத்தானவன் வெள்ளி உச்சம் பெற்றிருப்பதனால் உள்ளத்தில் உள்ள திட்டங்கள் வெள்ளம்போல வந்து உறுத்தியபடி இருக்கும். செயல்கள் வெற்றி தரும். இடமாற்றம், பிரயாணம் கொடுக்கலாம். நண்பர்கள் உதவிசெய்வார்கள். எதிர்ப்பாலாரின் அன்பு மிகும். ஆதரவு இருக்கும். வாகனசுகம் கிடைக்கும். மூத்த சகோதரம் உதவிசெய்யும். பித்தரோகம், முழங்கால் நோ இருக்கும். வைத்தியத்துறை, குருத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள் :- புதன்.*

### மிதுனம்

வாக்குவல்லமையால் காரியமாற்றுவீர்கள். பணவரவு ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் நண்பர்கள் உதவி செய்வார்கள். வீடு வாகனச்சிறப்புக் கிடைக்கும். புத்திரர், சகோதரர்களால் உதவிகள் கிடைக்கும். நாரிநோ, வாய்வுத்தொல்லை கொடுக்கும். கைகால் விறைப்பு ஏற்படும். தூர இடங்களிலிருந்து செய்திகள் நன்மை கொடுக்கும். செய்தித்துறை, அச்சுத்துறை, ரீவி, கணனித்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் :- புதன்.*

### கடகம்

அரசியலில் எதிரி நண்பராவார். நண்பர் எதிரியாவார். இதுசகஜமாகும். அரசியல்வாதிகளின் எதிர்ப்புக்கள் உங்களுக்கு வரும். பணவரவு கொடுக்கும். வீட்டில் வைத்தபொருளைத் தேடுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். புத்திரர்களுக்கு உங்கள் சகோதரங்கள் மூலம் நன்மைகள் கிடைக்கும். கால் உளைவு, சல வருத்தம் கொடுக்கும். வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள் : புதன், சனி.*

### சிங்கம்

உதயாதிபதியான சூரியன் 7 இலிருந்து தன் வீட்டைப் பார்ப்பதனால் பொருள் வரவு உண்டு. காரியபலிதமாகும். பணவரவு வரும். குடும்பத்தில் அபிப்பிராயபேதம் வரும். வீடுவாகனத்தில் சுகம், செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள் உதவுவார்கள். வயிற்றில் நோ, வாய்வுத் தொல்லை அதிகரிக்கும். இடமாற்றங்கள் ஓரளவு மனஆறுதலைத் தரும். தூரத்துச்செய்தியால் மனவேதனை அடைய இடமுண்டு. தந்தை வழியினரின் உதவிகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- புதன், சனி.*

### கன்னி

கைக்கு வந்தது வாய்க்கு எட்டாத நிலை உங்களுக்கு. கொண்டாட்டங்கள் ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் சீற்றம் மன வேதனையைத் தரும். புதிய திட்டங்கள் உருவாகி கருவாகும். பெற்றோரின் சகோதரர்களிடையே அபிப்பிராயபேதம் கொடுக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் அதிகரிக்கும். சளித்தொல்லை, வாதஉளைவு கொடுக்கும். அதிக லீவுகள் எடுத்து தொழில்ஸ்தானத்தில் பிரச்சினைப்படாதீர்கள். செய்தித்துறை, அச்சுத்துறை, வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், சனி.*

### துலாம்

வாக்குச்சாதுரியம், கலகம், தொழில்ஸ்தானத்தில் கூடிய தாக்கத்தை ஏற்படுத்துவீர்கள். உங்களைக்கண்டு மற்றவர்கள் பயப்படுவார்கள். உச்சப்பார்வையால் வெள்ளி உயர்வான காரியங்களை அதிகாரபீடத்தவரைக்கொண்டு செயற்படுத்துவார்கள். பொருள் வரவு உங்களின் சாதுரியத்தால் அதிகரிக்கும். புத்திரர்களின் கல்வியில் தேர்ச்சி வரும். தாயாருடன் அல்லது தாய்வழியினருடன் பிரச்சினைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், சனி.*

### வீருச்சிகம்

இவ்வுலகில் தெரிந்ததை விட தெரியாதது அதிகம். ஒருவரை ஒருவர் ஏமாற்றியே வாழுகின்றார்கள். பேச்சாலும், அதட்டலாலும் சிலர் ஏமாற்றி வேதனைப்படுகின்றார்கள். உங்களுக்கும் இந்த அனுபவங்கள் ஏற்படும். பதட்டப்படாமல் கருமமாற்றிச் சாதனை செய்யுங்கள். பொருள் இழப்பு ஏற்பட இடமுண்டு. தலைவருத்தம், கண்பார்வை கூச்சம், வயிற்றில் சுகவீனம் ஏற்பட இடம்முண்டு. இடமாற்றங்கள் நன்மை கொடுக்கும். வியாபாரிகளுக்கு புதிய வியாபாரத்தொடர்புகள் நன்மையைக் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், சனி.*

### தனுசு

வியாழன் தன்வீட்டைப் பார்ப்பதனால் உங்களிடம் பலர் ஆலோசனை பெறவருவர். பொருள்வரவு கொடுக்கும். நன்மையான மாற்றங்கள் கொடுக்கும். தலைவருத்தம், கால் உளைவு கொடுக்கும். புதிய திட்டங்களை உருவாக்கித் தொழில் ஸ்தானத்தில் பிறரின் பாராட்டைப் பெறுவீர்கள். அயலர்கள் உதவுவார்கள். தூரதேசச் செய்திகள் ஓரளவு மன ஆறுதலைக் கொடுக்கும். குருத்துறை, வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், சனி.*

### மகரம்

விகடப் பேச்சு விபரீதத்தை, மனத்துன்பத்தைக் கொடுக்கும். சிலருக்கு வழக்கு வரும். குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிவீர்கள். வீடு, வாகன யோகத்தை அடைவீர்கள். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். மேலதிகாரிகள் ஊக்கம் தருவர். பொருள் தவறலாம். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் கொடுக்கும். முழங்கால் பாதிப்பு கொடுக்கும். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், சனி.*

### கும்பம்

பலத்த போராட்டம். அதில் ஒரு வெற்றி மனத்தென்பைக் கொடுக்கும். புதிய உறவுகள், புதிய நண்பர்களால் உதவிகள் தேடிவரும். தொழில்ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை ஒன்று ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறப்புக்கள், உறவினர் புதியசெய்தியுடன் வருவர். நன்மைக்காகப் போராடுவதில் தவறில்லை. குற்றம் குறைகள் கேட்பீர்கள். கால்வருத்தம், சலப்பிழை, சளித்தொல்லை கொடுக்கும். குருத்துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள் : திங்கள், சனி.*

### மீனம்

உழைப்பு உறுதியான வழி விடாது தொடரும். ஊக்கமாக இருக்கவும். பணவரவு கொடுக்கும். இடமாற்றங்கள் ஏற்படலாம். உறவினர்கள் உதவி கேட்பார்கள். படிப்படியாக தொழிலில் புதிய திட்டங்களைப் புகுத்துவீர்கள். தந்தை வழியினர் உதவி செய்வர். சலவருத்தம், சளித்தொல்லை கொடுக்கும். வியாபாரிகள், கடல் தொழிலாளர், சாய்ப்புச் சாமான் வியாபாரிகளுக்கு பல முன்னேற்றங்கள் ஆதாயம் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், சனி*

**மகாதேவா ஜோதிடம்**

# எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சி போட்டியிடாது

## நேற்று நடந்த கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு,பெப்.15

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பங்குபற்றுவதில்லை என்று புதிய ஜனநாயகக் கட்சி முடிவுசெய்துள்ளது.

வாக்காளர் வாக்குச் சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்கும் போராட்டம் ஒன்றை நாடு முழுதுவதும் மேற்கொள்வது என்றும் - அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

மேற்படி கட்சியின் செயற்குழு நேற்றுக் கூடி இதுதொடர்பான முடிவுகளை எடுத்துள்ளது என்றும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் தெரிவித்தார்.

தேர்தல் குறித்து கட்சியின் செயற்குழு நேற்று விரிவாக ஆராய்ந்தது. அதன்பின் கீழ்க்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என சி.கா.செந்திவேல் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பு வருமாறு:-

எதிர்வரும் பொதுத்தேர்தல் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதில் எவ்வித அக்கறையும் காட்டாது, மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் கவனஞ்செலுத்தாது, ஐ.தே.கட்சிக்கும், சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டணிகளுக்கும் இடையிலான அதிகாரப் போட்டியை உச்சப்படுத்தி தேர்தல் நடத்தப்படவுள்ளது.

தேர்தலுக்குப் பின்னர் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை மேலும் சிக்கலாக்கும் சூழ்நிலையே ஏற்படும். அதனால், இத்தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சி பங்குபற்றாது.

அத்துடன், வாக்காளர்கள் வாக்குச் சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்க வேண்டும் என்று நாடெங்கும் பிரசாரம் செய்ய கட்சி தீர்மானிக்கிறது. - என்று அதில் உள்ளது.(எ-3)

# முல்லை நுண்கலைக் கல்லூரியில் இந்தமாதக் கலை விருந்து

யாழ்ப்பாணம்,பெப்.15

முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் பெப்ரவரி மாதக் கலை விருந்து புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரிக் கலாமுற்றத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் தற்காப்புக்கலை மாணவர்களின் வீரதீரக்கலை நிகழ்ச்சிகள், இசைப்பிரிவு மாணவ, மாணவிகளின் வாய்ப்பாட்டு நிகழ்ச்சி, தமிழிசை அரங்கு, வயலின சோலோ ஆகிய கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தமிழிசை அரங்கில் சங்கீத பூஷணம் ச.பாலசிங்கத்தின் பாட்டு இடம்பெறும் இதற்கு கலாபூஷணம் அ.ஜெயராமன் வயலினும், கலாவித்தகர் ந.சதீஸ்குமார் மிருதங்கமும் இசைப்பர்.

அ.ஜெயராமனின் வயலின் சோலோ நிகழ்வுக்கு இசைக்கலைமணி க.கண்ணதாசன் மிருதங்கமும், வித்துவான் இரா.சிவராமன் தபேலாவும், கலாவித்தகர் ந.சதீஸ்குமார் முகர்சிங்கும் இசைப்பர்.

புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியின் நடனப்பிரிவு மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. விடுதலைப் புலிகளின் பிரமுகர் க.வே.பாலகுமாரன் சமகால அரசியற் கருத்துரை வழங்குவார். (ஐ-4)

## தடகளப்போட்டி

வலி.வடக்கு.பெப்.15

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலர் க.குணராசா தலைமையில் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் செ. பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-10-86)

# சிவராத்திரி அன்று கேதீஸ்வரத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து விசேட பஸ்சேவை

யாழ்ப்பாணம்,பெப்.15

இந்துக்களின் முக்கிய விரத நாளகளில் ஒன்றான சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இம்முறையும் யாழ்ப்பாணத திலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு நேரடி பஸ் சேவை நடத்தப்படவுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்து சபையின் முகாமையாளர் எஸ்.மணிவாசகம் அறிவித்துள்ளார்.

திருக்கேதீஸ்வரத்தில் இடம்பெறும சிவராத்திரி தின பூசைகளில் பக்தர்கள் கலந்துகொள்வதற்கு வசதியாக எதிர்வரும் 17 ஆம் திகதி - சிவராத்திரிக்கு முதல்நாள் யாழ்.பஸ்நிலையத்திலிருந்து இந்த விசேட பஸ் சேவை ஆரம்பமாகவுள்ளது.

காலை 8.00 மணிக்கு முதலாவது பஸ் புறப்படும். பின்னர் நண்பகல 12 மணிவரை ஒவ்வொரு மணித்தியால இடைவெளியில் ஒவ்வொரு பஸ் வீதம் இங்கிருந்து புறப்படும்.

பக்தர்கள் இங்கிருந்து செல்லும் பஸ்களிலேயே சிவராத்திரிக்கு அடுத்த நாள் 19ஆம் திகதி அங்கிருந்து யாழ்ப்பாணம் திரும்ப முடியும் எனவும் - எஸ்.மணிவாசகம் தெரிவித்தார். (எ-4)

## நூல் அறிமுக அரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.15

புலம்பெயர்ந்து பிரிட்டனில் வாழும் ஈழத்துச் சிறுகதை ஆசிரியரான அ. இரவியின் 'காலமாகி வந்த கதை' நூல் அறிமுக அரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நாடக அரங்கியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-10)

# கொழும்புப் பல்கலை கலைப்பீடம் மூடப்பட்டது

கொழும்பு,பெப்.15

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடம் நேற்றுமுன்தினம் பிற்பகல் தொடக்கம் காலவரையறையின்றி மூடப்பட்டது.

கலைப்பீடத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாகவே கலைப்பீடத்தை மூடவேண்டிய நிலை ஏற்பட்டதாக கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஈஹெட்டி ஆராச்சி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த நிர்வாகிகள் தெரிவினைக் குழப்புவதற்கு ஒரு குழுவினர் முயற்சித்ததாகவும் -

அதனைத் தொடர்ந்தே மாணவர் குழுக்களுக்கிடையில் மோதல் வெடித்ததாகவும் கூறப்பட்டது. (எ-4)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.15

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அரச உயர் மட்டத்தினருடன் வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கத்தினர் விரைவில் நடத்தவுள்ள சந்திப்புக் குறித்து இக்கலந்துரையாடலில் ஆராயப் படவிருப்பதால் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.15

சி.சி.எஸ். கணனி நிறுவனத்தில் கணனிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கவுள்ளார்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி சு.இராசதுரையும், கௌரவ விருந்தினராக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-4)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், புதியவகை மீன் தொட்டிகள், மோட்டர்கள், அழகுப் பொருள்கள், லவ்பேட்ஸ், கூடுகள், பூக்கன்றுகள், பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (27846)

உத்தமன் சிலையடி (மில்லேன்), ஏழாலை மேற்கு, ஏழாலையிலுள்ள 2பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு.தொடர்பு: 0712 389552, 0777 311829, 2721128 (சி-33226)

மறவன்புலவுப் பகுதியில் 47 பரப்பு வயல் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0777 678324 (சி-33232)

G.N. 125 Suzuki (Japan) Dr. பாவனையிலுள்ள மோட்டார் சைக்கிள விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. N. சரவணபவன், C/o Mrs ரட்ணராஜா, வராகி அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் அல்லது Dr. சுதர்சன் 0777 570166 (28462)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயப் பாடசாலை (Farm School)இற்கு வடக்குபுறமாக வீடு கட்டுவதற்கேற்ற நல்ல சுற்றாடலில் காணிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A.தியாகராஜா, C/o. D.S.I., 13, நவீனசந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். T.P.222 7621 (28373)

## பனை மரம் விற்பனைக்கு

அனுமதிபெறப்பட்ட பனைமரங்கள விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வநாயகம், இல.5, அம்மன் கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு. (28382)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 500-தொடரிலக்கமுடைய MD 90 மோட்டார் சைக்கிள் 17 மொடல் ஆரம்ப இயந்திர நிலையில் ஒரு கைப்பாவனையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (28482)

## நாய்க்குட்டி விற்பனை

சுத்தமான Dobermann Pincher ( 6 மாதம் நிரம்பியது) நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), இல.19 முருகேசர் ஒழுங்கை, (முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(25483)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

தங்கலிங்கம் தாக்சாயினி என்பவரது அடையாள அட்டைகள் அடங்கிய கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுளளது. உரியவர்கள் லிங்கன் கிறீம் ஹவுஸ், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும். (28472)

## திருமண சேவை

1971, புரட்டாதி, செவ்வாய் 2, B.Sc. Lecturer இற்கு உத்தியோக கௌரவ குடும்ப மணமகன் தேவை. தொடர்புகளுக்கு துரைவிமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (28403)

1976, செவ்வாயற்ற, பூரட்டாதி நட்சத்திர Business Management U.K. Accountant இற்கு CIMA துறையில் படித்த, அழகான மணப்பெண் தேவை. Sponser உண்டு. கொழும்பு/U.K. விரும்பத்தக்கது. தொடர்பு: துரைவிமலா திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (28449)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த வயது 29, லக்கினத்தில் செவ்வாய், கொழும்பில் சொந்த ஸ்தாபனத்தில் வர்த்தகம் புரியும் மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. தொடர்பு: G.புஸ்பராஜா, 3/11, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் T.P.077 6231006(28171)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 37 வயது, உத்தராடம் 4, லக்கினத்தில் செவ்வாய், கிரகபாவம 12, விவாகரத்துப்பெற்ற, படித்த பிரஜாவுரிமை பெற்று கனடாவில் பெற்றோருடன் வசிக்கும் மணமகனுக்கு நற்பண்புள்ள 34 வயதுக்குட்பட்ட படித்த மணமகள் தேவை. குறிப்பு, ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். பொ.இராமலிங்கம், 18, ஆலங்குளாய் வீதி, சண்டிலிப்பாய். (28480)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970 இல் பிறந்த, சித்திரை நட்சத்திரம், 7 இல் செவ்வாயுள்ள, சொந்தமாக வியாபாரம் செய்யும் மணமகனுக்கு நற்குணமுள்ள குடும்பப்பாங்கான மணமகள் உள்ளூரில் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2166 C/o உதயன்.(28484)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 141, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (வைரவர் கோயிலடி). 077-6016257, 0777-243028. (28406)

## மணமக்கள் தேவை

எம்மிடம் டாக்டர், எஞ்சினியர், அரச - தனியார்துறை சார்ந்த வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற நல்ல பணியில் இருக்கும் (தோசமுள்ள, தோசமற்ற) மணமக்களின் ஜாதகங்கள் உண்டு. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், ஸ்ரீ வைகுநதவாசன் ஆச்சிரமம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (28443)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெறறுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28483)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள 40/=, அதிவிஷேட பேட்டுக் குஞ்சுகள சிவப்பு/வெள்ளை 60/= 16-02-2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பதிவுசெய்யலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28202)

## தபால் மூலம் ஆங்கிலம்/சிங்களம்

மேற்படி மொழிகளை வீட்டிலிருந்தே நீங்கள் படிக்கலாம். தெளிவான தமிழ விளக்கங்களுடன், வழமையான மேற்படி வகுப்புகளும் உண்டு. இன்றே எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள். தொடர்பிற்கு வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான, 56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (28296)

## காணவில்லை

எனது வளர்ப்பு மைனாவை மூன்று மாதமாகக் காணவில்லை. நன்கு கதைக்கக்கூடியது. எனது வீட்டு சுற்றாடலில் எங்காவது காணப்பட்டால் கண்டுபிடித்து தருபவர்களுக்கு அல்லது தகவல் தருபவர்களுக்கு மைனாவைக் கைப்பற்றியவுடன் ரூபா 5000/- சன்மானமாக வழங்கப்படும். தொடர்பு: கிருஸ்ணானந்தம் (பவுண்), அலுக்கை, அளவெட்டி (சூசையப்பர் கோவில் முன்பாக). (28478)

## விண்ணப்பிக்கலாம்

ஆற்றுப்படுத்தல் கலையில் பயிற்சிபெற்று வேலை எதிர்பார்ப்பவர்களும் - இக்கலையை கற்க விரும்புவர்களும் 21-02-2004ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும முகவரி:

பொறுப்பாளர்
ICOF நிலையம்
வளர்பிறை
இல.5, பிளச்சர்ஸ் லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(28486)

# பரத நாட்டிய அரங்கேற்றம்



கொக்குவில் கலாபவன நடன ஆசிரியை
திருமதி சாந்தினி சிவநேசனின்
மாணவியும் திரு. திருமதி புலவர்
தம்பதிகளின் புதல்வியுமான

## செல்வி சோபனா புலவர்

அவர்களின்
பரத நாட்டிய அரங்கேற்றம்

காலம்:இன்று (15.02-2004) ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணி.
இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்.

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் திரு.சு.மோகனதாஸ்
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

புலவர் வீடியோ
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

திருமதி ஜெயவதி புலவர்,
றஸீஸ், ரஞ்சித், ரமேஸ்.
(சகோதரர்கள்)

(28461)(41-14-19)

# புகைப்படங்கள் தேவை

அடியேன் லண்டனில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில் "இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்" என்ற தலையங்கத்தில் சில தொடர் கட்டுரைகளை எழுதி வருகிறேன்.

அதிலே யான் தொடர்பு கொண்டிருந்த சில தமிழ்ச் சான்றோர் வரலாறுகளும் வருகின்றன. இதனை விரைவில் நூலாக்க விரும்புகிறேன். சில சான்றோர்களுடைய புகைப்படங்கள் சிறப்பாகத் தேவைப்படுகின்றன. அவற்றைக் கைவசம் வைத்திருப்போர் எனக்கு அனுப்பி வைத்தால் மிக்க நன்றியாயிருப்பதுடன் அவற்றுக்கான பெறுமதியையும் தவறாது அனுப்பி வைப்பேன் என்பதையும் அறியத் தருகிறேன்.

புலவர்மணி - இளவாலை அமுது

1. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள்
2. புலவர்மணி பண்டிதர் சோ.இளமுருகனார்
3. வித்துவான் க.வேந்தனார்
4. வித்துவ சிரோமணி ந.சுப்பையாபிள்ளை (நாவலர் பாடசாலை)
5. பேராசிரியர் வி.செல்வநாயகம் (பேராதனை)
6. பேராசிரியர் சு.வித்தியானந்தன்
7. பண்டிதர் ச.பொன்னுத்துரை (ஆசிரியர் சங்கத் தலைவர்)

புகைப்படம் அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:
திருமதி இராசேஸ்வரி ஜெயசிங்கம்
இல.36, அன்னம்மா வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(34-21-14-16) (28322)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 07 1931



மறைவு 25 02 2003

## திருமதி நடராசா பரமேஸ்வரி

அன்புடனும், பண்புடனும் வாழ்ந்த உத்தமியே
எந்நாளும் உம் நினைவு எங்களை விட்டகலாது.
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

இன்று (15.02.2004) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆண்டுத்திவஷக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நிரந்தர முகவரி:-*
யாழ்.வீதி,
பலாலி வடக்கு, பலாலி
*தற்காலிக முகவரி:-*
மீசாலை வடக்கு,
வேம்பிராய். (28479)

கணவர்: நடராசா.
பிள்ளைகள்: தர்மராணி, புஸ்பராணி, விஜயராணி, விஜயராசா,
அப்பன், பாபு, கோபு, வசந்தி, மஞ்சு,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(21-37-14-16)

# மரண அறிவித்தல்

## செல்லப்பா முத்தையா

நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா முத்தையா நேற்று (14.02.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் (வேவி) அன்புக் கணவரும் அமுதமலரின் (ரதி) அன்புத் தந்தையும் அன்ரனி யோசப்பின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-02-2004) ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
அன்ரனி யோசப்
(மருமகன்)

*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.*

(28488)(37-21-14-16)

உதயன்

## சிந்திக்க வேண்டிய தருணம் இது!

மக்கள் விரும்புகிறார்களோ இல்லையோ தேர்தல் ஒன்று அவர்கள் மீது திணிக்கப்பட்டுவிட்டது.

2000ஆம் ஆண்டு மற்றும் 2001ஆம் ஆண்டில் நடந்த தேர்தல்களோடு ஒப்பிடுகையில் இந்தத் தேர்தலுக்கான அரசியல் சூழ்நிலையும், கள நிலையும் வேறானவை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, குறிப்பாகக் குடா நாட்டு மக்களைப் பொறுத்தவரை இம்முறை தேர்தலுக்கான புறச்சூழ்நிலையும் அரசியல் பரிமாணங்களும் முன்னைய தேர்தல்களோடு ஒப்பிடும்போது முற்றிலும் வித்தியாசமானவை.

உரிமைக்கான ஆயுத வழி விடுதலைப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. அமைதி வழியில் - சமாதான முறையில் - இணக்கத் தீர்வு ஒன்றைக்காணும் முயற்சிகள் சர்வதேச சமூகத்தின் ஆசியோடு முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த முயற்சிகள் இப்போது தடைப்பட்டு நின்றாலும் அதை மீள ஆரம்பிக்கும்போது ஈழத்தமிழரின் ஏகபிரதிநிதிகளாக - அதிகாரபூர்வ பிரதிநிதிகளாக- அதில் பங்குபற்றப்போகிறவர்கள் விடுதலைப் புலிகளே.

ஆயுத வழியில் மட்டுமல்லாமல் அரசியல் மட்டத்திலும் பலம்பெற்ற சக்தியாக நிற்கும் புலிகளின் நிலையை ஜனநாயக விழுமியங்கள் ஊடாகவும் வலுப்படுத்த வேண்டிய ஒரு பொறுப்பு ஈழத்தமிழ்ச் சமூகத்துக்கு உண்டு.

இன்றைய நிலையில் ஈழத்தமிழருக்கு உரிய நியாயமான உரிமைகளை இராணுவ ரீதியான வழியிலோ, அமைதிப் பேச்சு மார்க்கத்திலோ, எப்படிப் பெறுவது என்றாலும் அதை முன்னெடுக்கக்கூடிய வலுவும், சக்தியும், திறனும், அதிகாரமும், தார்மீக உரிமையும் தமிழர் தரப்பில் புலிகளிடமே இருக்கின்றது.

இராணுவ ரீதியில் அசைக்க முடியாத சக்தி என்ற உறுதி மட்டுமல்லாமல் ஈழத்தமிழரின் சார்பில் பேச்சு மேசையில் பேரம்பேசும் பலமும் புலிகளிடம்தான் உள்ளது.

அந்த வலுவை மேலும் உறுதிப்படுத்தி, புலிகளின் பலத்தை மேலும் உயிர்ப்பூட்டும் வாய்ப்பாக இத்தேர்தலை தமிழ்மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தேர்தலில் தமிழரின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படப்போகின்றவர்கள் தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற தகுதியையும் உரிமையையும் பெறுவார்கள் என்பது தெரிந்தது தான். ஆனால், அதற்கு அப்பால் முக்கிய அதிகாரம் ஒன்றும் அவர்களுக்குக் கிடைக்கப்போகின்றது.

தென்னிலங்கையை ஆளப்போகின்ற சக்தி எது என்பதை முடிவெடுக்கின்ற பொறுப்பும் அவர்களுக்குக் கிட்டும் சந்தர்ப்பம் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

ஈழத் தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்திசெய்கின்ற உரிமைகள் வழங்கப்படக்கூடாது என்று குரலெழுப்புகின்ற பேரினவாத சக்திகள் தென்னிலங்கையில் ஒன்று திரண்டுள்ளன. அமைதித் தீர்வுக்கான சமாதான நடவடிக்கைகளைத் தொடரவிடாமல் தடுத்து, அந்த முயற்சியில் ஈடுபட்ட ஐ.தே. முன்னணி அரசை வீட்டுக்கு அனுப்பி, பேரினவாதம் தெற்கில் கிளர்ந்து நிற்கிறது.

இச்சமயத்தில், விடுதலைப் புலிகள் கூறுவது போல யுத்தமா? சமாதானமா? என்ற முடிவைத் தீர்மானிக்கின்ற பொறுப்பு இத்தேர்தலில் சிங்கப் பெரும்பான்மை மக்களிடம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இவ்வேளையில், ஈழத்தமிழர்கள் தங்கள் ஏகபிரதிநிதித்துவத்தை வாக்குகள் மூலமும் உறுதிப்படுத்த வேண்டும். அத்தோடு, தென்னிலங்கையில் தேர்தல் மூலம் வெளிப்படுகின்ற அமைதியை - சமாதானத்தை விரும்புகின்ற - சக்திகளைத் தேர்தலின் பின் பலப்படுத்தவும் வேண்டும்.

இந்த இரண்டையும் நிறைவேற்றுவதற்கு ஈழத்தமிழர் தரப்பில் முதலில் அவசியமானது ஐக்கியம்.

அதை உறுதியாக வெளிப்படுத்துவதற்கு ஒரு புறம் ஐக்கியமாக நிற்கும் சக்திகளை வலுப்படுத்தவேண்டும். மறுபுறம் ஐக்கியத்தைக் குழப்பும் சக்திகளை நிராகரித்து ஒதுக்கவேண்டும்.

ஆளுங்கட்சிச் சாயம் வெளுத்துவிட்டதால் உள்ளூர் பிரமுகர்கள் சிலருக்குத் தலைப்பாகை கட்டிக்கொண்டு களத்துக்கு அழைத்துவர ஓரணி தயாராகி வருவதாகத் தகவல்.

சிங்களப் பேரினவாதக் கூட்டுக்கு முண்டுகொடுக்கும் அணியும் வழமையான பாணியில் களத்துக்குப் புறப்படத் தயாராகிவிட்டது.

இதைவிட, கூட்டுக்கு வேட்டுவைத்த - வைக்கும்- சாங்கதிகள் நிறைந்த அணி ஒரு புறம்.

இதில் முதலாவது அணிக்குத் தென்னிலங்கை அரசியல் மற்றும் பலங்கள் முண்டுகொடுக்கும்.

மற்றைய இரு அணிகளுக்கும் பேரினவாத சக்திகள் மட்டுமல்லாமல் அயல் சக்திகளும் நிதியையும் மற்றும் படை பல வலுவையும் வாரி வழங்கத் தயாராகிவிட்டன என்று பரவலாகப் பேசப்படுகிறது.

இந்தச் சக்திகளை அடையாளங்கண்டு அவற்றை அரசியலில் இருந்து புறந்தள்ளி விடுவதன்மூலமே ஈழத் தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை ஒரே குரலில் ஒலிக்க வழிபிறக்கும் - ஸ்திரப்படுத்தவும் முடியும்.

ஐக்கியம் விரும்பும் தமிழர் தரப்பு அதிகமாக சிந்திக்க வேண்டிய தருணம் இது.

# காவல்துறை சீர்திருத்தப் பிரிவை செஞ்.அதிகாரிகள் பார்வையிட்டனர்



கிளிநொச்சி,பெப்.15

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் உள்ள தமிழீழ காவல்துறை சீர்திருத்தப்பிரிவை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் கடந்த 11ஆம், 12ஆம் திகதிகளில் பார்வையிட்டனர். அங்கு வைக்கப்பட்டுள்ள கைதிகளை தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினர். கைதிகள் தடுத்து வைக்கப்பட்ட இடங்களின் சூழ்நிலையை அவர்கள் ஆராய்ந்தனர்.

அதன்பின்னர், தமிழீழ காவற்துறையின் சீர்திருத்தத்துறைப் பொறுப்பாளர் சொ.நரேன், ஆனந்தபுரம் சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பதிகாரி பரிசோதகர் சசி, மக்கள் தொடர்பு அதிகாரி உப-பரிசோதகர் ஞானமுத்து ஆகியோருடன் செஞ்சிலுவை அதிகாரிகள கலந்துரையாடினர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் புதுக்குடியிருப்பு வதிவிடப்பிரதிநிதி ஸ்ரவியர் கோப்போரியோ, மல்லாவி வதிவிடப் பிரதிநிதி பமிலா, கொழும்பு வெளிக்கள அலுவலர் டங்கன் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

சீர்திருத்தப்பணியின் அபிவிருத்தி குறித்தும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. அங்கு எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

(ஐ-3)

# உடனடிப் பொதுத்தேர்தல் குறித்து சர்வதேச நிறுவனம் பெரும் அதிருப்தி

கொழும்பு,பெப்.15

அவரசமாகப் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பது குறித்து கொழும்பில் செயற்படும் டிரான்ஸ் பேரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம் பெரும் அதிருப்தி தெரிவித்துள்ளது.

அவசரப் பொதுத்தேர்தலால் தற்போது எதனையும் காண முடியாது என்றும் - அந்த அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

இது விடயமாக மேற்படி நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

இலங்கை ஜனாதிபதியினால் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி அவசர பொதுத்தேர்தல் ஒன்றிற்கு அழைப்பு விடுத்ததைப்பற்றி இலங்கை டிரான்ஸ் பேரன்ஸி நிறுவனம் தனது அதிர்ச்சியைத் தெரிவிக்கின்றது.

4 வருடத்திற்குள் 3 முறை தேர்தல் நடைபெறுவதால் மக்களின் பொருளாதாரச் செலவுகள் நியாயமற்ற முறையில் விரயமாக்கப்படுவதால், இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம் பற்றி இந்நிறுவனம் பொதுமக்களுக்கு ஞாபகம் ஊட்ட விரும்புகின்றது. ஜனநாயகமான தேர்தற் செயற்பாடுகள் மிக நுணுக்கமாகக் கவனிக்கப்படல் வேண்டும்.

குறுகிய அரசியல் இலாபத்திற்காக இதைப் பயன்படுத்தக்கூடாதென இலங்கை டிரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நிறுவனம் திடமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றது. சிறந்த அரச நிர்வாகத்திறமை, தேசிய பொருளாதாரம் உட்பட இந்நாட்டின் அனைத்து வளங்களையும் பாதுகாக்கத் தகுந்த அரசியல் தீர்வுகாண வேண்டியது மிகமிக அவசியமாகும்.

தேர்தல் செயற்பாடுகளை முறையற்ற வழியில் பயன்படுத்துவதால், இந்நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்படும் விளைவுகளைக் கணிப்பீடு செய்ய இயலாது. எனவே, அவசரமான தேர்தல் ஒன்றை நடத்துவதில் எவ்விதமான நியாயமான காரணங்களும் இல்லை என்பது தெட்டத்தெளிவாக விளங்குகின்றது எனபது எமது நம்பிக்கையாகும்.

எவ்வாறாயினும், எதிர்வரும் பொதுத் தேர்தலின் பொழுது தேர்தல் பணிகளைப் பொறுப்புடன் செயற்படுத்துமாறு ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சகல அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுப்பதுடன், இலங்கை டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நேஷனல் நிறுவனம் நிதானத்துடனும், பொறுப்புடனும் நடந்துகொள்ளுமாறு இச்சந்தர்ப்பத்தில் அனைத்து வேட்பாளர்களையும், பொதுமக்களையும் கேட்டுக் கொள்கின்றது.

தேர்தல் நடத்துவதற்கு பங்காற்றும் அனைத்து அரச நிறுவனங்களும், தங்களின் புனிதமான கடமைகளைத் திறமையாகவும், தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைய அச்சமின்றி அலலது பாரபட்சமின்றி நிறைவேற்ற வேண்டும் என்றும் எமது நிறுவனம் அன்புடன் வேண்டுகின்றது. அவ்வாறே சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணையாளருக்கு உதவுமாறு காவல்துறையினர், பாதுகாப்புப்படையினர் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம் - என்று அதில் உள்ளது.

(எ)

## மூளாய் ஆஸ்பத்திரி கட்டடப் பணிகள் பூர்த்தியாகி வருகின்றன

யாழ்ப்பாணம்,பெப்.15

வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் மூளாய கூட்டுறவு வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வந்த கட்டடப் புனர்நிர்மாணப் பணிகள் அனேகமாக பூர்த்தியாகக்கப்பட்டுள்ளன.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் மேற்படி ஆஸ்பத்திரி பலத்த சேதமடைந்திருந்தது என்றும் -

புனர்நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதை அடுத்து, வைத்திய நிபுணர்களின் உதவியுடன் அப்பகுதி மக்களுக்கு சிறந்த வைத்திய சேவையை வழங்க வைத்தியசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வைத்தியசாலையில் 24 மணிநேர வைத்திய சேவை, நோயாளர் விடுதி, வைத்திய நிபுணர் சேவை, ஆய்வு கூட வசதி, ஈ.சி.ஜீ., 'ஸ்கானிங்' வசதிகள் ஆகியன விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று மேற்படி கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (எ-8-150)

## புனரமைத்த 4 குளங்கள் பாவனைக்குக் கையளிப்பு

முல்லைத்தீவு,பெப்.15

முல்லைத்தீவு மாவட்டத்தில் 'நியாப்' திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட 4 குளங்கள் கடந்த வியாழன் அன்று பாவனைக்கு கையளிக்கப்பட்டன.

சேனா முறிப்புக்குளம் காஞ்சமோட்டைக்குளம், மருதமடுக்குளம், இடைக்காட்டுக்குளம் ஆகியனவே இவ்வாறு புனரமைப்புச செய்யப்பட்டன.

இந்தக் குளங்களைப் பாவனைக்காகக் கையளிக்கும் வைபவம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட 'நியாப்' திட்டப் பணிப்பாளர் ரி.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் தமிழீழ தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு ஏற்றிவைத்தார்.

முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நீர்ப்பாசனப் பிரிவுப் பொறுப்பாளர் முல்லைவீரன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினார். (ஐ-4)

## சமுர்த்தி வங்கிக்கு யாழ். கிழக்கில் கட்டடம் விரைவில் நிறுவப்படும்

கொழும்புத்துறை,பெப்.15

யாழ்.நகர் கிழக்கு வலய சமுர்த்தி செயலணியின் சமுர்த்தி வங்கிக்கென புதிதாக கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்தை நிறுவுவதற்கான காணி தற்போது யாழ்.பிரதேச செயலகம் இயங்கிவரும் பகுதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று வலய சமுர்த்தி முகாமையாளர் பி.கியூமன் தெரிவித்தார்.

மேற்படி இடத்தைத் துப்புரவு செய்யும் பணிகள் நேற்று சனிக்கிழமை நடைபெற்றன என்றும்- அவர் கூறினார். கட்டடப்பணிகளை மூன்று மாத காலத்திற்குள் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-30)

### நாளை

மாசி 4
திங்கட்கிழமை
(16.02.2004)
திதி: ஏகாதசி
இரவு 10.19வரை
நட்சத்திரம்: மூலம்
இரவு 6.46 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம்:12.33-2.03
ராகுகாலம்:8.03-9.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உன்னுடைய பகைவன் உன் இதயத்திலே உள்ளான்.

## பொதுத்தேர்தல் நடக்கும் வரை நியமனம் எதுவும் வழங்காதீர்

### அமைச்சுச் செயலாளர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு,பெப்.15

பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள ஏப்ரல் 2ஆம் திகதி வரை அரசதுறைகளில் புதிய நியமனங்களையும், பதவி உயர்வுகளையும் வழங்க வேண்டாம் என்று சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இக்காலப் பகுதியில் புதிய நியமனங்களோ, பதவி உயர்வுகளோ வழங்கப்பட்டிருந்தால் அவை அனைத்தும் செல்லுபடியாகாது என்றும் ஜனாதிபதி செயலகம் அறிவித்திருக்கிறது.

இதுதொடர்பான அறிவித்தலை ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அவரது செயலாளர் டபிள்யூ ஜே.எஸ். கருணாரத்ன சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அமைச்சரவை அல்லது அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இக்காலப் பகுதியில் புதிய நியமனங்களோ அல்லது பதவி உயர்வுகளோ வழங்கப்பட்டிருந்தால் அவைபற்றி ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும் வரை அந்த நியமனங்கள் செல்லுபடியாகும் எனவும் - அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## மெய்வன்மைப் போட்டிகள்

வடமராட்சி கிழக்கு,பெப்.15

பருத்தித்துறை சித்திவி[illegible]யகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிறுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய அதிபர் மு.சிறீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப பாளர் எஸ்நந்தகுமார் கலந்துகொள்ள வுள்ளார். திருமதி யமுனா நந்தகுமா பரிசில்களை வழங்குவார்.(ஐ-182)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.15

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப போட்டி நாளை திங்கட்கிழமை பி.ப. 1.45 மணிக்கு அதிபர் ச.கைலாசநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்துகொள்ளவுளளார். (ஐ-10-28-29)

★ ★ ★

தென்மராட்சி,பெப்.15

பளை அரச்கேணியில் இயங்கும கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ கலவன் பாடசாலை, முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை ஆகியவற்றின் இல்லமெய் வன்மைப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை அதிபர் சூ.அகஸ்ரின் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பளைக் கோட்டக் கல்வி அலுவலா இ.கயிலாயபிள்ளை கலந்துகொள்வார். (ஐ-10-117)

★ ★ ★

வடமராட்சி கிழக்கு,பெப்.15

கேவில் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை அதிபர் தி.வ.நின்மதிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் கலந்துகொள்வார்.

சிறப்புவிருந்தினராக வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயகன் பங்குபற்றுவார். (ஐ-182)

★ ★ ★

வடமராட்சி கிழக்கு,பெப்.15

செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் செவ்வாய்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் சி.ஜெயந்திரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதனும், சிறப்பு விருந்தினராக தாளையடி பங்குத் தந்தை வண.பிதா ம.பிரான்சிஸ் அடிகளாரும், கௌரவ விருந்தினராக வடமராட்சிக் கல்விக் கழகப பொறுப்பாளர் கி.தாயகனும் கலந்துகொள்வர். (ஐ-182)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.15

கொட்டடி நமசிவாய வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் செவ்வாய்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சு.நடராஜலிங்கம் தலைமையில் கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-10)

★ ★ ★

தென்மராட்சி,பெப்.15

இயக்கச்சி முகாவில் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை அதிபர் வ.ஜீவரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கலந்துகொள்வார். (ஐ-10-117)

★ ★ ★

மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை இல்ல மெயவன்மைப்போட்டி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விவலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கலந்துகொள்வார்.(10-117)

★ ★ ★

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன வித்தியாலய வருடாந்த இல்ல மெயவன்மைப்போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி சரோஜினி வேதநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-10)


## பராமரிப்பு மேற்பார்வை அலுவலர்

அலுவலகப் பராமரிப்பு, சுகாதாரம் பேணல் மற்றும் அவை சார்ந்த பணிகளில் ஈடுபடுவோரை மேற்பார்வை செய்வதில் அனுபவமும் போதிய தகைமைகளும் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கட்டடப் பராமரிப்புச் சார்ந்த துறைகளில் தொழில்நுட்ப அறிவுடையோருக்கும் யாழ். நகரிலோ அதனை அண்டிய பகுதிகளிலோ வதிபவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

தொழில் அனுபவச் சான்றிதழ்கள், உறவினர் அல்லாத இரண்டு பிரமுகர்களிடம் இருந்து அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்களுடன் பெப்ரவரி 22 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

*சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.*

**உதயன் மனிதவளசேவை**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/33263)(34-21-14-16)

## கணனி வேலைதெரிந்த ஆள் தேவை

கணனி விற்பனை நிலையம் ஒன்றிற்கு
**HARDWARE/ SOFTWARE** தெரிந்த அனுபவமும்
ஆங்கில அறிவுமுள்ள 30 வயதுக்குட்பட்டவர் (ஆண்) தேவை.
25.02.2004 இற்கு முன் சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல. 2165**
**C/O - உதயன், யாழ்ப்பாணம்.**

(C/33251) (12-21-14-16)

*நீங்கள்,*
நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா? இதோ உடன் நிவாரணி

## "மதுமேகரணி"
**"MADHUMEAHAHARANEE"**

இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில அறிந்துகொள்ளலாம்.
உங்கள் அண்மையில் உள்ள சித்தஆயுர்வேத டாக்டரிடம் ஆலோசித்துப் பாவிக்கவும்.
இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு
யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்
**சிவா நறுமணப்பூங்கா**
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம.

SRI LANKA AYURVEDIC-CORPORATION
PO BOX 20 NAWINNA
MAHARAGAMA.

(21-14-16) *குறிப்பு:* சத்திரச்சந்திக்கு அருகில் (33077)

# அருணலு

## பெறுமதிமிக்க பரிசில்களை 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

உங்களுடைய பிள்ளை புலமைப்பரீட்சையில் சித்தியெய்தி அதிகப்படியான புள்ளிகளை 1ம், 2ம் அல்லது 3ம் இடத்தில் அவருடைய பாடசாலையில் பெற்றிருப்பதுடன் பரீட்சை எழுதும் போது அவரது அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியாக இருந்திருந்தால், உங்களுக்கு எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நீங்கள் அருணலு கணக்கு வைத்திருக்கும் கொமர்ஷல் வங்கி கிளைக்கு பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சென்று பெறுமதிமிக்க பணப்பரிசுகளை தட்டிக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அருணலு கணக்கு திறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையவில்லையா?

கொமர்ஷல் வங்கியின் அருணலு - ஒளிமயமான எதிர்காலத்தை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

**கொமர்ஷல் வங்கி**
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SSCB INTERNATIONAL

care

# உலர் வலய விவசாய அபிவிருத்திக் கருத்திட்டம் (DZADP)

# மன்னார் பிரதேச அலுவலகம்

கெயர் இன்டர்நெஷனல் இலங்கையில் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளதோர் அரசசார்பற்ற ஸ்தாபனமாகும். பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தல் மற்றும் சமூகத்தில் பின்தள்ளப்படுதல் போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்குவது ஆகியவற்றில் அது மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

உலர் வலய விவசாய அபிவிருத்திக் கருத்திட்டம் உலர் வலயத்தைச் சார்ந்த சிறிய அளவிலான விவசாயக் குடும்பங்கள் ஸ்திரமாகத் தம் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்த உதவுவதில் ஈடுபட்டுள்ளது. இக்கருத்திட்டம் பெண்கள் மற்றும் இளம் வயதினரை அரவணைப்பதில் விசேட கவனம் செலுத்துவதோடு சம்பந்தப்பட்ட இலங்கை அரச நிறுவனங்கள் மற்றும் பிரதேச அரசசார்பற்ற ஸ்தாபனங்களோடு இணைந்து செயற்படுகிறது. DZADP கருத்திட்டத்துக்கு ஐரோப்பிய சங்கம் நிதி வழங்குகிறது.

இக்கருத்திட்டம் அநுராதபுரம், மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய பெரும்பாகங்களில் 2000ஆம் ஆண்டு தொடக்கம் மும்முரமாகச் செயற்பட்டுவருகிறது. தற்போதுள்ள செயற்பாட்டைப் பலப்படுத்தவும் 2005 வரை அதன் நோக்கங்களை அடைவதில் உதவுவதற்காகவும் பின்வரும் ஆளணியினர் எமக்குத் தேவைப்படுகின்றனர்.

## குழுத் தலைவர்:

முழுக்கருத்திட்டத்தையும் பொதுவாகத் திட்டமிட்டுச் செயற்படுத்துவது முதல் மன்னார் மாவட்டத்தில் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல் ஆகியவற்றுக்குக் குழுத் தலைவர் பொறுப்பாகவிருப்பார். பெரும்பாகத்தில் DZADP இன் பெறுபேறுகளை எய்துவதற்காகக் குழுத் தலைவர் 8 வேலைத்திட்ட மற்றும் 3 துணை ஆளணியினருக்குத் தலைமை தாங்குவார்.

அவள் அல்லது அவர் கருத்திட்ட நோக்க அமைப்புக்குள் விளக்கப்பட்ட கருத்திட்டத் தாக்கங்களுக்குப் பொறுப்புதாரியாக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரதான சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடி பெரும்பாக மட்டத்தில் இணைந்த ஆண்டுச் செயற்றிட்டத்தைத் தயாரிப்பது குழுத் தலைவரின் பொறுப்பாகும். அத்துடன், குடும்ப அமைப்புக்கள், வியாபார அபிவிருத்தி மற்றும் ஸ்தாபன ரீதியிலான அபிவிருத்தி/ஸ்தாபனத்தை ஸ்திரப்படுத்தல் மற்றும் நீர் வளங்களின் முகாமைத்துவம் போன்ற முக்கிய கருத்திட்ட அம்சங்களைப் பயனுறு விதத்தில் இணைத்துச் செயற்படுத்துவதற்கும் அவர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

அவள் அல்லது அவர் கருத்திட்டத்தின் மனித மற்றும் நிதி வளங்கள் முறையாக முகாமைப்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதோடு இவ்விடயங்கள் பற்றி மன்னார் கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு அவை பற்றிய அறிக்கை விடுக்கவேண்டும்.

குறைந்த பட்சம் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றில் ஐந்து வருட முகாமைத்துவ அனுபவமுள்ள விவசாய அல்லது முகாமைத்துவப் பட்டதாரிகள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## கருத்திட்ட இணைப்பாளர் - ஸ்தாபன ரீதியிலான அபிவிருத்தி/ஸ்தாபனத்தை ஸ்திரப்படுத்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி குழுத் தலைவரின் மேற்பார்வையின் கீழ் ஸ்தாபன அபிவிருத்தி / ஸ்தாபன ஸ்திரப்படுத்தல் (ID/OS) செயற்பாட்டுத் திட்டமொன்றை தேவைகளின் பகுப்பாய்வுக்கமைய அபிவிருத்தி செய்வதற்குப் பொறுப்பாகவிருப்பார்.

(ID/OS) துறையின் நோக்கங்களை அடைவதில் பாலியல் சமத்துவத்துக்கு விசேட கவனம் செலுத்தல், சம்பந்தப்பட்டோருடன் இணைந்து செயற்படுதல், பங்குதார ஸ்தாபனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல் மற்றும் பயிற்சித் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும் திறமை விண்ணப்பதாரிகளுக்கு இருத்தல் வேண்டும். ஆங்கிலப் பாசைப் பாண்டித்தியம் அத்துடன், பகுப்பாய்வு மற்றும் பயிற்சித் திறமைகள் இதற்கான முற்தேவைகளாகும்.

(ID/OS) நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 3 வருட அனுபவம் உள்ள சமூகவியல் பட்டதாரிகள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## கருத்திட்ட இணைப்பாளர் - விவசாய அமைப்புக்கள்:

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரி தேவைகள் மதிப்பீடு மற்றும் செயற்படுத்துவதற்காக விவசாயத்திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவிருப்பார். குறைந்த அளவில் புறத் தொழில்நுட்ப உட்பாய்ச்சல் மற்றும் கலந்துகொள்ளக்கூடிய தொழில்நுட்ப அபிவிருத்தி ஆகியவற்றுக்கு விசேட கவனஞ்செலுத்தி விவசாயத்துறையில் நோக்கங்களை இனங்கண்டு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல். அவள் அல்லது அவர் பின்னலமைப்பொன்றைக் கொண்டு பங்குதாரர்களுடன் / புற ஸ்தாபனங்களுடன் இணைப்புக்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதோடு பயிற்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்கவேண்டும்.

உலர் வலய விவசாயத் திட்டங்களில் குறைந்த பட்சம் 3 வருட நேரடி அனுபவமுள்ள விவசாயத்துறையில் பட்டம் அல்லது டிப்ளோமா உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## கருத்திட்ட இணைப்பாளர் - வியாபார அபிவிருத்தி

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரி தேவைகள் மதிப்பீட்டை நடத்தல் மற்றும் செயற்படுத்துவதற்கான வியாபாரத் திட்ட அபிவிருத்தி ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவிருப்பார். ஆராய்ச்சி மற்றும் சந்தை புலனாய்வுகளுக்கான திட்டமொன்று இனங்காணப்பட்டு அமைக்கப்படவேண்டும். சம்பந்தப்பட்டோரை ஒன்றுதிரட்டி உள்ளக மற்றும் புறத் தொடர்புகளை ஏற்படுத்தல், வியாபாரத்திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல், பயிற்சித் திட்டங்கள் மற்றும் அமைப்புக்களைத் தயாரித்து பயிற்சி நெறிகளை நடத்துதல், செயற்பாடுகள் மற்றும் பெறுமதி கூட்டல் ஆகியவற்றுக்கான அமைப்புக்களை ஏற்படுத்தல். துறைகளைக் கண்காணிப்பதை உறுதிப்படுத்தி சீர்தூக்கிப் பார்க்கும் திட்டமொன்றை அமுல் செய்தல்.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 5 வருட அனுபவமுள்ள விவசாயப் பொருளாதாரம் அல்லது வியாபார பரிபாலனம் ஆகியவற்றில் பட்டம் அல்லது டிப்ளோமா உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## கருத்திட்ட இணைப்பாளர் - நீர் வளங்கள் முகாமைத்துவம்

மன்னார் பெரும்பாகத்தில் நீர் வளங்கள் முகாமைத்துவ அம்சத்தின் தொடர்ச்சியான அமுலாக்கத்துக்கு நீர் வளங்கள் முகாமைத்துவத் துறை இணைப்பாளர் பொறுப்பாக இருப்பார்.

அவள் அல்லது அவர் கருத்திட்டத்தின் ஆதரவுடன் பிரதேச சமூகங்களின் குளங்கள் புனரமைப்பு முயற்சிகளை சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடி அபிவிருத்தி செய்து விசாலிப்புக்குள்ளாகும் நீர் வளங்கள் முகாமைத்துவத்தில் தலையாய பங்கினை வகிப்பார். நீர் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை அமுலாக்குவதில் உதவுவதற்காக பங்காளர்கள் (இலங்கை அரசு மற்றும் அரசசார்பற்ற ஸ்தாபனங்கள்) ஆகியவற்றை இனங்கண்டு ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் அவள் அல்லது அவர் மேற்கொள்வார். இத்துறையின் இணைப்பாளர் பங்காளர்களின் கொள்ளளவினை மேம்படுத்துவதற்குத் தோதான பயிற்சி நெறியொன்றை அமைப்பதை உறுதிப்படுத்துவதோடு அத்திட்டத்தை சரியான நேரத்தில் அமுல் செய்வதிலும் இணைந்து செயற்படுவார்.

நீர்ப்பாசன அமைப்புக்களின் புனரமைப்புக்கு மற்றும் ஒன்றிணைந்த நீர்ப்பிடிப்பு (Watershed) முகாமைத்துவத்துக்குத் தேவையான பயிற்சித் திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உட்பாய்ச்சல்கள் மற்றும் வழிகாட்டலை அவள் அல்லது அவர் வழங்குவார்.

நீர் வளங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 4 வருட அனுபவமுள்ள விவசாயம் அல்லது இயற்கை வளங்கள் முகாமைத்துவப் பட்டம் உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## கருத்திட்ட அலுவலர்கள் (4 வெற்றிடங்கள்)

மன்னார் பெரும்பாகத்தில் DZADP இனை அமுல் செய்வதில் கருத்திட்ட அலுவலர்கள் உதவியாக இருப்பார்கள். பங்குதார ஸ்தாபனங்களுடன் மற்றும் பயன்பெறும் சமூகங்கள் குறிப்பாக, விவசாய ஸ்தாபனங்கள் ஆகியவற்றுடன் DZADP இன் புற நடவடிக்கைகளை ஒழுங்காக இணைப்பதில் அவள் அல்லது அவர் பொறுப்பாகவிருப்பார்.

தலையீடுகளுக்கான தோதான முறைமைகளைத் தேர்ந்தெடுப்பதில் துறைசார்ந்த இணைப்பாளர்களுக்கும் ஏனைய DZADP பணியினருக்குப் கருத்திட்ட அலுவலர்கள் உதவியாக இருப்பதோடு அவள் அல்லது அவர் பங்குதார ஸ்தாபனங்களுக்கான பயிற்சி நெறிகளை அமைத்துச் செயற்படுத்துவதற்கும் பொறுப்பாகவிருப்பார்.

பங்குதார இயக்கங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதுட்பட பங்குதார ஸ்தாபனங்களுக்கு அவற்றின் புற நடவடிக்கைகளில் அவள் அல்லது அவர் ஆதாரமாயிருப்பார். உள்நாட்டு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் விவசாய இயக்கங்களுடன் உருப்படியான, அத்துடன் நட்புறவைப் பேணுவதிலும் கருத்திட்ட அலுவலர் முன்னணி வகிப்பார்.

உலர் வலய அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 2 வருட அனுபவத்துடன் விவசாயம் அல்லது சமூகவியலில் பட்டம் பெற்றோர் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## நிதி மற்றும் நிர்வாக அதிகாரி - மன்னார்

கருத்திட்டத்துக்கு நிதி, நிர்வாக, செயலாளர் சேவை மற்றும் அலுவலக முகாமைத்துவ ஆதாரம் ஆகியவற்றை வழங்குவதற்குப் பொறுப்பாக விருப்பார். வருடாந்த மற்றும் பல்வருட வரவு - செலவுத்திட்டங்கள் தயாரிப்பு அத்துடன், அவற்றின் திருத்தங்களுக்கு அவள் அல்லது அவர் பங்களிப்பை வழங்குவார். மாதாந்த அடிப்படையில் அவர் கருத்திட்ட செலவினத்தைக் கண்காணிப்பதோடு அவள் அல்லது அவர் வரவு - செலவுத் திட்டம் தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பாகப் பணியாளர்களுக்கு ஆலோசனையும் வழங்குவார்.

கணக்கியல் உயர்தொழில் துறையில் அரைச் சித்தி மற்றும் ஒத்த பதவியில் அனுபவம் விரும்பத்தக்கது. கணனி அறிவு (Word, Excel, Access, Power Point போன்றவை) கட்டாயம் இருத்தல்வேண்டும்.

சகல பதவிகளும் மன்னாரிலேயே உள்ளதோடு கவர்ச்சியான சம்பளத் திட்டங்களும் பொதுவான கெயர் பலாபலன்களும் வழங்கப்படும். இப்பதவிகள் ஒப்பந்த அடிப்படையிலானவையாகும். இப்பதவிகளுக்கு சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி அவசியமாகும்.

தோதான தகுதியுடைய விண்ணப்பதாரிகள் சொந்தக்காரரல்லாத இரு மத்தியஸ்தர்களின் பெயர் விலாசங்களுடன் (தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்துடன்) இவ்வறிவித்தல் தேதியில் இருந்து 10 நாள்களுக்குள் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களைத் தாக்கல் செய்ய வேண்டும். விண்ணப்பத்தில் தோதான விவரத் திரட்டு (ஆகக்கூடியது 3 பக்கங்கள்) அத்துடன், இலங்கையில் உலர் வலய அபிவிருத்திக்கு நீங்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது பற்றிய ஒரு பக்கத்தைக் கொண்ட அசல் சுய விளக்கமொன்றையும் சேர்க்கவேண்டும்.

நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் கடித உறையின் இடதுபுற மேல் பக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டும். சகல விண்ணப்பங்களும் மிகுந்த இரகசியத்துடன் பேணப்படும். சகல விண்ணப்பதாரிகளுக்கும் நாம் நன்றி நவில்கிறோம். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் மாத்திரமே தொடர்புகொள்வோம்.

பெண்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

கெயர் சம வாய்ப்பினை வழங்கும் தொழிலதிபராவார்.

**பணிப்பாளர் - ஆளணி அபிவிருத்தி,**
**கெயர் இன்டர்நெஷனல் - ஸ்ரீலங்கா,**

7/A, கிறகொரீஸ் வீதி, கொழும்பு - 07.
e-mail: srlanka @ care.lk

(C/33266) (30-14-19-26)

## அறநெறிப் பாடசாலை ஆண்டு விழா

கோப்பாய், பெப்.15

நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலையின் ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிககு பாடசாலை முன்றிலில் கு.தியாகராஜக குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் இந்துசமய விவகார அமைச்சின் யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் கலந்துகொள்வார். (எ-72)

## தேவாலயம் புனரமைப்பு!

வரணி,பெப்.15

வரணி வடக்குப் பிரிவில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயம் புனரமைக்கப்பட்டு வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 20 வருட காலத்துக்கும் மேலாக இந்தத் தேவாலயம் கவனிப்பாரின்றி இருந்தது. தற்சமயம் மீளக் குடியமர்ந்த குடும்பங்கள் இந்தத் தேவாலயத்தைப் புனரமைத்து வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-170)

## சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்கிறது

கொடிகாமம்,பெப்.15

வரணி வடக்கு, மாசேரி மற்றும் எழுதுமட்டுவாழ் வடக்கு படித்த மகளிர் திட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள தனியார் காணிகளில் சட்டவிரோதமாக மணல் அகழும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாகக் கூறப்படுகிறது.

பாலாவி, கச்சாய், அல்லாரை, விடத்தற்பளை ஆகிய பகுதிகளிலும் இத்தகைய மணல் அகழ்வுச் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாகக் கூறப்பட்டது. (எ-74)

## கோழி திருடச்சென்ற இருவர் மாட்டினர்!

யாழ்ப்பாணம்,பெப்.15

கொக்குவில் சிப்பித் தரைப்பகுதியில் கோழி திருடச்சென்ற மூன்று திருடர்களில் இருவர் கடந்த 12 ஆம் திகதி கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

மற்றொருவர் ஓடித்தப்பிவிட்டார் என்று பிடிபட்ட இருவரும் தெரிவித்தனர்.

கோழிக்கூடு ஒன்றினுள் இருந்து கோழிகளைப் திருடிக்கொண்டிருநத வேளை சத்தம்கேட்டு திடீரென விழித்துக்கொண்ட வீட்டுக்காரர் திருடிக்கொண்டிருந்தவர்களுக்குத் தெரியாதவாறு பின்புறமாகச் சென்று ஒருவரை அமுக்கினார். மற்றொருவர் பின்னர் துரத்திப்பிடிக்கப்பட்டார்.

இருவரும் மக்கள் பார்வைக்காக நேற்றுக்காலை வீதியில் நின்ற மரமொன்றில் கட்டிவைக்கப்பட்டிருந்தனர். அப்பகுதி மக்கள் அவர்களைச் சென்று பார்வையிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் நடந்த மற்றும் பல திருட்டுகளில் இவர்களுக்குத் தொடர்பிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-15)

## வன்னிப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர் புதிதாக நியமனம்

கிளிநொச்சி,பெப்.15

வன்னியில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ மாணவர் அமைப்பு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. இதுவரை 22 பேர் தொண்டர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

வன்னியில் வறிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் இலவச கணனிப் பயிற்சிகளை வழங்கவும் தமிழீழ மாணவர் அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (எ-4)

## வடமராட்சி வலயத்துக்கு 'ஹைஏஸ்' வான் அன்பளிப்பு

பருத்தித்துறை,பெப்.15

வடமராட்சி கல்வி வலயத்திற்கு யுனிசெவ் நிறுவனத்தினால் புத்தம் புதிய 'ஹைஏஸ்' வான் ஒன்று கடந்த வெள்ளியன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, ஏற்கனவே இவ்வலயத்தில் பாவனையில் இருந்த ஜீப் வண்டி யாழ்கட்டப் பகுதி பொறியியலாளரின் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது. (எ-118)

# ஓராண்டு நினைவஞ்சலி

பூவுலகில் 29 10 1928

விண்ணுலகில் 23 02 2003



அமரர்
## அப்பாப்பிள்ளை சொக்கலிங்கம் அவர்கள்
(சட்டத்தரணி)

### எங்கள் குடும்ப நண்பர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்- வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வான்புகழ் வள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாகத் தன் வாழ்வை அமைத்துக் கொண்டவர் அமரர் சொக்கலிங்கம் அவர்கள்.

மனித வாழ்வின் நோக்கம் சமுதாய மேம்பாட்டுககுப் பங்களித்தல் என்ற கோட்பாட்டில் தனது வாழ்வை அமைத்துக்கொண்ட சொக்கலிங்கம அவர்களைச் சக சட்டத்தரணியாகவும், குடும்ப நண்பனாகவும் 40 ஆண்டுகளுக்கு மேலாகப் பழகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன. இவர் குடியியல் சட்டத்துறையில் வட மாகாணத்தில் தலைசிறந்த சட்டத்தரணிகளில் ஒருவராகத் திகழ்ந்து வந்தார்.

உண்மை, சத்தியம், நேர்மை என்பனவற்றைத் தாரக மந்திரமாகக் கொண்டு சட்டத்தொழிலை நடத்திய இவர் "ஒரு சட்டத்தரணியின கடமை சமுதாயத்தில் நீதி நிலைபெறுவதற்குப் பங்களித்தல" என்பதில் திடமான நம்பிக்கை வைத்துச் செயற்பட்டார். இவரது உயரிய பண்புகளே, மக்கள் இவர்மேல் நம்பிக்கை வைப்பதற்குக் காரணமாக இருந்தன. அது மட்டுமல்லாமல் அவை சட்டத்தொழில் மீதும நீதித்துறையின் மீதும் சமுதாயத்திற்கு இருந்த நம்பிக்கைக்கு மேலும் உரமூட்டுவனவாகவும் அமைந்திருந்தன.

தொழில்துறையில் மட்டுமல்லாது குடும்ப வாழ்க்கையிலும் எமது குடும்ப நண்பராகத் திகழ்ந்து அன்பும் பாசமும் கொண்ட கனவராகவும் பொறுப்பு மிக்க ஒரு தந்தையாகவும் விளங்கினார். இவரின் மறைவால், ஈடுசெய்ய முடியாத இழப்பால் அல்லலுறும் அவரது குடும்பத்தினர்க்கும் நண்பர்களுக்கும் எல்லாம் வல்ல இறைவன் என்றும் துணை இருப்பார்.

திரு.ஆர்.விஸ்வநாதன்
-சட்டத்தரணியும் முன்னாள் யாழ். மேயரும்.

### " வளமுடன் வாழ்ந்து மறைந்து ஆண்டு ஒன்று ஆனதோ! "

(எழுத்தில் வடிக்கின்றேன் என் வேதனை கரைய)
கடமையில் இன்பம் கண்டு கண்ணியமாய்
கண்ணின் மணிகள் இருவரையும் கருத்துடனே
வளர்த்துக்
கல்வியில் உயர்ந்து பட்டம் பதவிபெறச் செய்து
கற்பகதருவென விரும்பியது ஈந்த தெய்வமே!
நிறைவுற்ற வாழ்வுதனை நினைவினில்
இருத்தி நிற்போம்.
மெய்வருத்தம் பாராது கருமமே கண்ணாக
நேர்மையான உழைப்பால் உயர்ந்த உத்தமரே!
மகளிரை நல்வாழ்வு வாழவைத்து முழுமையான
பொறுப்புடன் கடமைகளை நிறைவேற்றி
பேரன்பேர்த்திகளை அன்புடன் அணைத்து வாழ்ந்தீர்!
நீர்விட்டுச் சென்ற பசுமையான நினைவுகளை
நெஞ்சமதிற் பதித்துத் துதித்து நிற்போம்!
இதயத்திலே நிலைத்து நிற்கும் உம் உருவம்
மறப்போமோ? வாழ்நாள் எல்லாம்...........தலைவா
திருநீற்றை அணிவித்துத் திருமந்திரம் ஓதி
நிமலன் தாள் நினைவுடனே விடுதலை பெற்று விட்டீர்!

உங்கள் ஆத்மா இறைவன் திருவடிகளில் சாந்தி அடைய
கரம்குவித்து அஞ்சலி செய்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் நினைவில்:-
அன்பு மனைவி -திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம்
அருமைப்பிள்ளைகள் - Dr.இந்துவதனி (கணக்காளர்)
இரதிவதனி.
அன்புமருமக்கள் - Dr.உதயகுமார்,
Dr.கிருபாகரன்.
பேரச்செல்வங்கள் - ஆரணி, ஆர்த்தி,
ஆத்மன், ஆத்மீகா.
சகோதரர்கள்:-
அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்கள்,
திரு.அ.திகம்பரலிங்கம் அவர்கள்,
ஓய்வு பெற்றஆசிரியர் (கனடா),
திரு.அ.வாசுதேவலிங்கம் அவர்கள்
(வர்த்தகர், பண்ணாகம்.)

### தாய்நாட்டையும் தாய்மொழியையும் உயிராக நேசித்தவர்

தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் ஆற்றல் மிக்கவராகவும் யாழ.நகரில் பிரபல்ய சட்டத்தரணிகளுள் ஒருவராகவும் நொத்தாரிசாகவும் 40வருடங்கள் கண்ணியமாகத் தன் தொழிலை ஆற்றியவர் அமரர் அ.சொக்கலிங்கம் அவர்கள். இவர் சிந்தனைத் தெளிவும், செயல் தூய்மையும், நேர்மையும் உடையவராகக் கடமையைப் பெரிதாக மதித்து வாழ்ந்த பண்பாளர். எளிமையும் நேர்மையுமே இவரது அணிகலன்கள். தான் பிறந்த ஊரான பண்ணாகத்திற்குப் பெருமை சேர்த்த அறிஞர் பெருமக்களுள் இவரும் ஒருவர்.

அருமை அண்ணர் கொழும்பு சட்டக்கல்லூரி சென்று நியாயதுரந்தரராகத் தேர்ச்சியடைய, அவரைப் பின்தொடர்நத தம்பியும் சட்டத்தரணியாகச் சித்தி எய்தி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு தொழில கட்டுப்பாட்டு அதிகாரியாக அரசாங்கத் தொழிலை வகித்தவர். பின் பிறந்த மண்ணில் வாழ வேண்டும் என்னும் பெருவிருப்பினாலும், சுதந்திரமாகத் தொழில் புரியவேண்டும் என்ற அவாவினாலும் சட்டத்தொழிலை மேற்கொண்டார். 1955 ஆம் ஆண்டு தொடக்கம் தன் பிறப்பிடத்திலேயே அலுவலகம் அமைத்துச் சுற்றத்தைப் பேணித் தொழிலாற்றினார்.

அவரது மணவாழ்வின் பின் மல்லாகம் மஜிஸ்திரேட் நீதிமன்றத்திலும் யாழ்.மாவட்ட நீதிமன்றத்திலும் வழக்குகளை நடத்துவதற்காக யாழ்.நகரிலே வேரூன்றினார். எனினும் தன் கிராமத்து மக்களின் உறவு நீங்காமல் அலுவலகம் செல்வது வழக்கம்.

அன்னார் சகோதர பாசத்திற்கு ஓர் உதாரண புருஷர். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், கனடாவில் வாழும் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.அ.திகம்பரலிங்கம் அவர்கள், பண்ணாகம் வர்த்தகர்.திரு.அ.வாசுதேவலிங்கம் ஆகியோர் இவருடைய பாசம்மிக்க சகோதரர்களாவர்.

நேர்மை, நேரம் தவறாமை, எடுத்தகாரியம் செய்து முடிக்கும் திறன் என்பன அவரது சிறப்பம்சங்களாகும். அத்துடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய இம்மூன்றையும் தமது தாரக மந்திரமாகக் கொண்டு விளங்கியவர். மேலும் சிந்தனை ஆற்றலும் அஞ்சா நெஞ்சும் துணிவும் இவருடைய ஆளுமைக்கு மெருகூட்டின.

தாய்நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் அதிகம் உடைய இவர், 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே' என்ற பாரதியார் கவிதை வரிகளை அடிக்கடி நினைவு கூருவது வழக்கம். எக்காரணங்கொண்டும் தாய் நாட்டைப் பிரிந்து வேற்றுநாடு செல்வதில்லை என்ற அவரது கொள்கை 1995 ஆம் ஆண்டு யாழ். நகரில் ஏற்பட்ட போர்ச் சூறாவளியினால் கைவிடப்பட்டது பெரியதொரு தாக்கம்.

நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்த கதையாயிற்று என்று மனம் வருந்தினார். இடப்பெயர்வுக்குப் பின் பிள்ளைகளின் அழைப்பை ஏற்று மனைவியுடன் கனடாவில் நான்கு ஆண்டுகளும் இறுதிக்காலத்திலே இங்கிலாந்தில் இரு ஆண்டுகளும் வாழ்ந்து சிவபதம் அடைந்துவிட்டார்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

இவரது தமிழறிவின் ஆழத்தையும், தமிழ் இலக்கிய இரசனையையும் இவருடன் பழகியவர்கள் அறிவர். அன்னார் அமரத்துவம் எய்தியதால் நாம் ஓர் அறிவுக்களஞ்சியத்தை இழந்து விட்டோம். அவரது குடும்பத்தினர்க்கும் உற்றார், உறவினர்க்கும், இது பெரிய இழப்பு எனில் மிகையாகாது. அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வணங்குகிறோம.

திரு.ச.முருகமூர்த்தி
உறவினர்.

(C/33243)(41-19-12)

# பொதுச் சொத்து சேதமாக்கப்படுவதை கண்டிக்க மக்கள் முன்வரவேண்டும்

## பிரதேச செயலகத் திறப்பு விழாவில் அரச அதிபர் வேண்டுகோள்

ஊர்காவற்றுறை,பெப்.15

உடுவில் பிரதேச செயலகம் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இவ்வாறு பொதுச் சொத்துக்குப்பங்கம் விளைவிக்கும் வகையில் நடத்தப்படும் எந்தவொரு சம்பவத்தையும் கண்டிக்கப் பொதுமக்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன்.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் புதிய கட்டடத்திறப்பு விழா கடந்த புதனன்று உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச அதிபர் செபத்மநாதன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

அரச கட்டடங்கள் அனைத்தும் பொதுப்பணத்திலேயே நிர்மாணிக்கப்படுகின்றன. எனவே, இத்தகைய கட்டடங்களைச் சேதப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மாறாக அவற்றைப் பேணிப்பாதுகாப்பதும், எதிர்கால சந்ததியினிடம் கையளிப்பதும் பொது மக்களது கடமையாகும்.

குறிப்பாக, உடுவில் பிரதேச செயலக வளவினுள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாதவர்கள் அலுவலகத்தின் கண்ணாடிகளைச் சேதப்படுத்தியுள்ளனர். கட்டடமும் சேதமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, லட்சக் கணக்கில் சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனைக் கட்டடம் சுமார் 2 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தக் கட்டடத்தைப் பேணிப் பாதுகாப்பது இப்பகுதி மக்களதும், இங்கு பணியாற்றும் சகல உத்தியோகத்தர்களதும் பணியாகும். இதன் மூலம் பொதுமக்களுக்கு நிறைவான சேவை கிடைக்க வேண்டுமென நான் எதிர்பார்க்கின்றேன்.

அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படலாம் அல்லது புதிதாக நியமனம் செய்யப்படலாம். ஆனால், கட்டடம் நிலைத்து நிற்கும். அத்துடன், கட்டடங்களை நிறுவுவதில் தம்மை அர்ப்பணித்த அனைவரினதும் பெயர், புகழ் நிலைத்து நிற்கும்.

எமது நாட்டைப்பொறுத்தவரையில், மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமே தற்போது பெருந்தொகை நிதி பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, ஊர்காவற்றுறைப் பகுதி மக்களும் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைப் பயன்படுத்தி தமக்கெனப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து, அவர்கள் மூலம் கிடைக்கும் நிதியை பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்த முன்வரவேண்டும் - என்றார்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரைநிகழ்த்திய தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜேஎக்ஸ் செல்வநாயகம் தமது உரையில் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாடு பிரசித்திபெற்ற மூன்று துறைமுக நகரங்களைக் கொண்டமைந்தது. காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை என்பனவே அவையாகும். இவற்றுள் ஐரோப்பியர் இங்கு வருகை தருவதற்கு முன்னர் ஊர்காவற்றுறைத் துறைமுகமே பிரசித்திபெற்றதாக விளங்கியது.

ஐரோப்பியர் யாழ். குடாநாட்டைக் 'கைப்பற்றுவதற்கு முன்னர் ஊர்காவற்றுறையிலேயே கோட்டை ஒன்றை அமைத்து படிப்படியாக குடாநாட்டினுள் பிரவேசித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் பிரசித்திபெற்ற அரசியல்வாதிகள் முதல் நிர்வாக சேவைகளில் உள்ளவர்கள் இந்த மண்ணைச் சேர்ந்தவர்கள். அவர்களுள் தம்பிஐயா, நவரத்தினம், கா.பொ. இரத்தினம் போன்ற அரசியல்வாதிகளைக் குறிப்பிடலாம். இதில், நவரத்தினம் தமிழரசுக் கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்பட்டவர்.

இவ்வாறு பிரசித்திபெற்ற இந்தத் துறைமுகநகரில் 20 சதவீதமானவர்களே தற்பொழுது மீளக் குடியமர்ந்துள்ளனர். தொடர்ந்தும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதாயின் இங்கிருந்து இடம்பெயர்ந்தவர்கள் கணிசமானோர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிவருவது அவசியமானதாகும்.

மக்கள் இல்லாத இடங்களில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதால் எவ்விதபயனும் ஏற்படப் போவதில்லை. இடம்பெயர்ந்தவர்களில் பலர் இன்னமும் யாழ். நகர் மற்றும் அதனை அண்டியபகுதிகளில்வசித்து வருகின்றனர்.

இதனால், அங்கு நெருக்கடிகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஆகவே, தீவுப்பகுதிகளில், பல்வேறு துறைகளிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் இடம் பெயர்ந்தவர்களை மீள வரவழைக்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படின், இடம் பெயர்ந்தவர்களில் மேலும் நாற்பது சதவீதமான மக்களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த முடியும் - என்றார்.

புங்குடுதீவு பல நோ.கூ.சங்கத்தின் தலைவரும், தவக எழுச்சிப் பேரவையின் தலைவருமாகிய ப.கனகலிங்கம் உரையாற்றுகையில்:-

தீவகம் பழைய பொலிவை இழந்து வருவது வருந்தத்தக்க விடயம். இங்கு வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்த காலம் முதல் இன்னமும் யாழ். நகர்ப்பகுதிகளிலே வசித்து வருகின்றனர். பொருளாதார, கல்வி வசதிகள் கருதி அவர்கள் அங்கு தொடர்ந்து வாழவே விரும்புகின்றனர். அவர்கள் மீளத் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கான வசதிகளை நாங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இங்குள்ள மூன்று மாவட்ட வைத்தியசாலைகளில் தகுதிவாய்ந்த வைத்தியர்கள் இல்லை. அத்துடன், புங்குடுதீவு வைத்தியசாலையின் நிலைமை படுமோசமாகவே உள்ளது. அதே போன்று எழுவைதீவு பிரதேசத்தின் நிலைமையும் 50 வருடங்களுக்கு முற்பட்ட ஒரு நிலைமையிலேயே காணப்படுகின்றது. அத்துடன், தீவகப் பிரதேசம் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்நோக்கி வரும் பிரதேசமாகும். எனவே, குடிதண்ணீர், மின்சாரம், வீதி புனரமைப்பு, கல்வி போன்ற பல்வேறு கட்டமைப்புக்களிலும் பல்வேறு அபிவிருத்திகள் காணப்படவேண்டும் - என்றார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் கு.கணேசலிங்கம், கூட்டுறவுச் சங்கத்தலைவர் எஸ். சுந்தரலிங்கம், சிவஸ்ரீ நா.சோமசுந்தரக் குருக்கள், புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண.பிதா யேசுதாசன் அடிகளார் மற்றும் பலர் இந்த நிகழ்வில் உரைநிகழ்த்தினர். (எ-6-16)

# ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட கிராம அலுவலர்கள் பணி நிறுத்தம்

தென்மராட்சி,பெப்.15

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட கிராம அலுவலர்கள் அனைவரையும் சேவையிலிருந்து நிறுத்துமாறு யாழ். மாவட்ட செயலகம் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளது.

பிரதேசத்தில் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ஓய்வுபெற்ற கிராம அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் கடந்த வருடம் நியமிக்கப்பட்டிருந்தனர்.

யாழ் செயலக அறிவிப்பையடுத்து தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய ஆறு கிராம அலுவலர்கள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடமையாற்றிய பிரிவுக்கு பதில் கடமை அடிப்படையில் கிராம அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (எ-117)

## கடைத்தொகுதி நாளை திறப்பு

கொடிகாமம்,பெப்.15

புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் நிதியுதவியுடன் கொடிகாமம்- பருத்தித்துறை வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கடைத்தொகுதி நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. (எ-74)

# மக்கள் முகம்



பொன்னாலையூர் பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி பொ.வரதராஜா முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பொன்னாலை பிள்ளையார் ஆலய அர்ச்சகராக விளங்கும் இவர், சிறந்த உரையாசிரியர். கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரர் புராணம் ஆகியவற்றுக்கு ஆலயங்கள் தோறும் சென்று உரை கூறிவருகின்றார். அத்துடன், காசி காண்ட செய்யுள்களுக்கு உரை எழுதி வெளியிட்டுள்ளார். (எ-28)

* * *



காரைநகர் சின்னாலடியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பரராஜசிங்கம் 19.01.2004 அன்று யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், காரைநகர் தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் செயற்குழு உறுப்பினரும் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவரும் சமூக சேவையாளரும், முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தரும் ஆவார். (எ)

* * *



சித்திரமேழி, இளவாலையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் அருணாசலம் தம்பிப்பிள்ளை கடந்த 10.12. 2003 அன்று யாழ். மாவட்ட மேலதிக நீதிவான திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்க இயக்குநர் சபை உறுப்பினரும், சித்திரமேழி கிளைக்குழுத் தலைவரும் சித்திரமேழி ஞானவைரவர் ஆலய அறங்காவல் முன்னாள் தலைவரும், தமிழ் - ஆங்கில மொழிகளில் ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராக 37வருட காலம் பணிபுரிந்தவருமாவார். (எ-135)

* * *



இமையாணன் மேற்கைச் சேர்ந்த இளைப்பாறிய உதவி காணி ஆணையாளர் சிற்றம்பலம் சுப்பிரமணியம் பருத்தித்துறை மாவட்ட நீதிவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், கும்பவாழி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலனசபையின் தலைவரும் உடுப்பிட்டி பல நோ.கூ. சங்க கிளை இல.4இன் தலைவரும், வீரகத்தி விநாயகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபகரும் ஆவார்.

இவர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினராகவும் இமையாணன் மேற்கு விவசாய சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் சேவை ஆற்றி வருகின்றார். (எ-5)

* * *



தொல்புரத்தைச் சேர்ந்த சமூக, சமய சேவையாளரும் தொல்புரம் பத்தானை ஞானவைரவர் கோயில் பரிபாலன சபை, தொல்புரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் செயலாளரும், தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானம், தொல்புரம் ஜெகஜோதி அம்மன் கோயில் பரிபாலன சபை உறுப்பினரும், ஆர்மோனிய இசைக்கலைஞரும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவருமான கந்தப்பு லோகேஸ்வரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் அவர்கள் முன்னிலையில் 02.01.2004 இல் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (எ)

* * *



கிளிநொச்சி திருநகரை வசிப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் மேற்பார்வை உத்தியோகத்தருமான சின்னத்தம்பி பாலசுந்தரம் அண்மையில் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் அ.பிரேம்சங்கர் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சமய, சமூக சேவையாளராகிய இவர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளிலும் ஆஸ்பத்திரி ஆலய பரிபாலன சபையிலும் அங்கம் வகித்து செயலாற்றி வருவதுடன், கிளிநொச்சிப் பகுதியில் பல சமய, சமூக நிறுவனங்களுடன் இணைந்து பல சேவைகளையும் ஆற்றி வருகின்றார். (எ)

* * *



கோண்டாவில் மேற்கு, புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த சிவபாக்கியம் முத்துக்குமாரசுவாமி கடந்த 22.01.2004 திகதியன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர், யாழ்ப்பாணம் மாவட்ட தொழில் அலுவலகத்துக்குப் பொறுப்பான உதவி தொழில் ஆணையாளராகவும் பணியாற்றுகின்றார். (எ)

# இறைவிசுவாசத்தால் பிள்ளைகளுக்கு கடிவாளமிட முயற்சியுங்கள்!

21ஆம் நூற்றாண்டில் கால் பதித்து நிற்கும் மக்களாகிய நாம் பல தரப்பட்ட பண்பாட்டு, சமய, சமூக அரசியல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். கண்மூடி விழிப்பதற்குள் பல சவால்கள் எம்மைச் சூழ்ந்து கொள்கின்றன. ஏன் கடந்த ஓர் ஆண்டினுள் நாம் என்றுமில்லாதவாறு ஓர் வித்தியாசமான கலாசார நீரோட்டத்தில் கலக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், எம் இளைஞர்களின் இக்கட்டான நிலைமைகள் பற்றி சிந்திப்பது சாலப் பொருத்தமானதாக அமையும்.

பெற்றோர்களின் குடும்ப வாழ்விலே எல்லாவற்றிற்கும் மேலாகப் பிள்ளைகளே மிகப் பெரிய சாவல்களாக

## ஞாயிறு நற்பிரசாதம்

அமைந்துவிட்டமை ஒரு கவலைக்குரிய விடயமாகும். பிள்ளைகளை எப்படி சமுதாயத்திற்குகந்த நற்பிரஜைகளாக வளர்க்கப்போகின்றோம? அவர்களை எப்படியாக இந்த நுகர்வுக் கலாசார சூழலிலேயிருந்து மீட்டுக்கொள்ளப்போகின்றோம் என்பது பொரும்பாலான பெற்றோர்களின் மௌனமான சிந்தனைகளாக அமைந்து விட்டதை நாம் பார்க்கின்றோம். எங்களுடைய வளர்ப்புப் பிழையா? அல்லது சமுதாயம், சூழல் இவைகள் அவர்களை இவ்வாறு மாற்றுகின்றனவா என்று அவர்கள் அல்லும் பகலும் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். இவைகளின் மத்தியில் நாம் இளைஞர்களின் பிரச்சினைகள் என்ன என்பதைப் பற்றிச் சற்றுக் சிந்திப்போம்.

கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்ற போர் எம் இளைஞர்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இந்த ஆயுத கலாசாரக் கட்டமைப்புக்குள்ளே வாழ்ந்த - பிறந்த இளைய சமூகத்தினர் எந்த நிகழ்வையும் போரை மையமாக வைத்துச் சிந்திக்கும் மற்றும் தமது பிழைகளுக்கு அதுதான் காரணம் என்றநிலையில் வாதிடும் சந்தர்ப்பங்களையும் நாம் பார்க்கின்றோம் - கேட்கின்றோம். தினமும் வாசிக்கின்றோம். போர் எம்மைப் பாதித்தது உண்மைதான். ஆனால், நாம் அவைதான் முதலும் முடிவுமான காரணம் என்று சொல்லி விடமுடியாது.

இளையோர் மத்தியில் கருக்கலைப்பும் பாலியல் துஷ்பிரயோகமும் விபச்சாரமும் நடைபெறுகின்றது. இதற்குப் போர்தான் காரணம் என்று கூறிவிடமுடியாது. போர்ச் சூழலை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி நாம் செய்யும் இருட்டடிப்புக்கள் இவைகள். இவை எதனால் என்றால், எம் இளைஞர்கள் மத்தியிலே ஒழுக்கப் பிறழ்வும், ஆன்மீக வறுமையும் பொறுப்பற்ற தன்மைகளும் வளர்ந்தமைதான்.

மற்றுமோர் பிரச்சினை தகுந்த வழிகாட்டல் இன்மையாகும். தற்கால கல்வி முறை சிறப்பாக உள, ஆன்மீக, சமூக கல்விகள் பரீட்சை நோக்கியனவாகவும், தொழில் வாய்ப்பை நோக்கியனவாகவும் அமைந்துள்ளன. மாணவர்கள் பெற்றோரினால் தகுந்த முறையில் நெறிப்படுத்தி உருவாக்கப்படுவதில்லை. பெற்றோர்கள் தங்கள் பொறுப்புக்களை ஆசிரியர்கள் மீது போட்டுவிட்டு தாங்கள் பிள்ளைகளின் மேற்பார்வையாளர்களாக மட்டும் இருந்து விடுகிறார்கள். இது ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை, சிறப்பாக இளைஞர் பெறவேண்டிய ஆன்மீக, உளவியல் சமூக அனுபவங்களிலிருந்து புறக்கணிக்கப்பட்டு தம் சமுதாயத்திலே - சூழலிலே அவைகளைத் தேடி அலைய வேண்டிய நிர்க்கதிக்கு அவர்கள் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

அந்தவேளையில், தான் அவர்கள் சமுதாயத்தினாலே பிழையான வழிகளிலே திசை திருப்பப்படுகின்றார்கள். இந்த வேளையில் இளைஞர்களின் உருவாக்கம் பற்றி கிறிஸ்தவர்களாகிய ஒவ்வொருவருடைய கடமைகள், பொறுப்புக்களைப் பற்றி சிந்திப்பது சாலப் பொருத்தமானதாக அமையும்.

இறைவனில் ஆழமான விசுவாசமும், அன்பும் உள்ளபிள்ளைகள் இறைவனை நேசிப்பார்கள்; பெற்றோர்களை மதிப்பார்கள்; தங்கள் கடமைகளைச் செய்வார்கள். என்னதான் தீய சூழலை அவர்கள் எதிர்நோக்கினா

**இ.கொட்லீந் ஜெயல் அ.ம.தி.**

லும், ஒரு தவறைச் செய்யும் போது அல்லது தவறைச் செய்ய தூண்டப்படும் போது அவர்கள் மனச்சாட்சிக்கு பயப்படுவார்கள். ஒருமுறைக்கு பலமுறை சிந்திப்பார்கள். இவ்வாறாக பெற்றோரும், பெரியோரும் இளைஞர்களுடைய ஆன்மீக, உளவியல் சமூக வழிகாட்டலிலே கருத்துடையவர்களாக வாழ அழைக்கப்படுகின்றோம். நாம் தண்டனையாலன்றி இறையன்பால் இறை விசுவாசத்தால் பிள்ளைகளுக்கு கடிவாளமிட முயற்சிப்போம். ★

## V.V. இராமநாதன் அன் கொம்பனி

பின்வரும் வேலைகள் செய்வதற்குத் தகுந்த ஆள்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

1. மேசன் வேலை
2. தச்சு வேலை (Shuttering)
3. கம்பி கட்டுதல் (Bar Benders)
4. காவலாளி - 1
5. கூலி ஆள்கள்

வேலை நாள்களில் ரெலிக்கொம் (தொலைத் தொடர்பு) அலுவலகத்திற்கு பின்புறம் பண்ணை மார்பு சிகிச்சை நிலையத்திலுள்ள வேலைத்தளத்தில் காலை 8 மணிமுதல் மாலை 5மணிவரை சமுகம் கொடுக்கவும்.

முகாமையாளர்,
V.V. இராமநாதன் அன்கொம்பனி,
(பண்ணை) வேலைத்தளம்.

(28401)(35-14-21)

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி33076)

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...!

16-02-2004 முதல் 22-02-2004 வரை

இளைஞர்களே!

சக்தி குறைவு ஞாபக மறதி பயம் நடுக்கம் நித்திரை குறைவு

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா? கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.

என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகொள்ளவும்:

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399

(சி-32252) (24-14-21)

## abe

## Association of Business Executives - UK

| Course | Commencement Date |
|---|---|
| | |
| Business Administration (Part Time) | 21st February 2004 |
| Business Administration (Full Time) | 23rd February 2004 |
| | |
| Business Information Systems (Part Time) | 21st February 2004 |
| Business Information Systems (Full Time) | 23rd February 2004 |
| | |
| IELTS | 1st March 2004 |

இப்போதே சேர்ந்து கொள்ளலாம்

ABE மாணவர்களுக்கு இலவச ஆங்கில வகுப்புக்கள்

தொடர்பு:
கல்வி ஆலோசகர்
Univentures Institute of Business Management
இல.16, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777 918280
இணையத்தளம்: www.abeuk.com

(35-14-21) (C/33256)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

காரைநகர் நடுத்தெருவில் உள்ள சொந்த வீட்டில் வசிக்கும் வயோதிபப் பெண்ணுக்கு வீட்டில் தங்கி வேண்டிய பணிகளைச் செய்வதற்குத் தகுதியான பெண் தேவை. யாழ்ப்பாணத்தில் எந்த இடத்தில் வசித்தாலும் விண்ணப்பிக்கலாம்.

தகுந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

தொடர்பு:
ஆ.பாலசுப்பிரமணியம்
டச்சு வீதி, சண்டிலிப்பாய்.
(சீரணிச்சந்திக்கு அருகில்)

(26-21-14) (28328)

## க.பொ.த.உயர்தரத்தின் பின்னர் உங்கள் எதிர்காலத்தைத் திட்டமிடுங்கள்

## Brindavan College

Formerly
**National First Grade College**

இந்தியாவின் பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது.

1. 41 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் சேர்ந்து ஸ்ரீ லங்காவைச் சேர்ந்த 300 மாணவர்கள் கற்கை நெறிகளை மேற்கொண்டுள்ளனர்.
2. கடந்த 10 ஆண்டுகள் காலத்தில் இக் கல்லூரியில் கற்கைநெறிகளை மேற்கொண்ட ஸ்ரீ லங்காவைச் சேர்ந்த 250 மாணவர்கள் பெங்களூர் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றுள்ளனர்.
3. 2004 பெப்ரவரி 29ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்வோர் பதிவுக் கட்டண விதிவிலக்குடன் புலமைப்பரிசில், கட்டணச் சலுகை, தவணைக் கட்டணச் சலுகை ஆகியவற்றுக்கு உரித்துடையவராவர்.
4. 2004 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

மேலதிக விவரங்களுக்கு:
இணையத்தளம்
www.nfg college.Com.
மின்னஞ்சல்:
nfgc@bgl.vsnl.net.in
கம்பெனி செக்ரற்றேரியல் சர்விசஸ் பிறைவேட் லிமிட்டெட்
Company Secretarial Services Private Ltd
285, C - 1/1 ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட
தொலைபேசி - 011 - 2854438

(சி-33227) (21-14)

## BRIGHT Training Centre

P.O.Box - 162, S - 27, First Floor, Colombo Central Super Market Complex, Colombo - 11. T.P. 2434770, Fax 2333279

### தபால் மூலம் கல்வி நெறிகள்

பதினைந்து வருடகாலமாக தபால் மூலம் கல்வி நெறிகளை போதித்த எமது நிறுவனம் இன்றுவரை பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சி அளித்து மாணவர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

### 90 Days Spoken English & Singhala / 90 நாட்களில் ஆங்கில/சிங்கள பேச்சுக்கலை



மூன்றே மாத காலங்களில் ஆங்கிலம் பேச, எழுத வாசிக்க உளவியல் முறையில் மாணவர் உவந்து ஏற்கும் முறையில் தயாரிக்கப்பட்ட கல்விநெறி. இப்பாடநெறியை பயிலும் மாணவர்களுக்கு Diploma in Spoken English & Spoken Singhala நற்சான்றிதழ் வழங்கப்படும்.

### Nursery Teachers Training Course (NTTC)
### பாலர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி



ஆறே மாத காலத்தில் பாலர் முன் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி தபால் மூலம் போதிக்கப்படும். இந்நெறியை மேற்கொள்வோர் பாலர் - முன்பள்ளிக் கல்லூரியை நடாத்துவதற்கும் சுயதொழிலாக பாலர் முன்பள்ளி ஆசிரியர் ஆகவும் கடமையாற்ற முடியும். இப்பாடநெறியை திறம்பட முடிப்போர்க்கு Diploma in Nursery Teachers Training Course நற்சான்றிதழ் வழங்கப்படும்.

### Method of Computerised Book - Keeping & Accountancy (MCBA)
### கம்பியூட்டர் மூலம் கணக்குப் பதியும் முறையும் கணக்கீடும்



ஆறு மாத காலத்தில் கடைக்கணக்கு எழுதும் முறையும், Store - Keeping, Book - Keepers & Account Clerk ஆகிய தொழிலை மேற்கொள்ளக்கூடிய கல்வி நெறியை மேற்கொள்வது மூலம் Diploma in Method of Computerised Book - Keeping & Accountancy நற்சான்றிதழையும் பெறமுடியும். மேலதிக விபரங்களுக்கு மேற்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE

**BRIGHT Future in your Hand**




ஏக விநியோகஸ்தர்:-
JEGHAN PHARMACY
NO.462/B, HOSPITAL ROAD, JAFFNA
TP: 021-2222194

தயாரித்து விநியோகிப்போர்:-
PHARMCO
MARKETING SERVICES (PVT) LTD.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமாதானம் - அபிவிருத்தி பற்றி ஆராய்வு!

## அதிகாரிகள் குடாநாட்டுக்கு வருகை

யாழ்ப்பாணம்,பெப்.15

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்குமான தேவைகள் பற்றிக் கொழும்பு மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் யாழ். குடாநாட்டில் ஆராய்ந்து வருகிறது.

நேற்றுமுன்தினம் குடாநாட்டிற்கு வருகைதந்த கொழும்பு மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் திட்டமானிய நிர்வாகி முரளிதரன் வாசுதேவன், அந்த அமைப்பின் சமாதான அபிவிருத்திக்கான ஆலோசகர் கலாநிதி அனிதா நேசையா (Dr.ANITHA NESIAH) ஆகியோர் இந்த ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அதன் பிரதிநிதிகளை அவர்கள் சந்தித்துப் பேசினர்.

சமாதானச் சூழலின் பின்னர் குடாநாட்டில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், யுத்த சூழ்நிலையால் குடும்பத் தலைவர்களை இழந்த பெண்களுக்கான வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், சிறுவர் மற்றும் இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மிதிவெடியால் அங்கவீனர் ஆக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வு அளிததல், யாழ். குடாநாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்ட இணைப்பாளர் சு.ஜெயராசா தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் மனித முன்னேற்ற நடுநிலைய (கியூடெக்) இயக்குநர் வண.பிதா சி.ஜி.ஜெயக்குமார், ஊற்று நிறுவனப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன், இணைய நிர்வாக அலுவலர் எஸ்.சோதிநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் விசாரணை அதிகாரிகளையும் சந்தித்து மனித உரிமைகள் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் குழுவினர் கேட்டறிந்து கொண்டனர். யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலையும் சந்தித்துப் புனர்வாழ்வுத் திட்டம் பற்றிக் கலந்துரையாடினர். (ம-5)

# யாழ். நல்லூர்க் கோட்டத்துக்கான 'தமிழ் மாணவர் ஒன்றியம்' ஆரம்பம்.

வலி.வடக்கு,பெப்.15

யாழ்ப்பாணம் - நல்லூர் கல்விக் கோட்டங்களுக்கான தமிழ் மாணவர் ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் செல்வன் க.குலேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் -

வறுமை மற்றும் போர் அனர்த்தங்களால் கல்வி பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மீண்டும் கல்வியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல் குறித்தும் - விரிவாக ஆராயப்பட்டது.

கல்வி உரிமைகள் மறுக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்விக்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதெனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன், தமிழீழ மாணவர் பேரவையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் எழிலன்பன், ஆலோசகர் எஸ்.சிவராசா ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். (எ-86)

# அன்று ஒரு 'பேர்ச்' காணியை 45 சதத்துக்கு விற்றவர்கள் இன்று என்மீது ஊழல் குற்றச்சாட்டு!

## சிங்கராஜ வன காணி விற்பனை குறித்து அமைச்சர் ராஜித விளக்கம்

கொழும்பு,பெப்.15

காணி அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதிக்கும் அவரது மகன் விமுக்திக்கும் கொழும்பு கறுவாக் காட்டில் காணி வழங்கியுள்ளேன். ஒரு பேர்ச் அரச காணியை 45 சதத்துக்கு விற்பனை செய்தவர்கள் இனறு என்மது ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்துவது அபத்தமானது.

காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுமுன்தினம் காலை அரச பேச்சாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள், அரச காணிகள் ஆகியவற்றின் விற்பனையை நான் முற்றாக நிறுத்தினேன். சிங்கராஜவனத்தில் நான் 125 ஏக்கர் காணியைத் தனியாருக்கு வழங்கினேன் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதில் உண்மையில்லை.

வனராஜவனத்துக்கு அருகே 1,200 ஏக்கர் விவசாயக் காணி இருக்கிறது. இதில் முன்னர் தேயிலை, ஏலம் போன்ற பயிர்ச் செய்கைகள் செய்யப்பட்டன. தற்போது இது கைவிடப்பட்டுக் காடாகியுள்ளது.

இந்தக் காணியிலேயே 125 ஏக்கர் அபிவிருத்திக்கென தனியாருக்கு வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்க முறையான நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. செயற்றிட்ட அறிக்கை, முதலீடு ஆகிவற்றைக் கருத்திற் கொண்டு இக்காணி வழங்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் ஹெக்டர் கொப்பேகடுவவின் மகள், அநுராதபுர மாவட்ட பொ.ஐ.மு. எம்.பி. திஸ்ஸ கரலியத்த ஆகியோரின் சுவீகரிக்கப்பட்ட அவர்களது காணிகளை மீள வழங்கியுள்ளேன்.

பொதுமக்களுக்கு வீடுகளை அமைக்க மாநகரசபை எல்லைக்குள் ஆறு 'பேர்ச்' காணியும் நகர எல்லைக்குள் பத்து 'பேர்ச்' காணியும் கிராமங்களில் இருபது பேர்ச்சஸ காணியுமே வழங்கப்படும். நாட்டில் இப்போது முறையான காணிக் கொள்கை பின்பற்றப்படுகின்றது.

கடந்த ஆட்சியின்போது சில எம்.பிக்கள் 25 ரூபாவுக்கு ஒரு ஏக்கர் அரச காணியைக் கொள்வனவு செய்துள்ளனர். நகரப் பகுதிகளில் ஒரு பேர்ச் அரச காணி 45 சதத்துக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் என்னைப் புகழ்ந்து பேசிய எதிர்க்கட்சி எம்.பி. ஒருவரே நேற்றுமுன்தினம் கோப்புக்களைத் தூக்கிக்கொண்டு லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அலுவலகத்துக்குச் சென்றார் என்பது வேடிக்கையாகவுள்ளது.

- இவ்வாறு அவர் கூறினார்.

# 15 அமைச்சர்களுக்கு எதிராக லஞ்ச, ஊழல் முறைப்பாடு

கொழும்பு,பெப்.15

ஐக்கிய தேசிய முன்னணியின் 15 அமைச்சர்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தாநந்த அளுத்கமகே தலைமையில் சென்ற குழுவினர் நேற்றுமுன்தினம் 15 அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய அறிக்கைகளை லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிடம் கையளித்தனர்.

சிரேஷ்ட அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ராஜித சேனாரத்ன, மஹிந்த சமரசிங்க, எஸ்.பி.திசாநாயக்க மற்றும் அமைச்சரவையைச் சார்ந்த பெரும்பாலான அமைச்சர்களுக்கு எதிராகவே இந்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

தேர்தல் பிரசார ஆதாயம் கருதி இந்தக் குற்றச்சாட்டுகளை தாம் சுமத்தவில்லை எனப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

மேலும் பல அமைச்சர்களுக்கு எதிரான லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்கள் தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# அகதிகளின் பாதுகாப்புத் தொடர்பாக புதிதாகச் சட்டம் உருவாக்குங்கள்

## ஈ.பி.ஜி. அமைப்பு தென்னாசிய அரசுகளிடம் கோரிக்கை

கொழும்பு,பெப்.15

தென்னாசிய நாடுகள் அனைத்திலும் அகதிகளின் பாதுகாப்புத் தொடர்பாகப் பொதுவான புதிய சட்டமொன்றை உருவாக்குமாறு அந்தந்த நாடுகளின் அரசுகளைத் தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த முன்னணித் தன்னார்வ அமைப்பொன்று வலியுறுத்திக் கேட்டுள்ளது.

'ஈ.பி.ஜி. எனப்படும் அகதிகள் மற்றும் குடிப்பெயர்வு தொடர்பான முன்னணிப் பிரமுகர்கள் அமைப்பு' என்ற அமைப்பே அண்மையில் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் நடத்திய கூட்டத்தில் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

உருவாக்கப்படவேண்டிய அகதிகளுக்கான தேசிய சட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்று மேற்படி அமைப்பினால் மாதிரிச்சட்ட அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

அகதிகளின் அந்தஸ்து தொடர்பாக 1951இல் செய்த ஒப்பந்தம் மற்றும் 1967இல் செய்யப்பட்ட மாதிரி ஒப்பந்தம் போன்றவற்றில் கையெழுத்திட்டிராத இப்பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளும் அகதிகள் மற்றும் புகலிடம் கோருவோர் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கும், அதுதொடர்பான சட்டங்களை இயற்றுவதற்கும் வழிகாட்டும் வகையிலேயே இந்த அகதிகளுக்கான மாதிரிச்சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரால் 1994ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மாநாட்டின் இந்த ஆண்டுக்கான மாநாட்டில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின் முன்னணித் தன்னார்வ அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையின் முன்னணித் தன்னார்வ அமைப்பில் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், அரச, பொது, ஊடக மற்றும் நதித்துறையைச் சேர்ந்த 22 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

அகதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் உதவிகளை வழங்குவதில் தென்னாசிய நாடுகள் ஆதரவான நிலையைக் கொண்டிருப்பதாகவும் -

ஆயினும், உள்நாட்டு யுத்தம், மனித உரிமை மீறல்கள், ஏனைய வன்முறைகள் என்பவற்றால் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான பிரச்சினைகளை இந்நாடுகள் எதிர்கொள்வதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளுக்கான விசேட தேசியச் சட்டங்களையோ அல்லது பிராந்தியச் சட்டங்களையோ தென்னாசிய நாடுகள் கொண்டிருக்கவில்லை. கட்டாய இடப்பெயர்வுகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இப்பிராந்தியத்தில் பரந்த அளவிலான திட்டங்கள் ஏதும் இல்லாமையால் இது விடயத்தில் பிராந்திய அளவில் ஒன்றிணைந்து செயற்படமுடியாதுள்ளது.

இதேவேளை -

சட்ட விரோதமாகக் குடியேறுவோர் தொடர்பான பிரச்சினைகள் அந்தந்த நாடுகளில் கடுமையாகக் கையாளப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரச்சினைகளை அகதிகள் தொடர்பான விடயங்களிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டியுள்ளதுடன், இப்பிராந்திய நாடுகளில் அகதிகள் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கு சட்டங்கள் எதுவுமில்லாமையால் அவர்களைப் பராமரிப்பதில் முரண்பாடுகளும், பிரச்சினைகளை எதிர்கொள்வதில் நிச்சியமற்ற தன்மையும் காணப்படுகிறது.

இதன் அடிப்படையில் தென்னாசிய நாடுகளின் அரசுகளுக்குக் கீழ்க்காணும் பரிந்துரைகளைச் செய்வதென இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற மேற்படி அமைப்பின் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

★ ஒரு குறித்த நாட்டில் அடக்குமுறைக்குள்ளாகும் அபாயமிருப்பின் அபயம் கோரிய ஒரு நபரை பலவந்தமாக அந்த நாட்டுக்குத் திருப்பியனுப்பக்கூடாது என்ற கொள்கையைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

★ அதிக அளவிலான அகதிகள் வரும் பட்சத்தில் தாராள நடைமுறைகளைக் கையாள்வதுடன் குறைந்தபட்சம் அவர்களுக்குத் தற்காலிக பாதுகாப்பு வழங்குவதையும் உறுதிப்படுத்தவேண்டும்.

★ அகதிகளைப் பதிவுசெய்தல் மற்றும் சட்டரீதியான அந்தஸ்தை அவர்களுக்கு வழங்குதல் என்பவற்றின் மூலம் அகதிகளுக்கு வேண்டிய ஆதரவையும் உதவிகளையும் வழங்குதல்.

★ அகதி அந்தஸ்துத் தொடர்பாக 1951இல் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு அல்லது 1967இல் மேற்கொள்ளப்பட்ட மாதிரி உடன்படிக்கைக்கு அமைய நடத்தல்.

★ மாதிரிச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தேசியச் சட்டத்தை இயற்ற வேண்டும். இதனால், அகதிகளின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதற்கான வசதிகளையும் செய்துகொள்ளமுடியும்.

★ அகதிகளுக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக அவர்கள் தொழில்புரியும் அனுமதியை சாத்தியமான அளவில் வழங்குதல்.

★ அகதிகள் விடயத்தில் மேற்படி நடைமுறைகளை உருவாக்கும் வரையில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் செயற்பாடுகளை மதிப்பதுடன், அவற்றை எளிதாக்கவும் வேண்டும்.

★ நீண்டகாலம் தங்கியிருக்கும் அகதிகள் விடயத்தில் உறுதியான தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

★ தமது சொந்த நாட்டுக்கு அல்லது முன்னர் வசித்த நாட்டுக்குத் திரும்பிச்செல்லும் அகதிகளின் உரிமைகள் மதிக்கப்படல் வேண்டும்.

★ உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களைப் பாதுகாப்பதற்குச் சர்வதேச மற்றும் தேசியளவிலான அமைப்புக்களுடன் இணைந்து உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்று அதில் உள்ளது. (எ-து-10)



வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடத்தப்படும் தையல், மனையியல் பயிற்சிநெறியை உதவிப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் நாடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

# சலரோக விழிப்புணர்வு போட்டியில் தீவக லயன்ஸ் முதலாமிடம்

தென்மராட்சி,பெப்.15

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306பி மாவட்டப் பிரிவினால் கடந்த நவம்பர் மாதம் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சலரோக விழிப்புணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றோரின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

லயன்ஸ் கழகங்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் முதலிடத்தினை தீவக லயன்ஸ் கழகமும், இரண்டாமிடத்தினை நல்லூர், சாவகச்சேரி லயன்ஸ் கழகங்களும், மூன்றாமிடத்தினை உரும்பிராய், வடமராட்சி லயன்ஸ் கழகங்களும் பெற்றுள்ளன.

'சலரோகத்தைத் தடுப்போம்' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் 10 இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

எம்.எப்.சனோளியா (87, கனால் வீதி, புத்தளம்), சு.க.அமீன் சாதிக் (332, பிரதான வீதி, மன்னார்), ஏ.எச்.ரசாத் (மஹ்குப் நகர், கிண்ணியா), சிவாஜினி சிவபாதசுந்தரம் (32, குட்செற் வீதி, வவுனியா), த.சமேந்திரகுமார் (ஆஸ்பத்திரி வீதி, சங்கானை), ஆ.அருள்மொழி (அரசடி வீதி, உரும்பிராய்), கே.ரி.சதீஸ்குமார் (ஆஸ்பத்திரி வீதி, சங்கானை), கு.தியாகராச சர்மா (நீர்வேலி வடக்கு), இ.சிவகலா (ஏழாலை மகாவித்தியாலயம்), எஸ்.சுபாங்கன், (பூரணகிரி (கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம), சி.மயூரகிரி (அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி), தி.மாணிக்கவாசகர் (தும்பளை, பருத்தித்துறை).

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் மானிப்பாய் நகர மண்டபத்தில் அடுத்த மாதம் ஏழாம் திகதி நடைபெறும் லயன்ஸ் கழக பிராந்திய மாநாட்டில் வழங்கப்படும் என லயன்ஸ் கழக சுகாதாரமும் சலரோகமும் விழிப்புணர்வுப் பிரிவு மாவட்டத் தலைவர் லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் அறிவித்துள்ளார். (எ-31-117)

# Study for The International Degree In Jaffna



## B.Sc. (Hons)

1 YEAR
e-Technology Software Engineer
1 YEAR
Object Oriented Application Programmer
6 MONTHS
Web Programmer
6 MONTHS
3 YEARS

**Your Life Starts Here**

## After O/Ls

**19 + வயதிலேயே கணனித்துறையில் தொழில் தகைமையைக் பெற்றிட ஓர் அரிய சந்தர்ப்பம்**

NIIT இல் இருவருட கற்கைநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்கட்கு பின்வரும் 10 சர்வதேச பல்கலைக்கழகங்களில் 1 1/2 வருடம் முதல் 2 வருட விதிவிலக்குகளுடன் (Exemption) மிகக்குறுகிய காலத்தில் கணனித்துறையில் பட்டதாரியாகிட வாய்ப்பு.

1. University of Canberra - Australia.
2. University of Northumbria - U.K.
3. University of Sunderland - U.K.
4. Southern New Hampshire University - U.S.A.
5. University of Winnipeg - Canada.
6. University of Southern Australia - Australia.
7. Dundalk Institute of Technology - Ireland.
8. Bolton Institute - U.K.
9. Auckland Institute of Studies - New zealand.
10. RMIT - Australia.

*சர்வதேச பல்கலைக்கழக அனுமதிகள்:-*

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிற்குச் செல்வதற்கான அனுமதிகள் அது தொடர்பான தேவைப்பாடுகள் அனைத்தும் NIIT மாணவர்கட்கு NIIT இனால் இலவசமாகவே செய்து கொடுக்கப்படும்.

*தேவைப்பாடுகளின் நீக்கம்:-*

வெளிநாடு செல்லும் மாணவர்கள் தோற்ற வேண்டிய TOEFL / SAT / IELTS போன்ற பரீட்சைகள் NIIT மாணவர்கட்கு தேவையில்லை.

**உலகளாவிய ரீதியில் NIIT வியாபித்திருக்கும் நாடுகள்**

U.K., U.S.A, JAPAN, AUSTRALIA, BAHRAIN, GERMANY, BELGIUM, HONGKONG, INDIA, INDONESIA, MALAYSIA, NETHERLAND, NEWZEALAND, SINGAPORE, SWEDEN, THAILAND, U.A.E., BANGLADESH, BOTSWANA, CHINA, GHANA, KENYA, MAURITIUS, NAMIBIA, NEPAL, NIGERIA, OMAN, QATAR, SOUTH AFRICA, SAUDI ARABIA, SRI LANKA, TANZANIA, ZIMBABWE

**NIIT**

அனுமதிகள் இப்போதிலிருந்தே...

**GLOBAL LEADERS IN IT EDUCATION AND TRAINING**

347,2/1, KASTHURIYAR ROAD, JAFFNA
T.P.: 021 - 222 7163, 021 - 222 7250
email:- niitjaf@slt.lk.
www.niit.com.

(C/33260)

**NIIT** Make the correct Choice as 2.5 million IT students worldwide...


## நீங்காத நினைவில் ஓராண்டு

மண்ணில் 07 - 10 - 1938



விண்ணில் 25 - 02 - 2003

**திருமதி சிவபாதசுந்தரம் செல்வராணி**

திதி: அபரபக்க தசமி

எம் இனிய பாசமிகு அம்மம்மாவே!
நீங்கள் எமைப் பிரிந்து ஆண்டுகள்தான்
பல ஆனாலும் ஆறாது எம் துன்பம்
மறையாது உங்கள் நினைவலைகள்!

உங்கள் நினைவில் வாழும்:
**கணவர், பிள்ளைகள், மருமக்கள். பேரப்பிள்ளைகள்.**

*19. மூத்த விநாயகர் வீதி. நல்லூர். யாழ்ப்பாணம்.*

(28286)(34-14)

## 35 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 03 - 01 - 1946



ஆண்டவன் அடியில் 12 - 01 - 2004

**திருமதி சரஸ்வதி இராசதுரை**

திதி: தேய்பிறை சஷ்டி

பெற்று வளர்த்தெம்மை ஆளாக்கி
வானுயர நாம் வாழ
பெற்ற மண்ணில் இருந்தே
வழிகாட்டிய அந்நாள்கள்
மனத்தகத்தே வைத்து நிதம்
விழி நீள நினைப்பதுவே!
பெற்ற கடன் தீர்க்க
வழியாய் தெரியுதம்மா!

தங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள்: சிவகுமார். வாசுகி.
மருமக்கள்: கௌரி. பாலநாதன்
பேரப்பிள்ளைகள்: அபிநயா. ஆரபி. தருண். தக்ஷா.

'அங்களப்பாய்', இணுவில் கிழக்கு.

(28457)(34-14)

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம!

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 1933 - 04 - 01



உதிர்வு 2004 - 01 - 31

**அமரர்**

## இரட்ணம் இராமச்சந்திரன்

(பத்தர் அப்பா)

இன்று (15.02.2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து சகல விதத்திலும் எமக்கு உதவியவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி, தொலைநகல் மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் ஆதாரவைத்தியசாலை (மந்திகை) ஊழியர்களுக்கும் மாவட்ட வைத்தியசாலை (வல்வெட்டித்துறை) ஊழியர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பாடசாலை வீதி, மாதனை, பருத்தித்துறை.*

- இராமச்சந்திரன் குடும்பத்தினர்

(28387)(26-14)

யாழ்ப்பாணம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாவட்ட நிலை
2ஆம் இடம்

## யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2003 இல்
108 மாணவர்களைச் சித்தியடையச் செய்து,
46.15 சதவீதச் சித்தி மூலம் யாழ். மாவட்டத்திலும்,
வடக்கு - கிழக்கு மாகாணத்திலும், அகில இலங்கையிலும்
முன்னணி வகிப்பதற்கு உயர்த்தி நிற்கும் அதிபர்,
உப அதிபர், பகுதித் தலைவர்கள், தரஇணைப்பாளர்கள்,
ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரையும் மனம் நிறைந்து
நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துவதிலே
பெருமகிழ்வெய்துகின்றோம்.
அத்துடன்,



மாவட்ட நிலை
6ஆம் இடம்

*இன்று (15. 02. 2004) ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும் 2003இற்கான*
*பரிசளிப்பு விழாவில் தங்கப் பதக்கங்களைப் பெறும் மாணவர்களான,*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | பே.யதுர்ஸனன் 171 (மா.நிலை 2) | 04. | வெ.நாராயணி 161 | 07. | த.சுஜீவன் 160 | 10. | ச.கஜலக்ஷன் 156 |
| 02. | மி.மிதுறிகா 169 (மா.நிலை 6) | 05. | இ.ல்மேரிக்கா 161 | 08. | சி.துஷானி 158 | 11. | உ.மேனாளன் 155 |
| 03. | ஆ.றோய்பானுசந்தர் 164 | 06. | க.ஹிருஷிகா 160 | 09. | இ.வித்தகன் 158 | | |

## இவர்களையும்,
## பரிசில்களையும் பதக்கங்களையும் பெற்றுக்கொள்ளும்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12. | ப.சாருகா | 154 | 37. | கி.விஷ்ணுகோபன் | 143 | 62. | க.யுவராஜ் | 132 | 87. | சி.சிவதாயினி | 125 |
| 13. | சி.ரகுராம் | 154 | 38. | உ.பௌஷிகா | 142 | 63. | ஆ.நிலோஜன் | 132 | 88. | சி.சிந்துஜன் | 125 |
| 14. | சி.சுபாங்கன் | 154 | 39. | கு.நிஷாந்தன் | 142 | 64. | ஜெ.சங்கீதா | 132 | 89. | இ.உமையாள் | 124 |
| 15. | ஆ.பிரியந்தினி | 153 | 40. | இ.நிருஜன் | 142 | 65. | ஸ்ரீ.நரேந்திரன் | 132 | 90. | க.சேவிதா | 124 |
| 16. | பா.கிருஷாந் | 153 | 41. | த.தர்சிகன் | 142 | 66. | நா.மயூரன் | 132 | 9¹. | சி.யதுர்ஷன் | 124 |
| 17. | க.கணபாலன் | 152 | 42. | க.மந்தாகினி | 140 | 67. | வ.நிலாஜனன் | 132 | 92. | ச.அரவிந் | 123 |
| 18. | பா.நரேந்திரசர்மா | 152 | 43. | செ.பிரவீனா | 139 | 68. | வி.சுமந்தரன் | 131 | 93. | சி.வினோஜா | 123 |
| 19. | செ.கமலாட்சன் | 152 | 44. | தி.யதிர்ஷன் | 139 | 69. | க.துளசிகா | 131 | 94. | தே.டிலக்ஷன் | 122 |
| 20. | வெ.சுஜீவன் | 150 | 45. | இ.அனுஷிதா | 139 | 70. | பா.ஆர்த்திகன் | 131 | 95. | இ.ஸ்ராலினி | 122 |
| 21. | வி.வைஷ்ணவி | 149 | 46. | கோ.ஸ்ரீநாத் | 139 | 71. | சி.கிரிஹரன் | 131 | 96. | செ.ஆரணி | 122 |
| 22. | சு.டிலக்ஷனா | 148 | 47. | வி.பகீரதன் | 139 | 72. | சி.திருமகள் | 130 | 97. | தி.கலாரூபன் | 122 |
| 23. | தே.கோகுலசாந் | 148 | 48. | சி.பிரசாந் | 138 | 73. | செ.தேனுஷா | 130 | 98. | கு.யதுபாலன் | 122 |
| 24. | இ.கீர்த்தனா | 148 | 49. | க.சாயிசங்கர் | 137 | 74. | ப.தனோஜன் | 130 | 99. | ஸ்ரீ.பிரசாந் | 121 |
| 25. | நா.துளசிகா | 147 | 50. | இ.நிருஷிகா | 136 | 75. | ம.கஜீபன் | 129 | 100. | வி.உஷாயினி | 121 |
| 26. | ந.சிந்தூரி | 147 | 51. | ஜெ.ஜெய்சன் | 136 | 76. | கு.சபேசன் | 129 | 101. | பா.பபித்திரா | 121 |
| 27. | நா.சாருண்யா | 146 | 52. | சு.சிந்துபார்கவி | 136 | 77. | நா.விதூஷன் | 129 | 102. | கு.நிதர்ஷனா | 120 |
| 28. | சி.தனுஜா | 146 | 53. | ச.சோபிதன் | 136 | 78. | த.ரகுநந்தனன் | 129 | 103. | இ.யசிந்தன் | 120 |
| 29. | மோ.விதுர்ஷனா | 146 | 54. | சோ.துவாரகன் | 136 | 79. | த.மனோஜன் | 128 | 104. | கு.கௌதமன் | 120 |
| 30. | மோ.சஞ்ஜீவன் | 145 | 55. | யோ.சுபாசினி | 135 | 80. | ஞா.கஜானன் | 128 | 105. | சோ.சுஜீவா | 120 |
| 31. | சி.சஞ்சுதா | 144 | 56. | இ.ஸ்ரீதுவாரகன் | 135 | 81. | சு.துஷாயினி | 128 | 106. | வி.முகேஸ் | 119 |
| 32. | மு.நர்மதா | 144 | 57. | சி.சிந்துஜன் | 135 | 82. | மு.நந்தனன் | 128 | 107. | அ.பார்த்தீபன் | 119 |
| 33. | கி.தனுஷன் | 144 | 58. | ற.கிருஸ்னேந்திரா | 134 | 83. | ர.யதுர்ஸன் | 127 | 108. | மு.பவித்திரா | 118 |
| 34. | ஜெ.வேணுகானன் | 143 | 59. | தா.ஜெயடிலக்ஷன் | 134 | 84. | தி.கோபிதாஸ் | 127 | | | |
| 35. | நா.பிரியதர்சினி | 143 | 60. | ஜெ.குபேரகா | 133 | 85. | மீ.சனுசா | 126 | | | |
| 36. | இ.விசோபன் | 143 | 61. | இ.ரவிசங்கர் | 133 | 86. | செ.டக்ஷன் | 125 | | | |

இவர்களையும் சகல கலைகளும் பெருக வாழ்த்துவதோடு, தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரை கல்விச் செயற்பாடுகளிலும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் கருத்தூன்ற வைத்து உன்னத நிலைக்கு வித்திட்ட பாடசாலைக்குக் கற்றல், கற்பித்தல் சாதனத்தை (O.H.P.) வழங்குவதோடு, சகல ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் நன்றிகலந்த கௌரவிப்புக்களையும் பாராட்டுதல்களையும் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பெற்றோர்கள் ஒன்றுசேர்ந்து பெருவிழா எடுத்துச் சிறப்பிக்க இருப்பதையிட்டு பெருமையும் பேருவகையும் அடைகின்றோம்.

பாடசாலை தொடர்ந்து பல முன்னேற்றகரமான சாதனைகளைப் படைத்து வெற்றிவாகை சூடவும் அதிபர், ஆசிரியர்கள் நலமும் வளமும் பெருக வாழ்வாங்கு வாழவும் வாழ்த்துகின்றோம்.

**யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.**

**புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய**
**தரம் 5 மாணவர்களின் பெற்றோர்கள்.**

விளம்பர அனுசரணை:

MANOJ
EXPRESS

The Finest Express Service in the Field

சர்வதேச யாழ். ~ கொழும்பு விமான டிக்கெட்டுக்கள் சர்வதேச பார்சல் ஆவணங்கள்
சேவை:~ குறித்த நேரத்தில் கையளிக்கப்படும்.
எமது வாடிக்கையாளர்களுக்குப் பெறுமதியான அன்பளிப்புகள் வழங்கக் காத்திருக்கிறோம்.

67/A, Woltendhal Street,
Colombo - 13,
Tel.: 2390128, Fax: 2399650
Mob. 0777 517019

13, power House Road,
Jaffna,
Tel.: 021 222 3916, Mob: 0777 801038
E-Mail: mos@dialogsl.net

(சி-33272) (24-14-37)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2003ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய மாணவர்கள்

செல்வன் கி.கிசோத் - 148 புள்ளிகள்
செல்வி செ.நிவேதிகா - 141 புள்ளிகள்
செல்வி செ.நிர்த்திகா - 130 புள்ளிகள்

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், இவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்குக் கற்பித்து, ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.

(C/33284) (26-16-14-26)

உ
சிவமயம்



## காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில்

ஈழத்துச் சிதம்பரம்

## சிவராத்திரி மஹோற்சவம் -2004

நிகழும் மாசிமாதம் 18ஆம் திகதி புதன்கிழமை அன்று மாலை 5மணிக்கு அபிஷேகத்தைத் தொடர்ந்து நான்கு சாமங்களும் அபிஷேக பூசை, ஆராதனைகளும் தேவார, திருவாசகம் ஓதலும் நடைபெறும். 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை அமாவாசைவிரதத்தையொட்டி அன்று அதிகாலை சவுந்தராம்பிகை சமேத சுந்தரேசுவரப்பெருமான் சமுத்திரத் தீர்த்தம் ஆடுவதற்கு எழுந்தருளுவார்.
*விஷேட போக்குவரத்துச் சேவை ஒழுங்கு பண்ணப்பட்டுள்ளது.*

ஆ.அம்பலவிமுருகன்,
மு.சுந்தரலிங்கம்,
ஆதீன கர்த்தாக்கள்.

**கணேசன் ஸ்ரோர்ஸ்**
201, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(C/33273) (26-14-16)

# VACANCY

FOR THE POST OF
**RECEPTIONIST**
MALE/FEMALE
Should be fluent in English with a Pleasant, Pleasing Personality.
Previous Experience will be an added Qualification.

**TROPII COAST HOTELS**
**30, Sea Avenue,**
**Colombo-3**
E.Mail - tropii @ hotmail. com.
(28467) (26-14)

# அறிவித்தல்

**இத்தாற் சகலருமறிக:** இதன்பின் காணும் விவரங்கள் அடங்கிய ஆதனத்தினை சைவவித்தியாவிருத்திச் சங்கம் ஒரு சிறுவர் இல்லம் அமைக்கும் பொருட்டுக் கொள்வனவு செய்யவுள்ளதால், குறித்த ஆதனம் சம்பந்தமாக உரிமைக் கோரிக்கை ஏதும் எவருக்கும் இருப்பின் இரு வாரங்களுக்குள் எமது பணிமனையுடன் தொடர்புகொள்க.

நொத்தாரிஸ் **வே.வினாசித்தம்பி** அத்தாட்சிப் படுத்திய பிரிவிடல உறுதி இல. 11550 இன்படி சபாபதிப்பிள்ளை அப்பாத்துரைக்கு சொந்தமும் நித்தமுமாகிய யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு, உடுவிற் கோவிற்பற்று இணுவில் இறை "கொக்கிலிப் பாயும் பிராயடியும்" என்னும் நிலப்பரப்பு எட்டு, குழி பத்து கொண்ட ஆதனம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
(C/33285)(34-14-26)

**சோ.பத்மநாதன்**
செயலாளர்.

# தேவை

T&G (Pvt) Ltd இற்கு வரவேற்பாளர் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. தகைமைக் கேற்ப சம்பளம் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 18.02.2004 புதன்கிழமை காலை 9.00மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும். மேலதிக விவரங்களுக்கு:

0777 - 571901
210, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(28498)(35-14-16-26)

GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
CCS

College of Computer Studies
302/1, Navalar Road, Anaipanthi, Jaffna.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

இடம்: நாவலர் கலாசார மண்டபம்
நாவலர் வீதி, நல்லூர்.
காலம்: 15.02.2004 ஞாயிறு பி.ப. 3.30 மணி
தலைமை: திரு.க.கைலைவாசன் (இயக்குநர்)
ஆசியுரை: நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் ச.இராசதுரை
*(பீடாதிபதி, விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்)*

கௌரவ விருந்தினர்:
பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர்
*(பீடாதிபதி, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்)*

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**- Director & Staff.**
(28494)(34-14-16-26)

காலத்தால் கலையாத நினைவே
## 31ஆவது பிறந்த தினமும் 110ஆம் நாள் நினைவஞ்சலியும்

| மலர்ந்தது | உதிர்ந்தது |
| --- | --- |
| 15 - 02 - 1973 | 29 - 10 - 2003 |



அமரர்
## இராசதுரை றயந்தன்
*(உரிமையாளர், நியூ ஆனந்தா நகைமாடம் - யாழ்.)*

மண்ணில் விழுந்தாலும் மழையில் நனைந்தாலும்
தங்கம் நிறம் மாறுமா?
பொன்னின் ஒளிபட்ட பூவின் புதுவாசம்
மின்னி நிறம் போனதேன்?
உன்னில் எனைக் காண என்னை விழியாக்கி
உயிரிற் கலந்தோமே - நாம்
உண்ணும் உணவெல்லாம் உங்கள் முகம் காண
என்னைப் பிரிந்தேகினீர்
மண்ணில் ஒருகோடி ஜென்மங்கள் நூறாகி
கடல் வானும் மறைந்தேகலாம்
மன்னன் மகராஜன் றயந்தன் என் கண்ணாளா!
இப்பெண் வாழும் நாளெல்லாம் நீர்....


இல. 52/2, வைமன் றோட்,
யாழ்ப்பாணம்.
(28501) (26-14)

நெஞ்சுருகிக் கரையும்:
**அன்பு மனைவி,**
**மகன், மகள்.**

# சொல்வன்ட் டிஜிட்டல் பிரிண்டிங்

## உன்னதமான, மலிவான, உற்பத்தித் திறன்

பெயர்ப்பலகைகள் தயாரிப்போர், கட்டுமானம் நிறுவுவோர், தயாரிப்பு மற்றும் வெளிக்கள ஊடகக் கம்பனிகள், விளம்பர முகவர்கள் முதலானோருக்கு– கட்டுப்படியாகும் விலையில் பெரிய அளவிலான அசல் சொல்வன்ட் பிரின்டர் ஒன்றை வாங்குங்கள். தரமான படைப்புகள் மூலம் உங்கள் இலாபத்தையும் அதிகரியுங்கள். உங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை புரிவதற்கு, உரிய நேரத்தில் வேலையை ஒப்படைக்கவும் முடியும்.



யூகே ஸார் மற்றும் யூஎஸ்ஏ ஸ்பெக்ட்ரா நிறுவனங்களின் பீஸோ பிரின்ட் ஹெட் தொழில்நுட்பவியல். உச்ச நிலையிலான 720னிஸ இல் அதி உன்னத தரத்திலான அச்சடிப்பு. நேரடியாக நியம நொன் கோட்டட மீடியாவில் அச்சடியுங்கள். இன்பினிட்டி மை ஸார் ஹெட் ஸ்பெக்ட்ரா ஹெட் என்பவற்றிற்கென்றே விசேடமாக தயாரிக்கப்பட்டது. பல்வேறு வர்ணங்கள், வெளியரங்கில் இரண்டு வருடங்கள் மங்காதிருக்கும்.

INFINITI
பிரின்டர் அளவுகள் 5' முதல் 10' வரை.
விலை யூஎஸ் டொலர் 15,000 முதல்.

ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கு ஏக விநியோகத்தர்கள்
Fei Yeung Union Singapore Pte Ltd.
30 Kaki Bukit Road 3 #03-03/04, Empire Techno Centre.
Singapore 417819. Tel: 6563830990, Fax: 6563830550
E-mail : albert@istsign.com

பராமரிப்பு சேவை
சில்வர் சேர்கின் (பிறைவேட்) லிமிட்டெட்
19/2, ஸ்ரீ சரணங்கர வீதி. தெஹிவளை.
தொலைபேசி : 4510503, 0777610842

## பாராட்டு விழா

சுழிபுரம்,பெப்.15

கலாபூஷண விருது பெற்ற பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்திக்கு தொல்புரம் துரையன் வளவுப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் நடத்தும் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஆலய முன்றிலில் கு.பா.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக நடனத் துறைத் தலைவர் கலாநிதி சபா.ஜெயராசா உட்பட பலர் இந்த நிகழ்வில் பாராட்டுரை நிகழ்த்துவர். (எ-28-29)

## புகுமுக மாணவர் விரிவுரைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன நுண்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று கலைப்பீடாதிபதி ப.கோபாலகிருஸ்ணஐயர் அறிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை இந்த விரிவுரைகள் ஆரம்பமாகும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.(ஐ-10)

## வடமராட்சியில் சத்துணவுத் திட்டம்

வடமராட்சி கிழக்கு, பெப்.15

சத்துணவுத்திட்டத்தின் கீழ் வடமராட்சியிலுள்ள 18 பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மதிய உணவு இவ்வருடம் வழங்கப்படவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளிலிருந்து தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களின் விவரம் வடமராட்சி கல்வி வலயத்தினால் கோரப்பட்டுள்ளது. (ஐ-182)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு விசேட வகுப்புகள்

வடமராட்சி கிழக்கு,பெப்.15

மருதங்கேணி கோட்டத்தில் மீள இயங்க ஆரம்பித்துள்ள 11 பாடசாலைகளிலும் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான விசேட கல்வித்திட்டம் ஒன்றினை ஜி.ரி.இசட் நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

தரம் 2இல் இருந்து தரம் 5வரையான வகுப்புகளில் மெல்லக் கற்கும் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, இந்த விசேட கல்வித்திட்டம் மாலை நேரங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.(ஐ-182)

**The Royal College of Jaffna**
*ஆண்டு 1–5 வரை ஆங்கில மூலம் ஆங்கிலப் பயிற்சி மேற்படிப்பு மாணவர்களுக்கும் அடிப்படை மாணவர்களுக்குத் தமிழ் மூலமும்*
– ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி
426(302), K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை.
(28503)

## கடை விற்பனைக்கு

இல. 237, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் (மிட்டாஸ் கடை சந்திக்கும் சத்திரச் சந்திக்கும் இடையில்) அமைந்துள்ள (நீளம் 30அடி அகலம் 16அடி) கடை விற்பனைக்குண்டு.
தொடர்பு:
T.P.0777 722564
021 2225120
(28506) 10.00a.m. - 5.00 p.m.

## தேவை

குமாரன் சுற்றுலா விடுதிக்கு இரவு பராமரிப்பு ஆள் ஒருவர் தேவை.
மாநகர எல்லைக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.
நேரில் வரவும்.
**குமாரன் சுற்றுலா விடுதி**
67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (28496)

## பற்றறிகள்

சகலவித பற்றறிகள் (Rechargable பற்றறிகள் உட்பட) சிறந்தமுறையில சார்ஜ செய்யும் இலவச தொழிலநுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படும்.
எம்மிடம் அரிய பழைய பாடல்களும், புதிய, பக்திப் பாடல்களும் மிகத் துல்லியமாகப் பதிவுசெய்து பெற்றுக கொள்ளலாம்.

**A to Z எலைக்றோனிக்ஸ்.**
ஓட்டுமடம் சந்தி. மானிப்பாய் வீதி.
யாழ்ப்பாணம்.
(28477)



## யாழ். மக்களுக்கு ஒரு நற்செய்தி

தென்னிந்தியாவிலிருந்து பரம்பரை ஜோதிடர்

**திரு.P.T.R: அவர்கள்**

மூன்றாவது முறையாக யாழ். புண்ணிய பூமிக்கு வருகை

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்சோதிடம்

பார்த்து உங்கள் எதிர்காலத்தை அறிந்துகொள்ள இன்றே ஜோதிடர் P.T.R. ஐ சந்திக்கவும்.

*இடம் : பாலாஜி இன் விடுதி*

293, கஸ்தூரியார் வீதி,
(கன்னாதிட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (28511)(32-12-17)


## ஆண்டுகள் நான்கு எம் நினைவலைகள்

பிறப்பு 30 - 05 - 1942



இறப்பு 29 - 02 - 2000

கணிதப் பேராசான்

**ஸ்ரீமான் பொன்னையா வேலாயுதம், B.Sc.(Hons)**

(வெக்ரர்)

எம் குலவிளக்கே!
இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
உயிர்க்குயிராய் உறைபவரே!
வாழ்க! பெம்மான் திருவடியில்
வாழ்க! ஓம் சாந்தி!

(28507)(40-17-12)

"வேலாயுத பவனம்"
உடுப்பிட்டி

மனைவி, பிள்ளைகள்,
பேரர், மருகர்,
உடன்பிறப்பினர், மைத்துனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னையா அன்னம்மா

மீசாலை வடக்கு, வேம்பிராயைச் சேர்ந்த திருமதி பொன்னையா அன்னம்மா அவர்கள் நேற்று (14.02.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் காசித தம்பி பொன்னையாவின் அன்பு மனைவியும் தனேந்திரன் (டென்மார்க்), சிவேந்திரன் (மயிலு வீதி, ஆறுகால்மடம், கொக்குவில்), சுவேந்திரன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான ஐயாகடையடி பொன்னையா பொன்னம்மா, வேம்பிராய் சின்னர் அருணாசலம், மயில்வாகனம் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணரஜனி (டென்மார்க்) செல்வசோதி (ஆறுகால்மடம்), திருமகள் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சுஜங்கன், தர்ஷி (டென்மார்க்), நிஷங்கன், நிரோஷன், நிலுஷன் (கொக்குவில்), கார்த்திகன், கார்த்திகா, சுவேதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2004) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்

தகவல்:
பெறாமகன்
மயில்வாகனம் சிவதர்மசுந்தரம்(சிவம்).

*மீசாலை வடக்கு,*
*வேம்பிராய், சாவகச்சேரி.*
(28516) (40-17-12)

## இராசையா அன்னலட்சுமி

தாவடி தெற்கு, கொக்குவில், பத்தானை வீதியைச் சேர்ந்த இராசையா அன்னலட்சுமி அவர்கள் 13.02.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பா இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - செல்லம்மா தம்பதிகளின் மகளும் இந்திரா தேவி, சந்திரபாலன் (தபால்நிலையம், கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசலிங்கம் (கிராம சேவையாளர் J/112, திருநெல்வேலி கிழக்கு), சிவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசகலா, றாஜீவா (கொக்குவில் இந்துக் கல்லூரி), குகாஜினி (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை, சிவபாக்கியம், மகேஸ்வரி மற்றும் அன்னம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின அன்புச் சகோதரியும் மங்கையர்க்கரசி, தர்மலிங்கம், பரம்சோதி, தவமணி காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.02.2004) சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
இ.சந்திரபாலன் (மகன்)
(தபால் நிலையம் கொக்குவில்),
இ.இராசலிங்கம் (மருமகன்)
(கிராம அலுவலர் J/112, திருநெல்வேலி கிழக்கு).

*பத்தானை வீதி,*
*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*
(28517)(30-17-12)

# மரண அறிவித்தல்

## காசிநாதன் சிவலிங்கம்

**(ஓய்வுபெற்ற யாழ். மாநகரசபை லிகிதர்)**

பொலிகண்டி, வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகவும் அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதன் சிவலிங்கம் அவர்கள் வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவப்பிள்ளை காசிநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்) - வள்ளியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் பண்டிதர் K.T.ஞானப்பிரகாசம், காலஞ்சென்ற நாகம்மா (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மருமகனும் திருமதி செல்வராணி சிவலிங்கம் (முகாமையாளர் மக்கள் வங்கி, நெல்லியடி) பாசமிகு கணவரும் ஆன் பிரியதர்ஷினி, மரியா பத்மதர்ஷினி (சட்டத்துறை, திறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தில்நாதனின் (England) அன்பு மாமனாரும் கமலாசனி, மகேசன் (சட்டத்தரணி - கனடா), பத்மநாதன் (இளைப்பாறிய பிரதம லிகிதர் - மார்புநோய் சிகிச்சைப் பிரிவு யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற தர்மலிங்கம், பவானி (சட்டத்தரணி), சகுந்தலாதேவி (ஆசிரியை, இ.த.க.பாடசாலை பொலிகண்டி) ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (16.02.2004) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, கரவெட்டி கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி செல்வராணி சிவலிங்கம்
(மனைவி), (முகாமையாளர்
மக்கள்வங்கி, நெல்லியடி)
*ஆலே மரியா, சின்னாலடி,*
*அல்வாய், மாலிசந்தி.*
(C-33294)(40-17-12)


### விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள GL model 9 SRI தொடர் இலக்கமுடைய Lancer (Japan Car), 83 Sri தொடர் இலக்கமுடைய CD ௨௦௦ Motor Cycle என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பிற்கு: 021-222-2982
0777-280274
0777-777748
(28515)(37-17-12)

### லக்சுமி இணுவில்

சிம்பு, ஷர்மி நடித்த
**காதல் அழிவதில்லை** (ரீல்ஸ்)
எமது சிவராத்திரி வெளியீடு
ஆகா எத்தனை அழகு
காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00. (பு.நே.)
(28513) (12)

### ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த் நடித்த
**ஜேஜே** (ரீல்ஸ்)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30(பு.நே.)
18 முதல்
**எங்கள் அண்ணா**
(C-33050) (12)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், சாக்ஷி நடித்த
**வாஞ்சிநாதன்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
**X Men 2**
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45
(C-32981) (31)


# மரண அறிவித்தல்கள்

## முத்தையா கணேசரட்ணம்

**(கார் மாமா)**

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற முத்தையா அன்னமுத்துவின் அன்புமகன் கணேசரட்ணம் (கார் மாமா) நேற்று (14.02.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பவளமலரின் அன்புக் கணவரும். சகீலா (சுவிஸ்), சுதாஜினி, சுதாகர் (ராசன்), சசிகுமார் (குட்டி), நதினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சிவசுந்தரகாந்தன் (சுவிஸ்), சுரேஸ்குமார் ஆகியோரின் மாமனும் சுதர்சனின் அன்புப் பேரனும் சோமசுந்தரம் (இந்தியா), சிவகுமார், இராசரட்ணம் (காலஞ்சென்ற பாலு), சிவநாதன் அருந்தவமலர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.02.2004 சனிக்கிழமை 4 மணிக்கு தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

*ஏழாலை தெற்கு,*
*சுன்னாகம்.*
(28518)(40-17-12)

## பண்டிதர் வீ.வ.நல்லதம்பி

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் வீ.வ.நல்லதம்பி (ஓய்வுபெற்ற அதிபர் - புங்குடுதீவு மகா வித்தியாலயம்) அவர்கள் 12.02.2004 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற வல்லிபுரம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகம்மா (ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், கணேஸ்குமார் (கனடா), ஜெயகுமாரி (லண்டன்), ஜீவகுமார் (லண்டன்), சிவகுமாரி (லண்டன்), நந்தகுமார் (கனடா), உருத்திரகுமாரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நாகம்மா, இராமநாதன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கனகசபை, சிவயோகம், தருமலெட்சுமி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-02-2004 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*47/3, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி: 222 3589
(28504)(21-17-12)

தகவல்:
திருமதி ம.சிவராஜா.
(மருமகள்)

## சூசைநாதர் ஜேம்ஸ் சந்திரவதனன்

சென்.ஜேம்ஸ், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைநாதர் ஜேம்ஸ் சந்திரவதனன் கடந்த 6ஆம் திகதி வெள்ளிக கிழமை டோகாவில் காலமானார்.

அன்னார் டேவிற் சூசைநாதர் - கிளாரம்மா தம்பதிகளின் அன்பு மகனும் யூட் ஜெயகாந்தன் (சாந்தி அச்சகம்), றெஜினா, பீற்றர் யூலியன், இமாக்கு லேற்றா, சுகந்தினி (C.T.B), செல்வராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இக்னேசியா (ஆசிரியை, கன்னியர்மடம் ம.வி., இளவாலை), பாலகுமார் ஆகியோரின் மைத்துனரும் திலகராஜ்ஜின் சிறிய தந்தையும் விதுர்சினியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.02.2004) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டே.சூசைநாதர்.
(தந்தை)

*சென்.ஜேம்ஸ் வீதி,*
*இளவாலை.*
(C/33287)(21-17-12)

## திருமதி கமலேஸ்வரி குலசிங்கம்

தெல்லிப்பழை, யானைக்குட்டிவளவைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் லண்டனில் வசித்தவருமாகிய திருமதி காமாட்சிப்பிள்ளை குலசிங்கம் (கமலேஸ்வரி) அவர்கள் லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரட்ணம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் பண்ணாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திருவருள் - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் குலசிங்கம் (Reteired Reporter Colombo Municipal Council , Now in U.K.) அவர்களின் அன்பு மனைவியும் ஜெயந்தி (U.K.), சுமதி (Canada), ரவிசங்கர் (U.K.), உதயசங்கர் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் நந்தகுமார் (U.K.), ஸ்ரீநிவாசன் (Canada), தயாரக்சனி (U.K.), நகுலேஸ்வரி (U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கனகரட்ணம், திருமதி பரமேஸ்வரி சோமஸ்கந்தர், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை விமலநாதன், குகநாதன் மற்றும் ஜெகநாதன், பாக்கியநாதன், திருமதி சர்வேஸ்வரி விநாயகமூர்த்தி, கமலநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மிதுலா, பிரகாஷ் காயத்திரி, அஞ்சலி, நிரோஜன், அனோஜன், அஜந்த், ரம்யா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2004) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தி.குலசிங்கம்**
(லண்டன்)
T.P.: 016 222 03109 . (C/33293) (38-17-12)

தகவல்:
சகோதரன் - லயன் வி.கமலநாதன்,
யானைக்குட்டிவளவு, தெல்லிப்பழை.





LG
Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C/33276)(41)

### லிபேட்டி அச்சுவேலி

விக்ரம், த்ரிஷா, விவேக்,
மனோரமா மற்றும் பலர்
நடித்த
**சாமி** (ரீல்ஸ்)
காட்சிகள்: 3.00, 7.00. (பு.நே.)
(C/33049)

### நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், சிம்ரன், நாசர், வடிவேல் நடிக்க




காட்சிகள்: 11.00. 3.00. 7.00. (பு.நே.)
(ரீல்ஸ்)

அடுத்த வெளியீடு இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தினத்தில் சரத்குமார், லைலா நடித்த **கம்பீரம்**
(C/33048)(12)

# தேர்தலில் பொறுப்பற்று நடக்கும் பொலீஸார் மீது நடவடிக்கை

## பொலீஸ்மா அதிபர் பணிப்பு

கொழும்பு,பெப்.15

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது பொறுப்பற்ற முறையில் செயற்படும் பொலீஸ் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்படுவர் என்று பொலீஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி தேர்தல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதனை அனைத்துப் பொலீஸாரும் உறுதிப்படுத்த வேண்டும் என்று பொலீஸ் மா அதிபர் பணித்துள்ளார்.

தவறிழைக்கும் பொலீஸாரை உடனடியாகப் பதவியில் இருந்து நீக்கி பணிப்பை அவர் தேர்தல் செயகத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் காமினி நவரத்தினவிற்கு வழங்கியுள்ளார்.

தேர்தலுக்கான பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றி ஆராய்வதற்கென பொலீஸ்மா அதிபர் நேற்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளைச் சந்தித்தார்.

தேர்தலின் முன்போ, தேர்தலின் போதோ அல்லது தேர்தல் முடிவடைந்தவுடனோ சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுவோர் எவராக இருந்தாலும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பொலீஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (ம-5)

# கொழும்புத்துறை காவலரண் முன் தும்புத்தொழிலாளர் போராட்டம்

கொழும்புத்துறை,பெப்.15

கொழும்புத்துறை கிழக்குப் பகுதி தும்புத்தொழிலாளர்கள் தாம் கடலில் புதைத்த தும்பு மட்டைகளை வெளியே எடுத்துவருவதற்கு மேலும் ஒருபாதை திறந்துவிடுமாறு கோரி அப்பகுதி இராணுவ காவலரண் முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

5ஆம் குறுக்கு வீதி இராணுவ காவலரண் முன்பாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் இப்பகுதி மாதர் சங்கத்தினர் மற்றும் தும்புத் தொழிலாளர்கள் பங்குபற்றினர்.

இதுவரைகாலமும் கொழும்புத்துறை துறைமுகப்பகுதி வழியாகவே இவர்கள் சென்று மட்டை எடுத்துவர அனுமதிக்கப்பட்டனர். தூர இடங்களில் இருந்து எடுத்துவரும் மட்டைகளைத் தலைச்சுமையாக சுமந்து இந்த ஒரேயொரு வழியூடாகக் கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்நோக்குகின்றனர்.

இதனால், நேரவிரயமும் வேலைப் பழுவும் ஏற்படுகிறது. இதனால், இரு பாதைகளூடாகச் சென்றுவர அனுமதிக்குமாறு அவர்கள் படையினரிடம் பலமுறை கோரிக்கை விடுத்து வந்தனர். சாதகமான பதில் கிடைக்கவில்லை. இறுதியில் நேற்று போராட்டத்தில் குதித்தனர்.

அப்பகுதியில் மிதிவெடிகள் உள்ளதாகவும் அவற்றை விரைவில் அகற்றி அனுமதி அளிப்பதாகவும் அப்பகுதி இராணுவப் பொறுப்பாளர் கூறியதை அடுத்து போராட்டம் இடைநிறுத்தப்பட்டது. (ம-30)

## போதைப்பொருள் கடத்தல் முறியடிப்பு!

கொழும்பு,பெப்.15

இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் 96 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைவஸ்தைக் கடத்த எடுத்த முயற்சி நேற்று முறியடிக்கப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இந்தப் போதைவஸ்து கைப்பற்றப்பட்டது. அது தொடர்பாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ம-3)

## அரச பாடசாலைகளில் முதலாம் தவணை விடுமுறை 2 மாதங்கள்

கொழும்பு,பெப்.15

எதிர்வரும் பொதுத்தேர்தல் தமிழ் - சிங்களப் புத்தாண்டு வெசாக் பண்டிகை மற்றும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை என்பவற்றால் அரச பாடசாலைகளுக்கான முதலாம் தவணை விடுமுறை இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதோடு வெசாக் பண்டிகை மே மாதம் 4ஆம் 5ஆம் திகதிகளில் கொண்டாடப்படவுள்ளது.

தொடர்ந்து ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை மே மாதம் 6ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதனால், முதலாம் தவணை விடுமுறையை மார்ச் மாதம் 30 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 3ஆம் திகதி வரை நீடிப்பதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது என அமைச்சரின் ஊடக அதிகாரி தர்மவன்னி நாயகம் தெரிவித்தார்.(ம-5)

## கட்டுப்பாடற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பிரதேசங்களில் சுமார் 2 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். அவர்களுக்கு வாக்களிக்க கடந்த தேர்தலில் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அதனால் அவர்கள் நீதிமன்றம் சென்றனர் என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அரச கட்டுப்பாடற்ற பகுதிகளிலுள்ள மக்கள் வாக்களிக்க வசதியாக மாற்று ஏற்பாடுகள் செய்வதற்காக எல்லைப் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண் விவரங்களை அரச அதிபர்களிடம் இருந்து தேர்தல் ஆணையாளர் பெற்றுக்கொண்டார்.

கண்காணிப்புக் குழு அதிகாரிகளுடனும் அரச சமாதான செயலக அதிகாரிகளுடனும் தேர்தல் ஆணையாளர் நாளை கலந்துரையாட இருக்கின்றார்.

அதன்பின் இதுதொடர்பான அறிவுறுத்தல்களைத் தேர்தல் ஆணையாளர் அரச அதிபர்களுக்கு விடுப்பார். (ம-3-5)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாட இருக்கின்றார்.

இவரின் யாழ்ப்பாண விஜயம் தொடர்பான நிகழ்ச்சி நிரல் ஏதும் வெளியிடப்படாத போதும் யாழ். நிலைமை குறித்து அவர் விரிவாக ஆராய்வார் எனக் கூறப்பட்டது. (ம-3)

# வேறு கட்சிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் என்ற முறையில் என் அனுமதியின்றி கட்சியின் செயலாளர் நாயகமாகிய நீங்கள் எடுப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் 11.02.2004ஆம் திகதி வழங்கிய தீர்ப்பில் தடை விதித்துள்ளது என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

ஏப்ரல் 02ஆம் திகதி நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளமையால் மிகக் கூடுதலான பிரதிநிதித்துவத்தை எமது கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் உருப்படியான தீவிர அரசியலில் நாம் ஈடுபடவேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆகவே, தயவுசெய்து பின்வரும் விடயங்களுக்கமைய நடக்க உறுதிபூணவும்.

★ எந்த அரசியல் கட்சியுடனும். அரசியல் கூட்டுச் சேரும் விடயமாகப் பேசித்தீர்க்கும் அதிகாரம் உங்களுக்குத் தரப்படவில்லை. இந்த விடயத்தில் எமது கட்சி எதுவித முடிவும் எடுக்கவில்லை. இருப்பினும் எமது கட்சி ஏதேனும் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவது சம்பந்தமாகப் பேசுவதானாலும் முன்கூட்டியே 11.02.2004 நீதிமன்ற தீர்ப்புக்கமைய என்னுடன் பேசி அனுமதி பெற்றே செயற்பட வேண்டும்.

★ ஏப்ரல் 02இல் நடைபெற இருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்காக வேறு அரசியற் கட்சிகளுடன் கூட்டுச் சேரவேண்டும் என நாம் எந்த ஒரு கட்சிக் கூட்டத்திலும் தீர்மானிக்கவில்லை.

எனக்குத் தெரியாமல் தாங்கள் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேருவது சம்பந்தமாக ஆலோசனை, நடத்தியிருக்கின்றீர்கள் என ஊடகங்கள் மூலமாக அறிந்து ஆச்சரியப்பட்டேன். வேறு கட்சிகளினால் கூட்டப்படும் கூட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அத்தகைய அழைப்புகள் வரும் பட்சத்தில் அவற்றில் கலந்து கொள்வதானால் முன்கூட்டியே எனது அனுமதியை எழுத்து மூலமாக பெற்றுக் கொள்ளுமாறும், அதேபோல வேறு அரசியல் கட்சிகளுடன் இணைந்து கூட்டங்கள் கூட்டுவதற்குத் தங்களுக்கு அதிகாரம் இல்லாதமையினால் அதையும் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

எமது கட்சி ஓர் உயர்ந்த தனித்துவத்தைக் கொண்ட கட்சி. ஆண்டாண்டு காலமாக எம்மால் கட்டி எழுப்பப்பட்ட தனித்துவத்தை நாம் இழக்க முடியாது. எமது தலைவர்களும் கட்சி உறுப்பினர்களும் கடந்த காலத்தில் எத்தகைய தியாகங்களை செய்துள்ளனர் என்பதை நாம் உணரவேண்டும். எம் இனத்திற்காகவும், கட்சிக்காகவும் எமது தலைவர்களும் உறுப்பினர்களும் உயிர்த்தியாகம் கூடச் செய்துள்ளனர்.

★ 15ஆண்டுகளுக்கு மேல் நாடாளுமன்றத்திலும் 50 ஆண்டுகளுக்கு மேல் அரசியலிலும் இருந்த முதிர்ந்த தமிழ் அரசியல்வாதி என்பதனால், நாம் தமிழ் சமுதாயத்திற்கு விசுவாசமாகவும், உண்மையாகவும் உழைப்பதாக இருந்தால் களங்கமற்ற, சிறந்த வரலாற்றைக் கொண்ட ஒரே ஒரு தமிழ் மிதவாதக் கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணி தனது சின்னத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்டே ஆகவேண்டும் என்பதே எனது உறுதியான நம்பிக்கையாகும்.

எமது கட்சியின் சின்னத்தில் போட்டியிடும் அனைவரும் த.வி. கூட்டணியின் உறுப்பினராக இருக்க வேண்டும் என்பதை தயவுசெய்து உறுதிப்படுத்துவதோடு, கட்சி உறுப்பினர் அல்லாதவர்களை போட்டியிட வைப்பது விரோதமாகையால் அத்தகைய செயலில் தயவுசெய்து ஈடுபடவேண்டாம்.

★ நீங்கள் தனிப்பட்ட முறையில் எமது கட்சி உறுப்பினர் அல்லாத சிலரை கட்சியின் கொடியிலும், சின்னத்திலும் போட்டியிட வைக்க முயற்சிப்பதாக ஊடகங்கள் மூலம் அறிகின்றேன். இதைச் செய்கின்ற அதிகாரத்தை யார் வழங்கினார்கள். தயவு செய்து உங்கள் பதவிக்குரிய வட்டத்திற்குள் இருந்து செயற்படுமாறும் கட்சியின் அந்தஸ்திற்கும், நற்பெயருக்கும் பங்கம் ஏற்படாத வகையில் செயற்படுமாறும் பணிவாக வேண்டுகின்றேன்.

மேலே கூறப்பட்ட நான்கு விடயங்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவைகளையோ மறினால், நீதிமன்றத்தின் ஆணையை மீறிய குற்றத்திற்கு ஆளாகி அதற்குரிய பலாபலன்களையும் அனுபவிப்பீர்கள்.

இறுதியாக மீண்டும் ஒரு தடவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இலக்கம் DC 6933 SPL. வழக்கின் தீர்ப்பில் 11.02.2004 அன்று நீதிபதி இட்ட கட்டளைப்படி கட்சி சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கை அனைத்திற்கும் என்னுடன் கலந்தாலோசித்து அனுமதியைப் பெறவேண்டும் என்பதை ஞாபகமூட்ட விரும்புன்றேன் - என்றுள்ளது. (ம-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்துரை பொன்னம்மா

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னத்துரை பொன்னம்மா நேற்று (14.02.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் (பாண்டியன்தாழ்வு) அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் - விசாலாட்சி தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான நடராசா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற துரைசிங்கம், பூமணி, தங்கராணி, பாலசிங்கம் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கதிர்காமத்தம்பி (M.L.T), நவரட்ணராஜா, சந்திரநாயகி (மலேசியா) ஆகியோரின் அன்பு மாமியாரும பாமினி (யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி), பிறேமிலா (திருக்குடும்ப கன்னியர்மடம் மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தர்மஇரத்தினம், செல்வராணி, கணநாதன், விஜயராணி, ஜெயராணி, யோகரட்ணம், புஸ்பராணி, ஜெகநாதன் ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2004) ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*231, பருத்தித்துறை வீதி,*
*முத்திரைச்சந்தி, நல்லூர்.*
(28529)(40-18-38-30)

தகவல்:
க.கதிர்காமத்தம்பி (M.L.T)
மருமகன்.

## திருமதி பரிமளம் செல்லத்துரை

காரைநகர், களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் 53/7, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் செல்லத்துரை நேற்று (14.02.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*53/7, ஆடியபாதம் வீதி,*
*மருத்துவபீடம் அருகில்,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*
(28519)
(38-18-38-30)

தகவல்:
செ.சிவகுருநாதன் (மகன்)
(பாபா ரேட் சென்ரர்).


**கணனி வகுப்புகள்**

அனைத்து **Diploma & Certificate Courses**

★தனியாக, சிறுகுழுக்களாக கற்பிக்கப்படும்.

PC SYSTEMS
*Jaffna Road Manipay*
*(St. Anne's Church முன்பாக).*
(28485)(37)


**PHYSICS**
By. K.Sivalingam B.Sc. (Spl.)
ஆரம்பம்: 16.02.2004
**Mechanics 2006**
இல. 1, சிவப்பிரகாசம் றோட், வண்ணார்பண்ணை.
(28481)

**Logic**
A/L 2004
துரித மீட்டல்
கீன் சென்ரர்
15.02.2004 3.00 (ப.நே.)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
LECTURES BY:-
MR.M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
16.02.2004 திங்கள் மாலை 4.30 மணி
MONDAY / WEDNESDAY } 4.30 p.m. - 5.30 p.m.
HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி
(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (28424)(12)

**SUN COMPUTERS**
இடம் மாற்றம்

இல.316, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவந்த இந்நிறுவனமானது, தற்போது இல. 68, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.




- நிர்வாகி.
(33245)(36-18-38)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்


ஞாயிறு சிறப்பம்சம்


# முரண்பாடுகளுடன் தேர்தலில் கூட்டமைப்பு

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை. மரபு வழித்தாயகம். தமிழ்த்தேசியம் ஆகியவற்றை விரைவில் பெற்றுக்கொள்வதற்கென இலங்கையின் நாடாளுமன்றில் ஒட்டுமொத்தமாகக் குரல் கொடுப்பதற்காக தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டதுதான் தமிழர் தேசியக் கூட்டமைப்பு.

வீ.ஆனந்தசங்கரிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை. அதன் பின்னர் இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களிடையேயான கைகலப்பு என்பன இப்போது கூட்டணியை நீதிமன்றம் வரை கொண்டுசென்றுவிட்டன. இந்நிலையில். மீண்டும் ஒரு

விடவேண்டுமென நினைக்கின்றார்கள். ஏனையோர் அனைவரும் எனது தலைமைத்துவத்தை விரும்புகிறார்கள். என்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அது கொண்டு வரப்பட்ட விதம்



"ஒரு தரப்பின் அழுத்தத்தின் பேரில் ஒரு சிலர் தான் நான் பதவிவிலக வேண்டும் என்கின்றனர். ஏனையோர் எனது தலைமைத்துவத்தை விரும்புகின்றனர். எமது கட்சியின் சின்னமாகிய உதய சூரியனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பயன்படுத்த முடியாத நிலைகூட வரலாம். கூட்டமைப்பில் எடுக்கப்படும் முடிவுகள் என்னையும் எனது கட்சியையும் பாதிக்காது."

தமிழர் விடுதலைக் கூட்டணி. ரெலோ. தமிழ்க்காங்கிரஸ். ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி ஆகியன ஒன்றிணைந்து இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இக்கூட்டமைப்பு முதன்முதலாக போட்டியிட்டது.

விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள். எனவே. அரசு அவர்களுடன் பேசித்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்ற ஒரே இலக்கை அடிப்படையாகக் கொண்டு தேர்தலில் போட்டியிட்ட இக்கூட்டமைப்புக்கு விடுதலைப் புலிகளும் தமது முழுமையான ஆதரவினை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் சென்ற தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள். தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு ஒன்று சேர்ந்து குரல் கொடுத்து அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயம். சுதந்திரமான

நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ளது.

தென்னிலங்கையில் உள்ள பல அரசியல் கட்சிகள் இப்போது தேர்தலுக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டுள்ளன. இதன் ஒரு கட்டம்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பியின் இனவாதக் கூட்டு.

எனினும். தமிழர் தாயகப் பகுதியில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் இன்னும் முரண்பட்ட நிலையிலேயே உள்ளன.


தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டங்களை அதன் தலைவர் ஆனந்தசங்கரியின் ஒத்துழைப்பின்றி கூட்டுவதற்கு கொழும்பு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

சரியானதல்ல என நான் நிராகரித்தபோதும் அதற்கு 25 இற்கும் மேற்பட்டோர் ஆதரவு வழங்கியுள்ளனர் என அறிக்கை விட்டுப் பொய்ப்பிரசாரம் மேற்கொண்டனர். எவ்வாறாயினும். கூட்டமைப்பில் இவர்கள் எடுக்கும் தீர்மானங்கள் என்னையும். எனது கட்சியையும் நிச்சயமாகப் பாதிக்காது என நான் கருதுகின்றேன். எனினும். எமது கட்சியின் சின்னமாகிய உதயசூரியன் சின்னத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பயன்படுத்த முடியாத நிலை கூட வரலாம். பெப்ரவரி 22ஆம் திகதி எமது கட்சியின் கூட்டத்தைக் கூட்டுவதற்கு தீர்மானித்துள்ளோம். எனினும். அதனைக் கூட்டுவதற்கு செயலாளர் நாயகம் நடவடிக்கை

போவதால் தமிழ்மக்களின் பலத்தை வெளியுலகுக்கு வெளிப்படுத்த - சிங்கள தலைவர்களுக்கு நிகராகச் செயற்பட தமிழர் கூட்டமைப்பு விரைவாக ஒரு முடிவுக்கு வரவேண்டிய தேவைப்பாடு இப்போது ஏற்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரத்தின் போது விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனக் கூறிவிட்டு. தேர்தலில் வெற்றி பெற்றபின் நான் அப்படியெதுவும் கூறவில்லையென நைஸாக நழுவிவிடுபவர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிட வேண்டிய தேவை இல்லையென்றுதான் மக்கள் கருதுகிறார்கள். மீனுக்கு வாலும் பாம்புக்கு தலையுமாக சந்தர்ப்பத்துக்கேற்றவாறு - தமது சுயநலத்துக்குகேற்றவாறு மாறுபவர்கள் மக்களின் பிரதிநிதிகள் என்ற கோதாவில் தேர்தலில் நிற்பதை மக்கள் விரும்பவில்லை.

எத்தகைய நெருக்கடிகள் வந்தாலும் தமழ்மக்களின் பிரச்சினைகளை விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் தீர்க்கமுடியும் என்ற தளராத கொள்கையுடன் செயலாற்றும் திறன் கொண்டவர்களையே மக்கள் விரும்புகிறார்கள்.



"நீதிமன்றத்தில் உள்ள வழக்கோ, தடையோ எமக்கு நெருக்கடியாக இருக்கப் போவதில்லை. ஏனெனில், கூட்டமைப்பு தொடர்பாக நீதமன்றில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. தலைவர் ஆனந்தசங்கரியின் சம்மதத்துடன் அண்மையில் கட்சியின் தேர்தல் நியமனக்குழு நியமிக்கப்பட்டது. எனவே, தேர்தல் தொடர்பான கட்சியின் நிலைப்பாட்டை அக்குழு விரைவில் கூடித் தீர்மானிக்கும்."

கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் தனது சம்மதம் இன்றி தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றார். நான் பாரம் பரியமாகக் கட்டிவளர்த்த கட்சி இது. எனவே. எனது சம்மதத்துடனேயே எந்த நடவடிக்கைகளையும் எடுக்க முடியும் என்கிறார் - ஆனந்தசங்கரி.

இந்த இடைக்காலத் தடை காரணமாக கூட்டணியின் தேர்தல் தயார்ப்படுத்தலுக்கான கூட்டங்கள் எதுவும் இதுவரை நடைபெற்றதாகத் தெரியவில்லை.

இதற்கிடையே -

இம்முறையும் தேர்தலில் தமிழர் தேசிய கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டமைப்பின் தேர்தல் தொடர்பான கூட்டத்தில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு தீர்மானங்களை எடுத்துள்ளனர். எனினும். இக்கூட்டத்தில் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி கலந்துகொள்ளவில்லை.

இது தொடர்பாக ஆனந்தசங்கரி கருத்துத் தெரிவிக்கையில். கூட்டமைப்பின் கூட்டங்களில் கூட்டணியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு தீர்மானங்களை எடுப்பது நீதிமன்றத்தடையுத்தரவுக்கு முரணானது. குறிப்பிட்ட சிலர்தான் ஒருதரப்பினரின் அழுத்தத்தின் பேரில் என்னை இக்கட்சியின் தலைவர் பதவியிலிருந்து நீக்கி

எடுத்துள்ளது போல் தெரியவில்லை - என்கிறார்.

இது தொடர்பாக கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் கருத்து வெளியிடுகையில் -

இந்த வழக்கோ நீதிமன்றத்தில் உள்ள தடையோ எமக்கு நெருக்கடியாக இருக்கப்போவதில்லை. ஏனெனில் கூட்டமைப்பு நீதிமன்றத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஆனந்தசங்கரியின் சம்மதத்துடன் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கூட்டப்பட்ட கூட்டத்தில் ஏகோபித்து கட்சியின் தேர்தல் நியமனக் குழு நியமிக்கப்பட்டது. எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டமானது முன்னர் இடம்பெற்ற

கூட்டத்தில் மத்திய செயற்குழுவால் எடுக்கப்படாத விடயங்களை பரிசீலிப்பதற்காகவே கூட்டப்படுகிறது. எமது கட்சியின் தேர்தல் நியமனக்குழு 22ஆம் திகதிக்கு முன்பே கூடி எமது நியமனங்கள் தொடர்பான முடிவுகளை எடுக்கும் - என்றார்.

இவ்வாறு ஒரு கட்சிக்குள்ளேயே பலத்த கருத்து முரண்பாடுகள் நிலவுகின்ற நிலையில். தமிழர் கூட்டமைப்பு எவ்வாறு ஒரே சின்னத்தில் போட்டியிடப் போகிறது என்பது தான் அனைவரதும் எதிர்பார்ப்பு.

தமக்கிடையே உள்ள முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள முடியாத நிலையில் உள்ள கூட்டமைப்பினர் தென்னிலங்கையில் உருவாகியுள்ள சு.க. - ஜே.வி.பி. கூட்டுக்கு எவ்வாறு சாட்டையடி கொடுக்கப்போகின்றார்கள்?

சமாதானத்துக்கு எதிரான சக்திகளை ஓரங்கட்ட வேண்டிய முக்கியமான தேர்தலாக எதிர்வரும் தேர்தல் அமையப்

கடற்றொழில் ஆகிய பிரச்சினைகள் உட்பட தமிழ்மக்களின் பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒரே குரலாக எடுத்துரைத்துள்ளனர்.

இந்நிலையில். இடையே ஏற்பட்ட கருத்துமுரண்பாடுகளினால் கூட்டமைப்புக்குள் குத்துவெட்டுக்கள் உருவாகியுள்ளன.

கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் கூட்டணியின் தலைவர்


இதேவேளை -

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் சேர்ந்து கூட்டாகப் போட்டியிட வேண்டுமென தமிழர் கூட்டமைப்பு முன்வைத்திருக்கும் திட்டத்திற்கும் எதிர்பார்த்த நல்ல வரவேற்புக் கிடைக்கவில்லை. மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும். கொழும்பில் மலையக மக்கள் முன்னணியும் இத்திட்டத்தை முற்றாக நிராகரித்துள்ளன.

எனவே. தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை சரியாக வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு இப்போது கூட்டமைப்பின் பக்கம்தான் உள்ளது. இது விடயத்தில் மிகவும் நிதானமாகவும் நியாயமாகவும் செயற்படவேண்டிய பொறுப்பும் அவர்களுடையதே. தேர்தலில் அவர்கள் அதனைச் செவ்வனவே செய்ய வேண்டும்.

\- ராஜராஜன்

# அணுவாயுதத் தொழில்நுட்பம் கத்தரிக்காயா? கஞ்சாவா?



என்ன கத்தரிக்காய் வியாபாரமா பாகிஸ்தானில் நடந்தது!

பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் எல்லையில் – பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைக் கிராமங்களில் கஞ்சா வியாபாரம் நடைபெறுகிறது. மிகச் செழிப்பாக வளமாகப் பயிரிடப்படும் கஞ்சாச் செடிகள் தரும் வருமானத்தில் பாகிஸ்தான் பழங்குடிகள், பூர்வீக இனங்கள் தமது அன்றாடச் சீவியம் நடத்துகின்றன என்பது உண்மை தான்.

அப்படியானால் கத்தரிக்காய் வியாபாரம் யார் செய்கிறார்கள் என்று கேட்கிறீர்களா? குறை நினைக்காதீர்கள். கோழிகளுக்கு பறவைக் காய்ச்சல் பரவியபிறகு, கத்தரிக்காய் நெய்வதக்கல் சாப்பிடத் தொடங்கி விட்டனரா பாகிஸ்தானியர்கள் என்று ஊகிக்கிறீர்களா?

கோழிவதக்கல் அல்லது கத்தரிக்காய் நெய்வதக்கல் வாசனைச் சரக்குகளுடன் சேர்த்து ஆக்கப்பட்டு தரமுயர்ந்த, சம்பா அரிசிச் சோற்றுடன் பரிமாறப்படும் 'சூடான' உணவுக்கு நல்ல கிராக்கி பாகிஸ்தானில் இருப்பதாக யாரோ எனக்குச் சொன்னதும் ஞாபகம் வருகிறது.

கத்தரிக்காயும் கஞ்சாவும் ஒரு பக்கத்தில் கிடக்கட்டும்! அங்கே கள்ளச் சந்தையில் அணுவாயுத ஆராய்ச்சித் தொழிநட்பமல்லவா விற்கப்பட்டுள்ளது. யார் செய்தார்கள் என்றா கேட்கிறீகள்! ஒருவர் இருவர் செய்ய இது என்ன கத்தரிக்காய் வியாபாராமா?

ஆனால், இவ்விடயத்தில் ஒருவரின் பெயர் தான் அடிபடுகிறது. அவர்தான் அணு ஆராய்ச்சி விஞ்ஞானி அப்துல் காதீர்கான். பச்சையாகச் சொல்வதானால் பாகிஸ்தானின் அணுவாயுத விஞ்ஞானி. அதாவது, அணுகுண்டு விஞ்ஞானி. அவர் தான் பாகிஸ்தான் அணுவாயுத நாடாக மாறுவதற்கு மிகமுக்கிய காரணகர்த்தாவாக இருந்தவர். பாகிஸ்தானின் அணுகுண்டே முதல் இஸ்லாமிய அணுகுண்டு என்று சொல்லப்படுகிறது. அதனால்தான் அணுகுண்டு விஞ்ஞானியை பாகிஸ்தானிய மக்களும் இஸ்லாமிய உலகமும் "இஸ்லாமிய அணுகுண்டின் தந்தை" என்று போற்றினர். இன்றும் போற்றுகின்றனர். பாகிஸ்தானை அணுகுண்டு நாடாக்கிய 'பெரும் கர்த்தர்' அல்லவா? 'தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ' என்று சினிமாக் கவிஞர் ஒருவர் எழுதியிருந்தார். கோழியின் கால் சொத்தியென்றாலும் கோழிக்கறி ருசியாக இருந்தால் சரி என்று சொல்லுகிற தத்துவம் தான் ஞாபகம் வருகிறது.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜனாதிபதி பர்வேஷ முஷராப் என்ன கூறுகிறார் தெரியுமா?

'ஏதோ சின்னப்பிழை செய்து விட்டார் காதீர் கான். எங்கள் அணுகுண்டின் தந்தை! வெளிப்படையாக தொலைக் காட்சியில் தவறை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்கிறார். ஒரு பெரும் கனவான் செய்த அந்த, சின்னப்பிழையை மன்னிப்போம்! மறப்போம், மறைப்போம்..., என்ற பாணியில் முஷராப் கூற, பாகிஸ்தானின் மத அடிப்படைவாதிகளின் கடுமையான செல்வாக்குக்கு உட்பட்ட பாகிஸ்தான் நாடாளுமன்றமும் அமைச்சரவையும் – தமது அணுவாயுத விஞ்ஞானி அப்துல் காதீர்கான் பாகிஸ்தானின் அணுவாயு தொழில்நட்பத்தை வடகொரியா, ஈரான், இலிபியா ஆகிய நாடுகளுக்கு, அரசாங்கத்துக்குத் தெரிவிக்காமல் பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வழங்கிவந்தார் – என்கின்ற சமாச்சாரத்தை, ஒரு பூதாகரமான விடயமல்ல என்ற தோரணையில் மன்னிப்போம் என்று கூறிவிட்டன. அதனையடுத்து பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் – ஜனாதிபதி அவரை மன்னித்தும் விட்டார்.

ஆனால், இவ்விவகாரத்தையிட்டு ஆழ்ந்த கவலையும் அச்சமும் அடைந்திருக்கும் நாடு அமெரிக்காதான். இதனையிட்டு அமெரிக்க ராஜதந்திரிகள் அவ்வப்போது பாகிஸ்தானில் ஆட்சியிலிருந்த இராணுவ ஆட்சியாளர்களுடனும் ஜனநாயக ஆட்சியாளர்களுடனும் தொடர்புகளைப் பேணிவந்தனர். இவ்வாறான அணுவாயுதத் தொழில்நட்பங்களை விற்பனை செய்யும் கள்ளச்சந்தை வியாபார வலையமைப்பின் இரகசிய மையமாக பாகிஸ்தானும் அதன் அணுவாயுத விஞ்ஞானிகளும் – குறிப்பாக அப்துல் காதீர்கானும் – மேலும் பல பாகிஸ்தானிய இராஜதந்திரிகளும் மிகத்திட்டமிட்டு வேலை செய்கிறார்கள் என்பதையும் 'பட்டும் படாமலும்' மறைமுகமாகத் தெரிவித்து வந்தது அமெரிக்கா.

பாகிஸ்தானின் பரமவைரியும் வரலாற்று எதிரியுமான இந்தியா, 1974இல் நியூக்கினியர் சாதனத்தினை வெடித்துப் பரீட்சித்துப் பார்த்ததைத் தொடர்ந்து, இந்தியா அணுவாயுதத்தை (அணுகுண்டை) விரைவில் தன்கையில் ஏந்தப்போகிறது என்பதை பாகிஸ்தானும் வல்லரசுகளும் அச்சம் கலந்த தயக்கத்துடன் பார்க்கத் தொடங்கின.

அக்காலப்பகுதியில் தான் பாகிஸ்தானின் விஞ்ஞானி அப்துல் காதீர்கான் தன்னுடைய தூரதிருஷ்டித்தனமான வேலைத் திட்டத்தை தொடங்குகிறார். அடிப்படையில் இஸ்லாமிய அடிப்டைவாதியான கான், கொம்யூனிஸ் சித்தாந்தத்தையும் கற்றவர் எனக் கூறப்படுகிறது.

கான், அக்காலப்பகுதியில் (ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்பு) நெதர்லாந்து நாட்டிலுள்ள மிக அந்தரங்கமான, அணுவீச்சு மூலகம் யுரேனியத்தை பாகுபடுத்தும், பதப்படுத்தும் விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் ஆய்வுகூடத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பாகிஸ்தானின் வரலாற்று எதிரி இந்தியா, அணுவாயுதம் ஏந்தும்போது, பாகிஸ்தான் 'வாழாவெட்டியாக' இருந்தால், பாகிஸ்தான் என்றொரு

**கான்,** தான் ஆராய்ச்சி மேற்கொண்டிருந்த நெதர்லாந்து ஆய்வு கூட நிர்வாகத்தினருக்கு 'தண்ணி காட்டி விட்டு' அணுவாயுதத் தயாரிப்பின் முக்கிய கட்டங்களில் ஒன்றான. யுரேனியத்தை பதப்படுத்தி எடுக்கும் தொழில்நுட்பங்கள் அடங்கிய ஆவணங்களைத் திருடியெடுத்துக்கொண்டார்.....

நாடே உலக வரைபடத்திலிருந்து அகற்றப்படும் காலம் வந்துவிடும் என்பதை உணர்த்த, அன்று இளமைத்துடிப்போடு தேசிய உணர்வெழுச்சியுடன் இருந்து செயற்பட்ட கான், தான் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருந்த நெதர்லாந்து ஆய்வுகூட நிர்வாகத்தினருக்கு 'தண்ணிகாட்டி விட்டு' அணுவாயுதத் தயாரிப்பின் முக்கிய கட்டங்களில் ஒன்றான யுரேனியத்தை பதப்படுத்தியெடுக்கும் தொழில்நட்பங்கள் அடங்கிய ஆவணங்களைத் திருடியெடுத்துக் கொண்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

மிக அந்தரங்கமான அந்த நெதர்லாந்து ஆய்வு கூடத்திலிருந்து இந்த ஆவணங்களை (Blue Prints for Enriching Uranium) திருடி, பாகிஸ்தானுக்குள் வந்து சேர்ந்த கான், அணுகுண்டு தயாரிப்புக்குத் தேவையான எரிபொருளை

## மாட்டிக் கொண்டார் பாகிஸ்தானின் அணு விஞ்ஞானி

(The fuel to make Atomic bombs) போதியளவு உற்பத்தி செய்வதற்கான, ஆய்வு கூட வசதிகளையும் அணு ஆலைகளையும், மிகமிகப் பாதுகாப்பான சுவர்களுக்குள் அமைத்து, அந்தரங்கமான அணுவாயுத உற்பத்திக்கான வேலைத்திட்டத்தில் தனது அயராத கடின உழைப்பை வழங்கத் தொடங்கினார்,

தன்னுடன் பொருத்தமான பாகிஸ்தானிய இளம் ஆராய்ச்சியாளர்களையும் விஞ்ஞானிகளையும் இணைத்துக்கொண்டார்; பல பாகிஸ்தானிய விஞ்ஞானிகளை உருவாக்கினார். பாகிஸ்தானின் முப்படைத் தளபதிகள் அதிகாரிகள் மத்தியில் பெரும் மதிப்புக்குரியவரானார். பாகிஸ்தானின் ராஜதந்திரிகள் அரசியல் வாதிகளின் அன்புக்கும் ஆழமான நட்புக்குமுரியவரானார்.

விஞ்ஞானி அப்துல் காதீர்கானும் அவரது சக விஞ்ஞானிகள், அணுவாராய்ச்சி தொழில்நட்ப வல்லுநர்கள் ஆகியோர் இணைந்து நிர்வகித்துச் செயற்பட்ட ஆய்வுகூடத்தொகுதிகளின் தளத்துக்கு, பின்பு 'ஏ.கியு.கான் ஆராய்ச்சி ஆய்வுகூடங்கள்' (A.Q.Khan Research Laboratories - KRL) என்றே பெயரிடப்பட்டது.

இந்தியா தனது அணுவாயுத ஆராய்ச்சிகளை விரிவாக்கி துரிதப்படுத்தி அணுவாயுத நாடாக பரிணமித்துக்கொண்டிருந்த அதேகாலப் பகுதியில், பாகிஸ்தானும் சமாந்தரமாக அதே நிலைமையை எட்டிக் கொண்டிருந்தது. இந்தியாவின் இந்துத்துவ கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வாஜ்பாய், இந்தியாவை அணுவாயுத நாடாக அறிவித்த சொற்பகாலத்துக்குள், பாகிஸ்தானின் பலுச்கிஸ்தான் மலைப பிராந்தியத்தின் பாலைவனத்தின் நிலத்தடியின் கீழ் (beneath the scorched desert hills of Baluchistan), 1998இல் பாகிஸ்தான் அரசாங்கம். தனது முதலாவது அணுகுண்டு வெடிப்புப் பரிசோதனையை, தனது மூன்று தசாப்த முயற்சியின் சாதனையாக செய்து காட்டியது. அதாவது அப்துல் காதீர்கான் செய்து காட்டினார். அணுஆயுத நாடான இந்தியாவுக்கு சளைக்காத வகையில் பாகிஸ்தானும் தனது இராணுவச் சமநிலையைப் பேணுவதற்கு மூலமுழுமுதலாக கான் விளங்கினார் என்பது அழியாப் புகழாகியது.

இவ்வாறு அழியாப் புகழையும் நற்பெயரையும் பாகிஸ்தானியரிடம் சம்பாதித்துக் கொண்ட அணுவிஞ்ஞானி அப்துல் காதீர்கான் என்ற ஒரு தனிமனிதனின் தொடக்குகையும் முயற்சியும்தான் பாகிஸ்தானை அணுவாயுத நாடாக்கப் போகிறது என்று அமெரிக்காவின் புலனாய்வுத்துறை உள்ளிட்ட பெரும்பாலோர் எதிர்பார்க்கவில்லை என்று கூறப்படுகிறது. அமெரிக்கா உள்ளிட்ட அனைவரும் பாகிஸ்தானின் மற்றொரு நட்பு நாடாக சீனா விளங்குவதால், (அதேவேளை பாகிஸ்தானின் எதிரிநாடான இந்தியாவுடனும் சீனா எதிரிநாடாக விளங்கியதால்) சீனாவே அணுவாயுதத் தொழில்நட்பத்தை பாகிஸ்தானுக்கு விற்றுவந்ததாக எண்ணியிருந்த அமெரிக்காவின் CIA புலனாய்வு நிறுவனம், 1976இல் ஓர் உண்மையை அறிந்து கொண்டது.

நெதர்லாந்தின் அணுவிஞ்ஞான ஆய்வு கூடத்திலிருந்து, அணுகுண்டு தயாரிப்பு தொடர்பான முக்கிய ஆவணங்களை கான் திருடிவிட்டார் என்ற குற்றச்சாட்டை நெதர்லாந்து அரசாங்கம் முன்வைத்து, 1970களின் பிற்பகுதியில் தமது நாட்டு நீதிமன்றத்தில் கான் பிரசன்னமாகாமலேயே வழக்கு தொடுத்திருந்தது. பின்னர் சில நட்பமுறைமைகளை கையாண்டு கான் குற்றவாளியென்ற தீர்ப்புக்குள்ளாகாமல் தப்பினார்.

அன்று தொட்டு CIA, இவர்மீது கண்வைத்தது. ஆனால், அன்றைய பனிப்போர் கால உலக ஒழுங்கில், சோவியத் யூனியனின் செல்வாக்கோடு சோவியத் இராணுவப் படையணிகளின் பிரசன்னத்தோடு ஆப்கானிஸ்தான் அரசாங்கம் அமெரிக்க ஆதரவு பாகிஸ்தான் சர்வாதிகார அரசுக்கு சவாலாக விளங்குகையில் –

இந்தியாவின் இந்திராகாந்தி போன்ற துணிகரமான பிரதமர்களின் வெளிநாட்டுக் கொள்கைகள் சோவியத் சார்புத்தளத்தை நாடியிருந்த அக்கால உலக ஒழுங்கில் –

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இலங்கையில் அரசாங்கத் தலைமையேற்றிருந்த அமெரிக்க ஆதரவான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போன்ற தலைவர்களுக்கு எதிராக சோசலிஷ சித்தாந்த அணுகுமுறைகளுடன் தமிழ்ப்போராட்ட அமைப்புகள் எழுச்சி கொண்ட அக்கால கட்டங்களில் தெற்காசியாவின் உற்ற தோழனாக அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் கிடைத்திருந்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் மீதும் பாகிஸ்தான் விஞ்ஞானியான அப்துல் காதீர்கான் போன்றவர்கள் மீதும் அதிகளவு எச்சரிக்கைத் தொனியில் அமையாத, நேர்த்தன்மையான நட்பின் அடிப்படையிலான ஓர் அணுகு முறையையே 1970களின் பிற்பகுதியிலும் 1980களிலும் அமெரிக்க புலனாய்வாளர்களும் இராஜதந்திரிகளும் கடைப்பிடித்திருந்தமை யதார்த்தமாகும்.

இக்காலப்பகுதியில் பாகிஸ்தான் தனது அணுவாயுத தொழில்நட்பங்களையும் அது சார்ந்த ஏவுகணைத் தொழில்நட்பங்களையும் மேற்கொண்டு வளர்ச்சி காண்பதில் மூலப்பாகங்கள், பொருத்து பாகங்கள், உதிரிப்பாகங்கள், போன்றன விநியோகிக்கப்படுவதற்காக, உலகின் முக்கிய கேந்திரங்களை இணைக்கும் போக்குவரத்து, தொலைத்தொடர்புப் பாதை வலையமைப்பு ஒன்றை இரகசியங்கள் அம்பலமாகாத வகையில் பேணவேண்டியிருந்தது.

இந்த வலையமைப்பைத் தான் இனங்கண்டு அமர்த்திய திறமைசாலிகளான இராஜதந்திரிகள், புலனாய்வாளர்கள் மூலம் உருவாக்கி பேணி வளர்த்து பயன்பெற்ற தலைமையாளர் அணு விஞ்ஞானி கான் ஆவார். இவர்களுள் பாகிஸ்தானியர்களும் வெளிநாட்டவர்களும் இருந்தனர். மத்திய கிழக்கின் ஆயுதக் கம்பனியைச் சார்ந்தோர் மற்றும் பல இடைத்தரகர்கள் மூலமாக அமெரிக்கா, கனடா, ஐரோப்பா ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் தேவையான பொருத்து பாகங்கள், உதிரிப்பாகங்கள் அப்துல் காதீர் கானால் பெறப்பட்டுள்ளமை தெரியவருகிறது.

வடகொரியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் இடம்பெற்ற ஆயுத பேரங்களில் விஞ்ஞானி கான் முக்கிய பேராளராக விளங்கினார் என்று அமெரிக்கா கூறுகிறது. 1994இல் வடகொரியா அமெரிக்காவுடன் செய்து கொண்ட இணக்கப்பாட்டின்படி, வடகொரியா தனது 'அணுவாயுத எரிபொருள் பதப்படுத்தி மீள்வடிகட்டல்' செயற்பாடுகளை (Nuclear - Fuel Reprocessing) தனது அணுஉலைகளில் நிறுத்தி முடக்கிவைக்க இணங்கியிருந்தது.

அமெரிக்காவுடனான இணக்கப்பாட்டை வடகொரியா மூன்று ஆண்டுகளின் பின் முறித்துக்கொண்டது. யூரேனியத்தைப் பதப்படுத்துவதற்குரிய தொழில்நட்ப அறிவையும் உபகரணங்களையும் பாகிஸ்தான் வடகொரியாவுக்கு வழங்கியது. அதற்குப் பதிலாக வடகொரியா, ஆயிரம் கிலோமீற்றர்கள் வீச்சுக் கொண்ட, அணுவாயுதங்களைப் பொருத்தி ஏவக் கூடிய நொடொங் ஏவுகணைகளை (Nodong Missiles) பாகிஸ்தானுக்கு வழங்கியது.

விஞ்ஞானி அப்துல் காதீர்கானின் ஆய்வுகூடம் அந்த ஏவுகணைகளில் பொருத்தமான சிறு மாறுதல்களைச் செய்து 'கவ்றி' ஏவுகணை (Ghauri) எனப் பெயரிட்டது. வடகொரியாவுடனான பேரம் பேசல்களுக்காக கான் பல வருடங்களில் பல தடவைகள் (பன்னிரு தடவைகளுக்கு மேல்) வடகொரியாவுக்கு விஜயம் செய்துள்ளார் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டுகிறது.

மேலும் மேற்கத்தைய புலனாய்வாளர்கள் கான், ஈரானின் புஷ்சர் (Bushehr) அணு ஆலைக்கு பல இரகசிய விஜயங்களை மேற்கொண்டிருந்தார். எனக் கூறுகின்றனர். 1980களின் பிற்பகுதியில் ஈரான் தனது அணுவாயுத உற்பத்திச் சோதனை நடவடிக்கைகளில் தோல்வி கண்டிருந்தது. ஆனால், சர்வதேச அணுச்சக்தி முகவரகத்தின் (International Atomic Energy Agency - Iaea) விசாரணையாளர்கள் கடந்த ஆண்டில் ஈரானில் நடத்திய சோதனைகள், விசாரணைகளின்போது ஈரான் மீளவும் அணுவாயுத ஆராய்ச்சி, வளர்ச்சி நடவடிக்கைகளை முயற்சித்து நடத்திவருவதை உணர்கின்றனர்.

இந்த நடவடிக்கைகளில் பாகிஸ்தானின் தொழில்

(அடுத்த பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்



# தமிழ்ப் பதிப்புலகில் நூற்றாண்டுகாலம்

மூன்றாண்டுகளுக்குமுன் 2001 ஆம் ஆண்டு தையில் நடந்த 24 ஆவது சென்னை புத்தகக் கண்காட்சியில் நூற்றாண்டு கண்ட முதலாவது தமிழ்ப்பதிப்பகம் எனப் பாராட்டும் விருதை மயிலாப்பூர் அல் லயன்ஸ் நிறுவனம் பெற்றுக் கொண்டது. 1896 இல் எழுதுபொருள் கடையாகத் தொடங்கி. 1901 இல் பதிப்பகமாக மிளிர்ந்த அல்லயன்ஸ் நிறுவனத்தைத் தொடங்கிய குப்புசாமியின் மகன் கே.வி.எஸ்.மணி விருதைப் பெற்றுக்கொண்டார்.

தமிழ்நூல் பதிப்புத் தொழிலில் ஒருநூற்றாண்டு காலம் தொடர்ச்சியாகப் பணிபுரிவதென்பது மிக எளிதான ஒன்றல்ல. ஒரு புத்தகத்தை வெளியிடுவதே குழந்தையைப் பெறுவது போன்ற கடினமான உழைப்புத் துன்பமும் ஆன்ம உணர்வு இன்பமும் தரும் பணியாக அமைகையில். நூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து பற்பல தமிழ் நூல்களை வெளியிடும் பணி. அதுவும் தந்தை. மகன். பேரன் என மூன்று தலை முறையினரின் பணி பாராட்டுக்குரியதே.

அக்கண்காட்சியை நடத்தியகாலத்தில் தென்னிந்திய புத்தக விற்பனையாளர். பதிப்பாளர் சங்கத்தின் (தெபுவிபச) செயலாளராக இருந்தவர் சிறீனிவாசன். அவரே அல்லயன்ஸ் பதிப்பகத்தின் ஆட்சியராகவும் இருந்தார். முதன் முறையாக இச்சங்கம் இத்தகைய விருது ஒன்றை அந்த ஆண்டுதான் வழங்கியது. நூற்றாண்டு கண்ட ஒரே தமிழ்ப்பதிப்பகம் என்பதே விருதின் பெயராகும்.

தமிழ்ப்பதிப்பகங்கள் நூற்றாண்டு காலத்துக்கு மேல் தொடர்ந்து நீடித்து வருகின்றன என்ற செய்தியை உலகுக்கு எடுத்துக்கூறி உற்சாகத்தை ஊட்டியதுடன். இடையறாது. சலிப்பின்றி உழைத்தால் இத்தகைய சாதனைகளை ஏனைய தமிழ்ப்பதிப்பாளரும் செய்யமுடியும் என்ற தன்நம்பிக்கையையும் இந்நிகழ்வு வளர்த்தது. அந்தவகையில் தெபுவிப சங்கத்தாரைப் பாராட்டவேண்டும்.

ஆனாலும். நூற்றாண்டு கண்ட தமிழ்ப்பதிப்பகம் அல்லயன்ஸ் மட்டும் தானா என்ற வினாவைச் சங்கம் எடுத்து நோக்கியதாகத் தெரியவில்லை. மகன் செயலாளராக இருக்கும் ஓர் அமைப்பு. அவரின் தந்தைக்கு விருதை வழங்குகிறதே!

உயர் பொறுப்பில் உள்ள ஒருவர் தன் குருதி வழி உறவினருக்குக் காட்டும் தனிச்சலுகை (nepotism) என்ற கருத்து வந்து விடுமே! என்ற அச்ச உணர்வுகளும் சங்கத்துக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

விருது வழங்கிய 2001 ஆம் ஆண்டில் நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தமிழ் நூல்களைத் தொடர்ச்சியாகப் பதிப்பித்து வந்த நிறுவனங்கள் நான்குக்கு மேல் இருந்தன. அவற்றை இங்கு குறிப்பிடுவதும். அவை தொடர்பான விவரங்களைத் தருவதும் பயனுள்ளதாகும். தமிழ்ப் பதிப்பு முயற்சி வரலாற்றுக்கு அணி சேர்ப்பதுமாகும்.

## பைபிள் சொசைட்டி

கி.பி.1811 இல் கொல்கத்தாவில் தொடங்கிய பைபிள் சொசைட்டி. பைபிளுக்கான தமிழ் மொழிபெயர்ப்புக்களை வெளியிடத்தொடங்கியது. 1820 இல் சென்னையில் இதற்கு அலுவலகம் அமைத்து. இன்றுவரை பைபிளுக்கு பல தமிழ் மொழிபெயர்ப்புக்களை வெளியிட்டுள்ளது.

கி.பி.1841 இல் யாழ்ப்பாணத்திலிருந்து பீற்றர் பேசிவல் பாதிரியார். சென்னைக்கு ஆறுமுகநாவலருடன் விவிலியத் திருப்புதலைக் கொணர்ந்தார். சென்னையில் இத் தமிழாக்கம் பரிசீலிக்கப்பெற்று. 1842 ஆம் ஆண்டளவில் பைபிள் சொசைட்டியால் பதிப்பிக்கப்பட்டது.



அண்மையில் 1995 ஆம் ஆண்டு வெளிவந்த திரு விவிலியம் பொது மொழி பெயர்ப்பு முயற்சிக்கும் பைபிள் சொசைட்டியே 1968 முதலாகக் காரணராக இருந்ததை நோக்கும் பொழுது. தமிழில் நூல்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருபவர்களுள் இவர்களையும் அடக்கிவிடலாம். கி.பி.2011 இல் இரு நூற்றாண்டுகள் நிறைவு விழாவை. அதுவும் தமிழ்ப்பதிப்புகளை இருநூறு ஆண்களாகத் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் விழாவைக் கொண்டாடுவோம் என்கிறார் அதன் சென்னைப் பொறுப்பாளர் வணக்கத்துக்குரிய முனைவர் எபி சாமுவேல்.



யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக.நாவலர் நிறுவிய பதிப்பகத்துக்கு இந்த ஆண்டு தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினர் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

தமது 27 ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சியில் 09.01.2004 அன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அறக்கட்டளை அறங்காவலர் சிதம்பரம் சுவாமிநாதன் கேட்டுக்கொண்டதற்கிணங்க மூதூர் கோ.இரத்தினசிங்கம் அவர்கள் விருதைப் பெற்றுக்கொண்டார்.

இந்திய அரசின் திட்டக்குழு உறுப்பினர் முனைவர் வேங்கட சுப்பிரமணியன் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் எழுத்தாளர் ஜெயகாந்தன் விருதை வழங்க, இரத்தினசிங்கம் பெற்றுக்கொண்டார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு போராட்டத்தையே நடத்தி உண்மையை வெளிக்கொணர்ந்ததால் இவ்விருது இந்த ஆண்டு ஆறுமுகநாவலர் அறக்கட்டளைக்குக் கிடைத்தது.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்பு

கி.பி. 1849 இல் சூடாமணி நிகண்டு நூலைப் பத்துத் தொகுதிகளாகச் சென்னையிலே பதிப்பித்து தன் பதிப்பு முயற்சிகளைத் தொடங்கியவர் ஆறுமுகநாவலர். கி.பி.1851 இல் யாழ்ப்பாணத்தில் நிறுவிய ஆறுமுகநாவலர் வித்தியா நுபாலன யந்திரசாலை அதன் நீட்டமாக கி.பி. 1870 இல் சென்னை தங்கசாலைத் தெருவில் நிறுவிய ஆறுமுகநாவலர் வித்தியா நுபாலன யந்திரசாலை இன்றும் அதே தெருவில் அதே பெயரில் இருப்பதையும் இன்றுவரை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்புகளாகத் தமிழ் நூல்களை இடையின்றிப் பதிப்பித்துவருவதும் கண்கூடு.

ஆக. மொத்தமாக 68 தமிழ் நூல்கள் அப் பதிப்பகம் மூலமாக இதுவரை வெளிவந்துள்ளன. அவற்றுள் பல நூல்கள் முப்பதுக்கும் அதிகமான மறுபதிப்புக்களைக் கண்டுள்ளன. முதலாம் சைவ வினாவிடை இருநூற்றுக்கும் அதிகமான பதிப்புக்களைக் காண யாழ்ப்பாணம். கொழும்பு. சென்னை. திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள பிற பதிப்பகங்களும் உதவின. 1965 இல் முதல் பதிப்பைக் கண்ட இலக்கண வினாவிடை 1995 இல் தனது 28 ஆவது பதிப்பைக் கண்டது. சைவசமயம். தமிழ் மொழியியல். அகராதி. பூமிசாஸ்திரம் என அப் பதிப்பகத்தின் பாடவகைப் பரப்பும் விரிந்தது.

154 ஆண்டுகளாகத் தொடர்ந்து நல்ல தமிழ்ப் பதிப்புக்களை வெளியிட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்பு நூல்களின் வகைக்கு மட்டுமல்ல. பிழைகளற்ற பதிப்பு. சுத்தத் தமிழ்ப் பதிப்பு என்ற சிறப்புக்களுக்கு உரியதாயும் பின்வந்த பல தமிழ்ப்பதிப்பகங்களுக்கு வழிகாட்டியாயும் இருந்துள்ளது என்கிறார் சிதம்பரம் ஆறுமுகநாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையின் முன்னாள் தலைமை ஆசிரியரும் குன்றக்குடி அடிகளாருக்குப் பின்னர் தமிழ்நாட்டில் ஆறுமுகநாவலர் அறக்கட்டளையின் அறங்காவலராகப் பொறுப்பு வகிப்பவருமான க.சுவாமிநாதன்.

## கிறிஸ்தவ இலக்கியக் கழகம் (சி.எல்.எஸ்.)

கி.பி.1858 இல் தொடங்கிய கிறிஸ்தவ இலக்கியக் கழகம் தொடக்கத்தில் துண்டு வெளியீடுகளையே கொணர்ந்ததாயினும். பின்னர் தமிழ்ப் பதிப்பின் அனைத்துப் பாடவகைகளிலும் நூல்களை வெளியிட்டது. வி.க. போன்ற சிறந்த படைப்பாளிகள் பலரின் வாழ்க்கை வரலாறுகளைப் பதிப்பித்ததுடன். அண்மைக்காலத்தில் தலைசிறந்த படைப்பாளிகளின் நூல்களை வெளியிடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டிவருகிறது என்கிறார் அங்கு தமிழ்ப் பதிப்பாசிரியராகப் பணிபுரியும் திருமதி சுவீட்லின பிரபாகரன்.

145 ஆண்டுகள் தமிழ்ப் பதிப்புலகில் தொடர்ச்சியாக நூல்களை வெளியிட்டுச் சாதனை புரிந்துவரும் கிறிஸ்துவ இலக்கியக் கழகத்தின் பொறுப்பாளராக அண்மைக்காலம் வரை தயானந்தன் பிரான்ஸிஸ் இருந்தார்.

## யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை

யாழ்ப்பாணத்தில் கி.பி.1881 இல் தொடங்கிய சைவப்பிரகாச யந்திரசாலை இன்றுவரை இடையறாது தமிழ் நூல்களைப் பதிப்பித்து வருகிறது. அண்மையில் புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய மறுதோன்றி அச்சகத்தையும் கணிப்பொறிசார் பக்கமாக்கலையும் தன்னகத்தே தாங்கியுள்ளது. இந்துசாதனம் என்ற தமிழிதழையும் இந்து ஓர்கன் என்ற ஆங்கில இதழையும் நடத்திவருகின்றது. அதுவும் போர்ச் சூழ்நிலை காலத்தையும் தாங்கி. தளராது தமிழ்ப் பதிப்பு முயற்சியை மேற்கொண்டு வருகின்றது. தமிழ்மொழி. சைவசமயம். சங்கநூல்கள். அகராதிகள். புனைகதை. கவிதை. புவியியல். அறிவியல். வாழ்க்கை வரலாறு. தன்னம்பிக்கை. மருத்துவம் எனப் பன்முகத் தமிழ்ப் படைப்பாளிகளுக்குப் பதிப்புக்குக் களம் அமைத்துக்கொடுக்கிறது சைவப்பிரகாச யந்திரசாலை.

122 ஆண்டுகளாகத் தமிழ்நூல் பதிப்பு முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவரும் சைவப்பிரகாச யந்திரசாலை ஈழத்து வாசகர்களை நோக்கியே அமைந்ததால் தமிழகத்தில் உள்ள ஒரு சிலரைத் தவிரப் பலரின் கண்களில் படாதமை வியப்பல்ல என்கிறார் அந்த அமைப்பின் ஆட்சியருள் ஒருவரும் யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தியாலய அதிபருமான கே.கனகசிங்கம்.

தெற்காசியாவிலேயே முதன்முதல் தமிழ் நூல் ஒன்றுதான் அச்சுவாகனம் ஏறியது. அன்று தொடக்கம் தமிழில் அச்சிட்டுப் பதிப்பிக்கும் வழக்கம் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்கிறது. எனினும். நூற்றாண்டு காணும் அளவுக்கு தொடர்ச்சியாக மேற்காணும் ஐந்து நிறுவனங்களையுமே இப்பொழுது அடையாளம் காண முடிகிறது. அந்தவகையில் அல்லயன்ஸ் ஐந்தாம் இடத்தையே பெறுகிறது. தெபுவிபசவின் உறுப்பினரிடையே நூற்றாண்டு கண்ட நிறுவனம் என விருதை வழங்கியிருப்பதே முறையாகும். எனினும். முறைப்படுத்தக் காலம் கடந்துவிடவில்லை. மற்ற நான்கு நிறுவனங்களுக்கும் இந்தக் கண்காட்சியிலாவது (2004) விருது வழங்கிச் சிறப்பிப்பது தெபுவிபசவின் கடமையாகும். ★

*(அமுதசுரபி இதழில் மறவன்புலவு க.சச்சிதானந்தன் வரைந்த கட்டுரை இது.)*

# எழுவீர்; மீண்டும் துயில்வீர்!

கனவுலகில் எம்மை விட்டுச் சென்ற கனவான்,
கனவு கலைக்க வருகின்றார்; எழுந்திடுவீர்!
துயில்கொள்ள நான்காண்டு விட்டு,
எங்கோ தொலைந்தவர்,
இதமான பூபாளம் பாடி
எமையெழுப்ப வருகின்றார் – எழுந்திடுவீர்!

"இவரா அவர்" என்று மலைக்காதீர்
இவரேதான்
இருசுற்றுப் பெருத்துவிட்டார் – எப்படியோ
எமை ஏய்த்து, தமை வளர்த்த
தடியான உடல் தாங்கி வருகின்றார்.

புதிதாக மூடையொன்று சுமந்து வருகின்றார்
அதற்குள்,




"எது உண்டு?" என்று குடையாதீர் – நேரம் வீண்
பொய்மைக்கும் புழுகுக்கும் புதிய மெருகூட்டி
எம்மை மயக்க வருகின்றார்.

நான்காண்டு முன்னே "தேனாறு பாயும்
நமக்குன்தன் புள்ளடியைத் தந்துவிட்டால்" – என்று
பேனாவும் நாவும் பிரச்சாரம் செய்ய,
நாவூறி நிற்கவைத்த நாயகனார் வருகின்றார்.

கற்பனையில் எம்மை மிதக்கவிட்டு – அதிகாரக்
கதிரைக்குச் சதுரங்கம் ஆடும்
அற்புத விளையாட்டுக் காட்டி
ஐயா வருகின்றார்.
தப்பாது வாக்களிக்க எழுவீர் –அதைத்
தந்துவிட்டு மீண்டும் துயில்வீர்!

- புத்தூர் வே.இளையகுட்டி.



# இனிக் கார்கள் வானிலும் பறக்கும்!

வாகன நெரிசல்களுக்கு விடிவு காலம் ஏற்படுத்தும் கண்டுபிடிப்புக்களில் ஒன்றுதான் பறக்கும் கார்கள்.

அதிவேக. பாதுகாப்பான பயணம். எரிபொருள் சிக்கனம் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு பறக்கும் கார்கள் தயாரிப்பில் விஞ்ஞானிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். போக்குவரத்துத் துறையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் பறக்கும் கார்கள் இருக்கும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இளைய தலைமுறையினரின் கனவு வாகனமாகத் திகழும் பறக்கும் கார்கள் பற்றிய கட்டுரையின் இரண்டாவது பகுதி இது.

1962ஆம் ஆண்டு ஜோர்ஜ் ஜெட்சன் என்ற அமெரிக்கர் பறக்கும் கார் போன்ற வாகனத்தில் பறந்த காட்சி தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது. இதைப் பார்த்த நேயர்கள் வியப்பில் ஆழ்ந்தனர். பறக்கும் கார்கள் பற்றிய ஆய்வும் அதை வடிவமைக்கும் பணியும் இறுதிக் கட்டத்தை நெருங்கி விட்டது. பல தொழில்நுட்ப வல்லுநர்களும் நிறுவனங்களும் பறக்கும் கார்களை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## ஸ்கை ரைடர் (Sky rider)

அமெரிக்காவில் ஹனட்ஸ் வில்லே நகரில் உள்ள மேக்ரோ இண்டஸ்ரீஸ் நிறுவனம் 'எக்ஸ் 2 ஆர் ஸ்கை ரைடர்' என்ற பறக்கும் காரை வடிவமைத்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பறக்கும் கார் செங்குத்தாக மேல் எழும்பும். செங்குத்தாகத் தரையிறங்கும் திறன் கொண்டது. இரண்டுபேர் அமரும் வகையிலும் 5 மற்றும் 7பேர் அமரும் வகையிலுமாக ஸ்கை ரைடர் வடிவமைத்துக்கொண்டு இருப்பதாக இந்த நிறுவனம் கூறியுள்ளது.

ஸ்கை ரைடர் அதிநவீன தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதனை இயக்கும் விதமும் எளிதானது. இந்தப் பறக்கும் காரை செலுத்துபவர் காரில் ஏறி அமர்ந்ததும் செல்லவேண்டிய இடத்தின் முகவரி அல்லது எந்த இடத்துக்குப் போகிறோமோ அதன் தொலைபேசி எண் மட்டும் சொன்னாலே போதும் என்கிறார்கள். ஏனையவற்றை ஸ்கை ரைடர் பார்த்துக்கொள்ளும். முழுக்க முழுக்க தானியங்கி முறையில் இயங்கினாலும் வாய்மொழி வார்த்தையாக நாம் இடும் கட்டளையையும் ஏற்றுக்கொண்டு இந்தக் கார் பறக்கும்.

'ஸ்கை ரைடர் எஸ் - 2 ஆர்' ரக கார்கள் அடுத்த ஆண்டு (2005) முதல் . பெருமளவில் தயாரிக்கப்படும் என்றும் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் இது முழுமையாக வீதிகளை ஆக்கிரமித்துக்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.


## எக்ஸ் ஹாக்

இஸ்ரேலைச் சேர்ந்த டாக்டர் ரபி யோலி என்பவர் தலைமையிலான குழு நவீன பறக்கும் கார்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. கம்பி மூலம் இயங்கும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாகி வரும் பறக்கும் காருக்கு 'சிட்டி ஹாக்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதேபோல். எக்ஸ்ஹாக் என்ற பெயரில் மற்றொரு பறக்கும் காரை வடிவமைக்கும் பணியும் நடந்து வருகிறது. எக்ஸ் ஹாக் வகை பறக்கும் கார் செங்குத்தாக மேலே எழும்பி செங்குத்தாகக் கீழ் இறங்கும் வி.டி.ஓ.எல் முறையைப் பின்பற்றித் தயாரிக்கப்பட்டு வருகிறது.



எம் 200 எக்ஸ் - பறக்கும் காரின் முன்னோடி. 1989 ஆம் ஆண்டு 50 அடி உயரத்தில் பறந்தபோது எடுத்த படம்.

சிட்டி ஹாக் ரக பறக்கும் கார்கள் வானில் மணிக்கு 145 முதல் 161 கிலோ மீற்றர் வேகம் வரை செல்லும் திறன் கொண்டது. வானில் பறக்கும் போது ஏதாவது ஓர் இயந்திரம் பழுதானாலும் மாற்றும் இயந்திரம் மூலம் இயங்கும் திறன் கொண்டது. எதிர்காலத்தில் வான் வாடகைக் காராக (Sky Tacy) இது பயன்படும் என்று பொறியியல்துறை வல்லுநர்கள் கூறுகின்றனர்.



விமானங்கள் பறக்கும்போது ஓர் இயந்திரம் பழுதானால் மற்றோர் இயந்திரம் மூலம் தொடர்ந்து பறக்கவும் பத்திரமாகத் தரையிறங்கவும் வசதிகள் உள்ளன. அதேபோல எம்.-400 ரக ஸ்கை காரில் 8 தனித் தனி இயந்திரங்கள் உள்ளன. இதில் ஒன்று அல்லது இரண்டு பழுதானாலும் மற்றைய இயந்திரங்கள் மூலம் தொடர்ந்து பயணஞ் செய்யமுடியும்.

பறக்கும் காரின் கட்டுப்பாடுகள் அனைத்தும் கணனியினால் கையாளப்படுகின்றன. எனவே, பிரதான கணனியில் கோளாறு என்றால் அதனைச் சமாளிப்பதற்கு வேறு இரண்டு மேலதிக கணனிகள் பொருத்தப்பட்டுள்ளன.

வானில் பறக்கும்போது ஏதாவது கோளாறு ஏற்பட்டு பறக்கும் கார் செயல் இழந்து போனாலோ அல்லது தொடர்ந்து வானில் பறக்க முடியாத நிலை ஏற்பட்டாலோ அதில் இருந்து தப்பிக்க 'பரசூட்' வசதியும் உள்ளது. இந்தப் பரசூட்கள் காருடன் நம்மையும் சேர்த்து பத்திரமாகத் தரையிறக்கி விடும்.

## எயர் கார்

1999ஆம் ஆண்டு கென்னத் வெர்னிக்கே என்பவர் விண்தொழில்நுட்பம் என்ற நிறுவனத்தைத் தொடங்கி சின்ன இறக்கைகளைக் கொண்ட பறக்கும் காரை வடிவமைத்தார். எயர் கார் என்று பெயரிடப்பட்ட இந்தப் பறக்கும் கார் வானில் மணிக்கு 322 கிலோ மீற்றர் முதல் 644 கிலோ மீற்றர் வேகம் வரை பறக்கும் திறன் கொண்டது. தரையில் மணிக்கு 105 கிலோ மீற்றர் தூரத்தையும் கடக்கும் திறன் கொண்டது.

## சோகோல்

சமீபத்தில் பிரால்கோ சாரக் என்ற முதுநிலை பொறியியலாளர் சோகோல் ஏ-400 என்ற பெயரில் பறக்கும் கார் ஒன்றை வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இந்தக் கார் 4 பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது. இதில் பட்டனை அழுத்தினால் (ஒன்றோடு ஒன்று உள்ளடக்கிது) சிறகுகள் விரிந்து கொள்ளும் விதத்தில் இருந்தது.

## பறக்கும் காரின் விலை

தரையில் செல்லும் கார்களின் விலையே சில லட்சங்களில் ஆரம்பித்து கோடிக்கணக்கான ரூபாய்களைத் தாண்டும் போது பறக்கும் கார்களின் விலை என்னவாக இருக்கும்?

வானில் பறக்கும் ஸ்கை ரைடர் காரின் விலை ஆரம்பத்தில் 1 கோடி ரூபாய் வரை இருக்கும் என்று கூறப்படுகிறது.

எம் -400 ரக ஸ்கை கார்கள் கோயோலின். டீசல். மதுசாரம். மண்எண்ணெய் மற்றும் புரப்பேன் போன்ற பல வகையான எரிபொருள்களை உபயோகப்படுத்தலாம்.

**தயாரிப்பு: கனிமொழி**



எம்-400 தரையில் இருந்து மேலே எழும்பும் காட்சி



சோகால்



ஸ்கை ரைடர் – பறக்கும் காரின் தோற்றம்



'எக்ஸ் ஹாக்' ரக பறக்கும் கார்

# இன்பக்கனவு தரும் இனிய இயந்திரம்

தமிழ் சினிமாவில் இப்போதெல்லாம் வெளிநாட்டுக் காட்சிகள் அதிகம் இடம்பெறுகின்றன. எல்லோருக்கும் அத்தகைய அழகிய இடங்களைச் சென்று பார்க்கக் கூடிய பொருளாதார வசதிகள் கிடைப்பதில்லை.

சினமாவில் வரும் காட்சிகளை நாம் மெய்மறந்து பார்ப்பதற்கு இதுவும் ஒரு காரணம். பார்த்த காட்சிகள் பல பின்னர் கனவுகளில் வந்து உங்களைத் தொந்தரவு செய்திருக்கும். அங்கெல்லாம் நேரில் போய் பார்த்தால் என்ன என்ற ஆதங்கத்தை உங்களிடம் ஏற்படுத்தியிருக்கும்.

இன்றைய பூகோளமயமாக்கல் பொருளாதாரத்தில் நீங்கள் கவலைப்பட்டால் அது வர்த்தகப் பிதாமகர்களுக்குப் பொறுக்குமா? உங்கள் கவலைகளைப் போக்குவதும் உங்கள் இன்னல்களைத் தீர்ப்பதும் தானே அவர்களின் தலையாய கடமை. அதற்குள் எப்படிக் காசு பண்ணுவது என்பது அவர்களுக்கு மட்டுமே தெரிந்த கலை.

மின்னியல் பொருள்களைத் தயாரிக்கும் ஜப்பானின் மிகப் பெரிய நிறுவனம் ஒன்று இப்போது உங்களது மேற்கண்ட கவலையைப் போக்கத் தயாராகி விட்டது. அதற்கான சாதனத்தையும் அது உருவாக்கியுள்ளது.

நீங்கள், ஒரு சினிமா கதாநாயகனாக வருவதற்கோ இதுவரை தமிழ் சினிமாவில் எவரும் பெற்றிராத ஒஸ்கார் விருதைப் பெறுவதற்கோ பிரியப்படலாம். அதைப் பூர்த்திசெய்வதுதான் புதிய சாதனத்தின் வேலை. ஆனால், அது நிஜத்தில் அல்ல; கனவில்.

நீங்கள் பிரியப்படுவதை ~ உங்களுக்கு விருப்பமானதை ~ கனவில் கண்டுகளிப்பதற்கானதே இந்த இயந்திரம். உங்கள் இரவுகளையும் தூக்கத்தையும் இனிமையாக்குவதே இதன்வேலை.



35 அங்குலம் உயரம் கொண்ட இந்தப் பொருள் இனிய கனவுகளை உங்களுக்கு அள்ளி வழங்குகின்றது. இதில், குரலைப் பதிவு செய்யும் கருவி, படங்களை வெளிபடுத்திக் காட்டக் கூடிய மின்குமிழ்கள், வர்ணப் படங்களை வெளிப்படுத்தும் சிறியதிரை, பதிவுசெய்யப்பட்டு உள்ளேயே வைக்கப்பட்டுள்ள பின்னணி இசை, இரு 'ஸ்பீக்கா'கள் மற்றும் நேரக் கணிப்புக்கருவி என்பன உள்ளன.

இந்தக் கருவியைப் பயன்படுத்தும் ஒருவர் இவற்றைக் கொண்டு தனது கனவுகளை அழகான பின்னணி இசையைக் கொண்டதாக வண்ண வண்ணக் கனவுகளாக நெறிப்படுத்திக் கொள்ளமுடியும்.

இதற்காக நீங்கள் செய்யவேண்டியது பெரிதாக ஒன்றுமில்லை. படுக்கைக்குப் போவதற்கு முன்னர் அந்த இயந்திரத்தின் முன்பாக மிகச் சில நிமிடங்கள் உட்கார்ந்திருங்கள். அதன் பின்னர் "நீங்கள் வெனிசுக்கோ அமெரிக்காவின் புகழ்பெற்ற இடங்களுக்கோ செல்லத் தயாராகி விடுவீர்கள" என்று இதனைத் தயாரித்துள்ள நிறுவனத்தின் விற்பனை முகாமையாளர் பீற்றர் ஹர்வூட் தெரிவித்தார்.


இந்த இயந்திரத்துக்கு யுமிமி கோபோ (Yumemi Kobo) என்று பெயரிடப்பட்டுள்ளது. முதலில் நீங்கள் அந்த இயந்திரத்தின் முன்பாக உட்கார்ந்து கொள்ளுங்கள். பின் அதில் நீங்கள் விஜயம் செய்வதற்கு (கனவில்தான்) விரும்பும் இடத்தின் அழகான படம் ஒன்றை அல்லது விம்பத்தை அதற்கான இடத்தில் பொருத்திக்கொள்ளுங்கள். அடுத்து அந்த விம்பத்தில் கவனத்தைச் செலுத்திய படி நீங்கள் காணப்போகும் கனவைப் பற்றி நினைத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் வண்ணக் கனவின் இடையே வரும் முக்கியமான சொற்களை அந்த இயந்திரத்தில் பதிவு செய்துகொள்ளுங்கள். அனைத்தும் தயாரானதும் இயந்திரத்தை உங்கள் தலைமாட்டில் வைத்துக் கொண்டு தூங்குங்கள்.

இயந்திரத்தில் இருந்து மெல்லிய பின்னணி இசையுடன் உங்கள் இனிய கனவு மெல்லமெல்ல விரியும். இன்பக் கனவின் தாலாட்டில் நீங்கள் ஒரு சுகமான தூக்கத்தை அனுபவிக்கலாம்.

இந்த இயந்திரத்தை உருவாக்குவதற்கான ஆய்வுகள் அனைத்தும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. அதற்குள் பதிய வைக்கப் படப்போகும் பின்னணி இசை, மக்களை அமைதியாகத் தழுவிச் செல்லக்கூடியதாக இருக்கவேண்டும் என்று அதன் தயாரிப்பு நிறுவனம் விரும்புகின்றது.

அந்த இசையைத் தெரிவுசெய்வதற்கே இப்போது முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதுவும் முடிந்ததும் உங்கள் கனவுகளின் கதாநாயகன் உங்கள் முன். நீங்கள் இனிய கனவுகளின் முன்.



# பாவியார் போகிற இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்........

சிங்களத் தேசியவாதம், தமிழ் தேசியவாதம், முஸ்லிம் தேசியவாதம் என மூன்று 'அரசியல் வாதங்களின்' இழுவிசைகளினால் இலங்கைப் பொருளாதாரம் ஈடாடியுள்ள நிலையில் மீண்டும் ஓர் அவசர பொதுத்தேர்தல் வருகிறது.

அந்த அந்த தேசியவாதங்களின் குணவியல்புகளும் கதாபாத்திரங்களும் காலத்துக்குக் காலம் மாறிவருகின்ற போதிலும் அவற்றின் 'கூர்ப்பு' உச்ச நிலையை அடையும் காலகட்டமொன்றில் நாம் வாழ்கின்றோம்.

சிங்களத் தேசியவாதத்துக்கு அரச இயந்திரக் கூட்டமைப்பு இருந்தது. அது அதிகார வலுவுள்ளதாகவும் பலம்மிக்கதாகவும் இருக்கின்றது. சிங்களத் தேசியவாதம் தமிழினத்தின் அரசியல் இருப்பையும் உரிமைகளையும் தனது சட்டவாக்கத்துறை, நீதித்துறை, நிறைவேற்று அதிகாரத்துறை ஆகிய மூன்றையும் பயன்படுத்தி மறுக்கின்றது என்ற யதார்த்தத்தை நியாயமாக்கி, சிங்களத் தேசியவாதத்துக்கு, சற்றுப்பிந்தி ஆனால், அதற்கு சமதையாக தமிழ்த் தேசியவாதம் வளர்ந்துவிட்டது.

சிங்களத் தேசியவாதிகள் - அதிலும் தீவிர சிங்களத் தேசியவாதிகள் இலங்கைத் தீவு முழுவதும் சிங்களவர்களுடைய தேசம் என்கின்றது. தமிழ்த் தேசியவாதிகள் இலங்கையின் தமிழர்கள் ஒரு நிலத்தொடர்புடன் செறிந்து வாழும் வடக்கு - கிழக்கு தமிழர் வரலாற்றுத் தாயகம் (Historical Home Land) என்று வலியுறுத்துகின்றனர். சிங்களத் தேசியவாதத்தின் பாதுகாப்பு அரணாக இலங்கை அரச படைகள்



உள்ளன. தமிழ்த் தேசியத்தின் காவலர்களாக தங்களின் படைகள் உள்ளன என விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்.

இந்த இரண்டு தேசிய வாதங்களிலும் வயதில் குறைந்த முஸ்லிம் உபதேசியவாதம், அவ்வப்போது ஆட்சிக்கு வரும் இலங்கை அரசுகளில், அமைச்சுக்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவிகளை வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (பிரிந்தவர்கள் உள்ளிட்ட) அங்கத்தவர்கள் மூலம் பலப்படுத்தப்பட்டதாகவே கொள்ளலாம்.

இலங்கையின் விகிதாசார தேர்தல் முறைமூலம் உறுதிப்படுத்தப்படுவதாகச் சொல்லப்படும் நாடாளுமன்ற ஜனநாயகம், ஒரு சிங்களக் கட்சியினால் தக்கவைக்கப்படுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மலையக கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஆதரவு என்றும் இன்றியமையாததாகவுள்ளது.

இந்நிலையில், சிங்களத் தேசியவாதத்துக்கும், தமிழ்த் தேசிய வாதத்துக்கும் அரசியல் பேச்சுக்களில் பேரம் பேசுவதற்கு, ஏதோ ஒரு வலுவான வெவ்வேறான ஆயுதப் பின்னணி உள்ளது என்றும், அவ்வாறான பின்னணி தமக்கு இல்லை என்பது தமது பலவீனமே என்றும் அண்மைக் காலங்களாக ஊடகங்கள் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் ஆதங்கப்பட்டு வருகின்றனர். தனியான முஸ்லிம் பொலீஸ் படை அமைக்க எடுக்கப்பட்ட முயற்சி, ஏற்கனவே இருந்துவரும் முஸ்லிம் ஊர்காவற்படை அமைப்பு என்பனவும் தென்கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களின் எழுச்சிப் பிரகடனங்களும் இத்தகைய ஆதங்கங்களின் வெளிப்பாடுகளே.

சிங்களத் தேசியவாதத்தின் தாக்கத்தின் மறுதாக்கமாக தமிழ்த் தேசிய வாதம் வளர்ந்துவிட்டது போல, முஸ்லிம் தேசியவாதத்தை வளர்க்க முற்படும் முஸ்லிம் தலைவர்கள் சிலர், தமிழ்த் தேசியவாதம் தமக்கு அநீதி இழைக்க முற்படுகின்றது என முஸ்லிம் குடிமக்களிடம் உணர்த்தத் தலைப்பட்டுள்ளன, தமிழர்களும் தமிழ்பேசும் முஸ்லிம்களும் 'தமிழ்பேசுவோர்' என்ற அடிப்படையில் அரசியல் விதியை நிர்ணயிப்பது தமக்கு ஆபத்து என்றும், தமிழ்த் தேசிய வாதம் தனக்குரித்தான விடுதலைப் புலிகளின் இராணுவ வல்லமையுடன் செயலாக்கம் பெற்றிருப்பது பற்றிய எச்சரிக்கையுணர்வு முஸ்லிம் மக்களுக்குத் தேவையென்ற அடிப்படையிலும் பிரசுர யுக்திகளைக் கையாள்கின்றனர்.

வடக்கு - கிழக்கின் நிலத்தொடர்பு சார்ந்த குடித்தொகையடர்த்தியைப் பார்த்தால், குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் நிலைவரத்தைப் பார்த்தால் இரு இனங்களும் 'பிட்டும் தேங்காய்ப்பூவும்' போல வாழ்கின்றனர் என்று சில மிதவாத தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் கூறமுற்பட்டுள்ளனர். வேறு வேறு 'வெளிச்சக்திகளின்' தலையீடுகளால் 'இடியப்பச் சிக்கலாக' மாறிவிடுமோ என்று அச்சப்படுமளவுக்கு கிழக்கு மாகாண 'இனஐக்கியம்' தோற்றம் காட்டுகின்றது.

இந்நிலையில், பிட்டு யார்? தேங்காய்ப்பூ யார்? என்று ஊடகங்களில் மிகத் துணிவாக முஸ்லிம்கள் குரல் கொடுக்கின்றார்கள். வடக்கு - கிழக்கின் தமிழராகவுள்ள அரச அதிகாரிகள் தமக்கு அநீதி இழைப்பதாகக் குற்றம் சாட்டும் முஸ்லிம் காங்கிரஸ் (பிரிந்தவர்கள் உள்ளிட்ட) தலைவர்கள் இப்போதே தமக்குத் தனியானதொரு மாகாண செயலகம் அமைக்கப்படவேண்டும் என்று உரக்கக் கூறுகின்றனர்.

இந்தநிலையில், சிங்களத் தேசியவாதத்துக்கும் முஸ்லிம் உப தேசிய வாதத்துக்குமிடையிலான அரசியல் உறவு தமிழர் உரிமைப் போரையும் அதன் வழி தமிழரின் பேரம் பேசும் ஆற்றலையும் மிகப் பெரியளவில் பின்னடையச் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் தெரிகின்றன.

சிங்களத் தேசியவாதமும் (தீவிர சிங்களத் தேசிய வாதம் உள்ளிட்ட) தமிழ்த் தேசியவாதமும் பேச்சு மேசையில் 'இனப்பிரச்சினைக்கான' தீர்வையோ தீர்வுக்கு முன்னோடியான விடயங்களையோ அரசியல் ரீதியாகப் பேச முற்படும். இனிவரும் காலங்களில் எல்லாம் முஸ்லிம் உபதேசவாதிகள் தமக்கென்று தனித்துவமான பிரதிநிதித்துவம் தேவையென்பதை வலியுறுத்தவே காத்திருக்கின்றனர்.

அடுத்த பொதுத் தேர்தலின் பின்பு ஐக்கிய தேசிய கட்சி தலைமை தாங்கும் ஐக்கிய தேசிய முன்னணியோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி~ ஜே.வி.பி.கூட்டுக்கட்சியோ ஆட்சியமைத்தால், விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்தத்தைத்தொடர்ந்து நடைமுறைப்படுத்தி பேச்சுக்களையும் தொடர்வர் என்பதற்கான அறிகுறிகளே தெரிகின்றன. புலிகளும் அதற்கான சாதகமான நிலையை எடுப்பதாகவே தெரிகிறது.

ஆனால், தீவிர சிங்கள தேசியவாதத்தின் முனைப்பை மீண்டும் அதிவேகமாகத் தட்டியெழுப்பி இலங்கையின் ஐக்கியத்தைக் கட்டிக் காப்பாற்றுதல் இரண்டாயிரம் வருட பௌத்த கலாசாரத்தை மீட்டெடுத்தல் என்ற கோஷங்களின் அடிப்படையில் அரசபடைகளை மேலும் பலப்படுத்தி அதிகரித்து ஒரு போரின் பின்னால் சிங்கள சமுதாயத்தை அணிதிரட்டக்கூடிய எதிர்பார்க்கைகளுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் ஜே.வி.பி.க்கு உள்ளதாக நிதானமான சில அரசியல் - இராணுவ விமர்சகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

முஸ்லிம் உப தேசியவாதம் பின்னர் சிங்களத் தேசியவாதத்தால் நிச்சயம் விழுங்கப்படும் என்றாலும், தமிழ்த் தேசியவாதம் தனது உரிமைகளை வலியுறுத்தி மீண்டும் மாற்று வழிகளின்றி போர்க்களமேகும் எனில், முஸ்லிம் உப தேசியவாதம் தமிழ்த் தேசியவாதத்திற்கு எதிரான ஒரு நிலை எடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. தமிழ் தேசியவாதத்திற்கு எதிரான போரில் இந்திய பிராந்திய வல்லரசுவாதம் 'சிங்களத்துக்கு' கைகொடுக்கும் என்றும் எதிர்பார்க்கலாம்.


தேசியவாதங்களின் ஜனநாயக இழுபறியாக மாறப்போகும் ஏப்ரல் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமைதாங்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சியமைப்பதற்கான வாய்ப்புகளும் இல்லாமல் இல்லை. அவ்வாறு ரணில் வெற்றி பெறுவாராகில், அமெரிக்க- ஐரோப்பிய- ஜப்பானிய நேரடிப்பங்களிப்பினாலும் மறைமுகத் தொழிற்பாட்டினாலும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்படும் என்றே நம்ப முடியும்.

எனினும், தெற்கில் ஜே.வி.பி. பெறப்போகும் அதிகரித்த ஆசனங்கள் ரணிலின் வெற்றியை பலவீனமான வெற்றியாகவே மாற்றும். இந்நிலையில், முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்காக வாதாடும் சக்திகளின் ஆதரவு ரணிலுக்கு நிச்சயம் தேவைப்படலாம். இந்நிலையில், மீண்டும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் நகர்வுகளும் அவர்சார்ந்த இந்திய ஆதரவுநிலை அரசியலும் சமரசச் சமநிலையை பாதிக்கவே செய்யும்.

எனவே, மீண்டும் மீண்டும் பாவியார் போகிற இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்' என்ற வகையிலேயே இலங்கையின் நவீன அரசியல் வரலாறு நகரப் போகிறது.

**- டன்ஸ்ரன் லூயிஸ்.**

## கணனித் தோழி



என் விரல் படும் போதெல்லாம்
உன்னுள் ஒரு புதுப் பிரசவம்
என் அறிவுத் தேடலுக்கெல்லாம்
உன்னுள் ஓர் அறிவுப் பெட்டகம்

உன் முன்னே நான் நின்றால்
என்னை நான் மறக்கின்றேன்
உன்னில் நான் ஒன்றாகி
என்னை நான் தேடுகிறேன்

உன்னால் தான் நான் இன்று
உலகத்தைக் காண்கின்றேன்
நீ இல்லையேல் இனி என்றும்
நான் இங்கு இல்லை.

**- வி.தீபா.**

## எதைத் தேடுகிறாய்.....

தொலை வானில்
தேடுகிறாய்
எதை?.

துன்பத்தில்
தொலைத்ததையா?
கரைகளின்
வலிமையில்
தான்
அலைகள்
திரும்பிச் செல்கிறது
ஆழ் கடலில்தான்
முத்துக்கள்
பிறக்கிறது.

தேடல்கள் - உன்
வாழ்வைத் திசை
திரும்பும்
நண்பா!
தொலைந்து
போனது
இறந்த காலம்,

இருப்பதைப் பற்றி
நினைத்துப் பார்
அழகிய நிலவு
குளிர்ந்த வானம்
அண்ணார்ந்துபார்
ஆகாயம் உன்
அருகில்

முடிந்து போன
வாழ்வை
குனிந்து தேடாதே
அண்ணார்ந்துபார்
உனக்காய்
நட்சத்திரங்கள்
சிரித்துக்கொண்டிருக்கின்றன.

மாலைகளாக்கு!
அணியப்பட
ஆயிரம் கழுத்துக்கள்
காத்திருக்கின்றன....

**- தயாமதி.**



## அணு ஆயுதத்.....

(முதற்பக்கத் தொடர்ச்சி)

நுட்ப சாயல் பெரியளவில் தெரிவதாக அவர்கள் கூறுகின்றனர். அப்துல் காதிர்கானின் அணுவாயுத உற்பத்திப் பட்டறையில் வடிவமைக்கப்பட்டவை போன்ற பாகங்கள், தொழில்நுட்பங்களை தெஹ்ரான் பெற்றுள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தனது இளமைக் காலங்களில் தீவிரமான கொம்யூனிஸ்ட்டாக நடைமுறையிலும் திகழ்ந்த லிபியாவின் அதிபர் கேணல் கடாபி, தனது வயதான காலத்தில், பாரிசவாத நோயுடன், லிபியாவின் ஆட்சிபீடத்தில் நிலைகொண்டுள்ளார். ஒருகாலத்தில் (1980களில்) முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகனால் 'ஒரு விசர் நாய்' என்று வர்ணிக்கப்படுமளவுக்கு ஆவேசமாக அமெரிக்காவுக்கு எதிரும் புதிருமாக நின்றவர் கடாபி.

அவரைக் கொல்வதற்கு அமெரிக்கா அவரது மாளிகைமீது அதிரடி விமானத் தாக்குதல்களையும் ஏவுகணை வீச்சுக்களையும் நடத்தியதும் மறக்கப்படமுடியாதது. ஆனால், பூகோளமயமாதல் மற்றும் அமெரிக்காவின் சர்வதேச பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தப்பிரகடனம், ஆப்கானில் தலிபான்களின் வீழ்ச்சி, ஈராக்கில் சதாமின் வீழ்ச்சி என்பவற்றையடுத்து கடாபி தானாக (பேச்சுக்கள், அரசியல் ராஜதந்திர முயற்சிகளுக்கூடாக) அமெரிக்காவின் வழிக்கு இப்போது வந்துவிட்டார். அத்துடன், அவரது சகாக்கள் அணுவாயுதத் தொழில்நுட்பப் பரிமாற்றத்தில் பாகிஸ்தானும், அதன் விஞ்ஞானி கானும் எவ்வகையான உதவிகளைச் செய்தார்கள் என்கின்ற பூரணமான விவரங்களை வெளிப்படுத்தி, அப்துல் காதீர்கான் விவகாரத்தில் அமெரிக்கப் புலனாய்வாளர்களுக்கும் விசாரணையாளர்களுக்கும் பூரணமாக ஒத்துழைத்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், பாகிஸ்தான் விஞ்ஞானி கான் அவர்களின் அணுவாயுதத் தொழில்நுட்பத்தின் கள்ளச்சந்தையைக் கண்டுபிடித்து அம்பலப்படுத்தியதில் அமெரிக்கா வெற்றி கண்டுவிட்டது என்று பெருமை பேசுகிறார். இதற்கு முன்னர் 2001ஆம் ஆண்டு அமெரிக்காவின் அழுத்தத்தினால், அணுவாயுத விஞ்ஞானி கான் வகித்துவந்த பாகிஸ்தான் அணுவாயுத வளர்ச்சித் திட்டத் தலைவர் **(Head of Nu-clear - Weapons Development)** என்ற பதவி, பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜனாதிபதி முஷாரவ்வால் கானிடமிருந்து பறிக்கப்பட்டது.

இங்கே ஆகப்பிந்திய நிலைவரம் யாதெனில் விஞ்ஞானி கான் 'நான் விசுவாசமாக நன்னம்பிக்கையிலேயே செயற்பட்டேன்' **(I did in good faith)** என்று கூறி எல்லாவற்றையும் தனது தவறுகளாக விவரித்து தொலைக்காட்சி உரையொன்றின்மூலம் பகிரங்க மன்னிப்பும் கோரியுள்ளார்.

இன்னமும் மிகத்துடிப்புடனும் உயிர்ப்புடனும் பாகிஸ்தானில் இஸ்லாமிய அடிப்படைவாதம் வளர்ந்துவருகிறது கடந்த ஆண்டு பாகிஸ்தானில் நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சிகள் செல்வாக்குடன் வென்று கூட்டு ஆட்சி அமைத்துள்ளன. பாகிஸ்தான் அமைச்சரவையில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் அமைச்சர்களாக உள்ளனர். இந்நிலையில், தேசியப்பற்றுடன் நன்னம்பிக்கையில் செயற்பட்ட ஒரு தேசத்தின் கதாநாயகனை **(National Hero)**, இஸ்லாமியக் குண்டின் தந்தையை **(The Father of Islamic Bomb)** தான் பிழைகள் செய்ததாக ஒப்புக்கொண்டு மன்னிப்புக்கேட்கும்படி செய்துவிட்டது வரலாறு. அதேவேளையில், ஒரு நாடகபாணியில், 'கான் மன்னிக்கப்பட்டார்' என அறிவித்தார் முஷாரவ்.

பாகிஸ்தான் என்ற தேசத்தின் இதயமாக, அதன் உதயம் அஸ்தமிப்பதை தடுக்கும்வகையில் செயற்பட்ட விஞ்ஞானி அப்துல் காதீர்கான் 'தான் போன போக்கில்', தனது சுயநலனுக்காகச் செயற்பட்டார் என்று கூறமுடியாது. பாகிஸ்தானில் அவ்வக்காலகட்டத்தில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களின் பூரண ஆசீர்வதிப்புடன் பூரண அங்கீகாரத்துடன்தான், அவர், பாகிஸ்தானின் இராணுவ விஞ்ஞான வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டிருந்தார்.

இங்கு பரிதாபநிலைக்குள்ளானவர் விஞ்ஞானி கான் மட்டுமல்ல, பாகிஸ்தானின் முன்னணி இராணுவத்தளபதியாகவிருந்து இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிப் பின்னர் பாகிஸ்தான் ஜனாதிபதியாகவிருக்கும் பெர்வெஸ் முஷாரவ் அவர்களும்தான்.

ஏனெனில், அமெரிக்கா சொல்லும் உலக பயங்கரவாதத்துக்கெதிரான போரியலின் தாற்பரியங்களுக்கும், பாகிஸ்தானின் இஸ்லாமிய அடிப்படை வாதத்துக்கும் ஒரே நேரத்தில் விசுவாசமான நண்பனாக இருக்கும் அபாயமே அது.

பாகிஸ்தானின் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் பரமரட்சகனாக மதிக்கப்படும் விஞ்ஞானிகானை மன்னிப்புக் கேட்கச் செய்தமை, அமெரிக்காவை சமாளிக்கும் முஷாரவ் முயற்சி, விஞ்ஞானியை மன்னித்தமை இஸ்லாமிய அடிப்படைவாதிகளையும் அதன்வழி விஞ்ஞானியை ஏற்றிப்போற்றும் பாகிஸ்தான் மக்களையும் சமாளிக்கும் முஷாரவ் நாடகம்.

கானுடன் வேலைசெய்த மேலும் ஆறு விஞ்ஞானிகளும் பெயர் வெளியிடப்படாத பல பாகிஸ்தான் இராஜதந்திரிகளும் கைதாகி (நாடகக் கைது?) பாகிஸ்தான் அரசாங்கத்தால் விசாரிக்கப்படுகின்றார்களாம். கான் மன்னிக்கப்பட்ட விதம் அமெரிக்காவை விசனப்படுத்தியுள்ளது. இப்பொழுது முஷாரப் கூறுகிறார். "விசாரணைகளுக்கு ஒத்துழைக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன்தான் விஞ்ஞானி மன்னிக்கப்பட்டுள்ளார்".

ஆனால், அமெரிக்கா விட்டபாடில்லை. கானின் சர்வதேச வலையமைப்பைக் கலைத்து அது பற்றிய உண்மைகளை வெளியிடுமாறு அமெரிக்கா கோருகிறது. ஒரு தனிப்பட்ட விஞ்ஞானியின் பெயரைச் சாட்டாக வைத்து, பாகிஸ்தான் அரசாங்கங்கள் மேற்கொண்ட அணுவாயுத தொழில்நுட்ப பகிர்வுகள் அனைத்தும் அரங்கேறத்தான் போகின்றன. நாடகம் தொடரும். ★★★



# கருணாநிதியின் காய்நகர்த்தலில் வெட்டுப்படுவாரா வைகோ?

திராவிட முன்னேற்றக் கழகத்தை உங்களுக்குப் பின்னர் தலைமையேற்று வழி நடத்தப்போகும் வாரிசு யார்?

தி.மு.க. தலைவர் கருணாநிதியை சந்திக்கும் செய்தியாளர்கள் அடிக்கடி இப்படி ஒரு கேள்வியைக்கேட்டு வைப்பது வழக்கமாக இருந்தது.

இதற்குக் கருணாநிதி தனது பாணியிலேயே பதிலொன்றை எப்போதும் கூறி வந்தார்.

"திராவிட முன்னேற்றக்கழகம் சந்நியாசிகளின் மடமல்ல. வாரிசை நியமிப்பதற்கு. இது ஜனநாயக ரீதியிலான கட்சி. ஆகவே, எனக்குப் பின்னர் கட்சியின் பொதுக் குழு செயற்குழு கூடி அடுத்த தலைமையை தெரிந்தெடுக்கும்!!

இதுவே கருணாநிதியின் பதிலாக இருந்து வந்தது.

கடந்த சில ஆண்டுகளாகவே செய்தியாளர்கள் இந்தக் கேள்வியை மறந்து போயிருந்தார்கள்.

ஆனால், இப்போது 'அடுத்த வாரிசு; பற்றிய கேள்வி எழத்தொடங்கியுள்ளது. காரணம், தி.மு.கவுடன் வைகோ மீண்டும் நெருங்கியிருப்பதும், தயாநிதிமாறனும் மு.க.ஸ்டாலினும் தி.மு.க.சார்பில் டில்லிசென்று சோனியாவுடன் பேச்சு நடத்தியிருப்பதும் ஆகும்.

### கருணாநிதிக்கு புதிது

தமிழகத்தில் ஏன்.... இந்தியாவில் கூட மூத்த ~ சாணக்கியம் மிக்க ~ அரசியல்வாதியாக மதிக்கப்படுபவர் கருணாநிதி. இதுவரை வாழ்வில் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து, சமாளித்து தொடர்ந்து அரசியல் நடத்துபவர் அவர். ஆனாலும், எதிர்வரும் இந்திய நாடாளுமன் றத் தேர்தலை முற்றிலும் வித்தியாசமான சூழ்நிலையிலேயே அவர் சந்திக்கின்றார். ஏனென்றால், அவரது மருமகன் முரசொலிமாறன் அவரை மட்டுமின்றி உலகை விட் டும்சென்றுவிட்டார்.

மக்கள் செல்வாக்கு முரசொலி மாறனுக்கு இருந்ததில்லை என்பது உண்மைதான். மக்களை கவர்ந்திழுக்கும் பேச்சாற்றலோ, கவர்ச்சியோ முரசொலி மாறனுக்கு இருக்கவில்லைதான். ஆனால், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற் பட்டு டில்லி அரசியலில் செல்வாக்குப்பெற்றிருந்தார் முரசொலிமாறன். இதனால் மாமன் கருணாநிதி மாநிலத்திலும், மருமகன் முரசொலிமாறன் மத்தியிலும் அரசியல் காய்களை அழகாக நகர்த்தி வந்தனர்.

இதற்கு ஏற்றால் போல, தி.மு.கவின் கோட்டையான சென்னை சேப்பாக்கம் தொகுதி கருணாநிதக்கும், அதனை உள்ளடக்கிய தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி முரசொலி மாறனுக்கும் கைகொடுத்தன.

### மாறனுக்கு முக்கியத்துவம்

தி.மு.கவிலிருந்து பிரிந்து எம்.ஜி.ஆர். தனிக்கட்சியாக அ.தி.மு.கவை ஆரம்பித்து மாநிலத்திலும் மத்தியிலும் காங்கிரஸோடு கூட்டுவைத்தார். அப்போது மத்தியில் காங்கிரஸ் ஆட்சி, மாநிலத்தில் தி.மு.க.ஆட்சி, காங்கிரஸின் கூட்டணி உறவைப் பயன்படுத்தி தி.மு.க. ஆட்சியை கலைத்தார் எம்.ஜி. ஆர். அப்போதுதான் டில்லி அரசியலில் செல்வாக்கை வளர்க்கவேண்டிய அவசியம் தி.மு.கவுக்கு ஏற்பட்டது. அப்போது, டில்லியில் தனது மருமகன் முரசொலிமாறனை தி.மு.கவின் அரசியல் சூத்திரதாரியாக்கினார் ஜனநாயகக் கட்சியான தி.மு.கவின் தலைவர் கருணாநிதி. அவரது திட்டம் வீண்போகவில்லை. எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக இருந்த சுமார் 13 ஆண்டு காலத்தில் தி.மு.கவுக்கு எதிரான நடவடிக்கைகளால் பெரும் பாதிப்பு ஏற்படாமல் மத்திய அரசியலில் சமாளித்து வந்தார் முரசொலிமாறன்.

### மாநிலத்தில் போட்டி

அப்போதுதான் வைகோவின் செல்வாக்கு கட்சியில் வளர ஆரம்பித்தது. இது கருணாநிதியின் மூத்த மகனான மு.க.அழகிரியின் எரிச்சலைத் தூண்டியதாகக் கூறப்படுகிறது. இந்த நேரத்தில் மற்றொரு மகனான மு.க.ஸ்டாலினை மாநில அரசியலில் வளர்க்கத் தொடங்கினார் கருணாநிதி. ஸ்டாலினின் மற்றும் அழகிரியின் வளர்ச்சிக்கு வைகோ இடையூறாக இருப்பதாக அப்போது செய்திகள் வெளிவந்தன.

### மதுரையில் நடந்தது.

1993ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 27ஆம் திகதி மதுரைக்குச் சென்றார் கலைஞர். இந்த விஜயமே தி.மு.கவிலிருந்து வைகோ வெளியேறவேண்டிய சூழ்நிலைக்கு பிள்ளையார் சுழிபோட்டது என்று கூறலாம்.

அன்று மதுரை ரயில் நிலையத்தில் கருணாநிதி சென்று இறங்கியபோது மு.க.அழகிரியின் ஆதரவாளர்கள் "கலைஞர் வாழ்க", அழகிரி வாழ்க; என்று கோஷம் எழுப்பினார்கள். ஆனால், அப்போது "கலைஞர் வாழ்க, வைகோ வாழ்க; என்று எழுந்த கோஷம் அழகிரி ஆதரவாளர்களை திகைக்க வைத்தது: கருணாநிதியை யோசிக்கவைத்தது.

ரயில் நிலையத்தைவிட்டு வெளியே வந்து காரில் பயணித்தார் கருணாநிதி, வீதியெங்கும் வைகோவின் படத்துடன் தி.மு.க.வினர் ஒட்டிய சுவரொட்டிகள்.

"தி.மு.கவின் மூன்றாவது அத்தியாயமே வருக! என்று வைகோவை வரவேற்றன அந்தச் சுவரொட்டிகள்.

"அறிஞர் அண்ணா ஆரம்பித்த தி.மு.கவில் இரண்டாவதாக நான் தலைமையேற்றிக்கிறேன், மூன்றாவது.....

காரில் இருந்தே கணக்குப் போட்டார் கருணாநிதி.

விளைவு ~ வைகோ கலந்துகொள்ள இருந்த கூட்டங்கள் கட்சி நிகழ்வுகள், தி.மு.க. தலைமையால் இரத்துச் செய்யப்பட்டன. தவிர்க்க முடியாத காரணம் என்று கூறி.

இதற்குப் பிறகுதான். கருணாநிதியிடம் செய்தியாளர்கள் 'அடுத்த வாரிசு; யார்? எனக் கேட்கத் தொடங்கினார்கள்.

இப்படியே மாதங்கள் உருண்டன.

### பூகம்பம் வெடித்தது.

1993ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம்..... "வைகோவின் நலனுக்காக கருணாநிதியைக் கொல்வதற்கு விடுதலைப் புலிகள் சதிசெய்கிறார்கள்; என்று மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்த உளவுத்துறை தனக்கு அனுப்பிய செய்தியை கருணாநிதி வெளியிட்டார். தி.மு.கவில் பூகம்பம் வெடித்தது.

1989ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சிக்கு




வந்த கையோடு வைகோ படகில் இரகசியப் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்து, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் சந்தித்துத் திரும்பியிருந்தார்.

இதனால், தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது வேறு விஷயம்.

வைகோவின் இரகசியப் பணயத்தை சுட்டிக்காட்டிய கருணாநிதி தரப்பினர், புலிகளுடன் வைகோவுக்குள்ள நெருக்கத்தை குறிப்பிட்டு உளவுத்துறையின் செய்தியை உண்மை அன்று பிரசாரம் செய்தனர்.

ஆனால், தி.மு.கவைப் பிளக்க உளவுத்துறைசதி செய்கிறது என்று அதே கருணாநிதி சில மாதங்களின் முன்னர் கூறியிருந்ததை அப்போது வசதியாக அவர்கள் மறந்துவிட்டது ஆச்சரியம்தான்.

'இது அபாண்டமான குற்றச்சாட்டு, நிதி கேட்கிறேன். பொதுக் குழுவை கூட்டுங்கள்; என்றார் வைகோ. ஆனால், கருணாநிதி பொதுக் குழுவை கூட்ட மறுத்துவிட்டார்.

'முரசொலிமாறன், மு.க.அழகிரி, மு.க. ஸ்டாலின் ஆகிய மூவருமே இதற்கெல்லாம் பின்னணி! என்று குற்றஞ்சாட்டிவிட்டு வைகோ தி.மு.கவை விட்டு வெளியேறினார். முரசொலிமாறனின் செல்வாக்கு டில்லியில் விளையாடியதன் விளைவாகவே உளவுத்துறை இப்படி ஒரு செய்தியை கருணாநிதியிடம் தெரிவித்தது என்று அப்போது பேச்ச டிப்பட்டது.

### மீண்டும் கூட்டு

அதற்குப் பிறகு ம.தி.மு.க. உருவாகி, மத்திய அமைச்சரவையிலும் அக்கட்சி இடம் பெற்று, கடைசியாக வைகோ 'பொடா'வில் கைதாகி பிணையில் வெளியே வந்துவிட்டார். இவையெல்லாம் பழங்கதைகள். ஆனால், ஒரு மாநிலக்கட்சியின் தலைவராக, மத்தியில் முரசொலிமாறனைப் போலவே கட்சி வேறுபாட்டுக்கு அப்பாற்பட்டு செல்வாக்குப் பெற்று வளர்ந்துவிட்ட வைகோ மீண்டும் கருணாநிதியை கட்டியணைக்கிறார். இருவரும் செய்தியாளர்களின் 'கமரா' களுக்கு சிரித்தபடியே 'போஸ்' கொடுக்கிறார்கள். இதுவே புதுக்கதை.

இத்தோடு நின்றிருந்தால் 'அடுத்த வாரிசு' பற்றிய கேள்வி மீண்டும் எழுந்திருக்காது. ஆனால், காங்கிரஸ் தலைவி



சோனியா காந்தியைச் சந்தித்துப்பேச்சு நடத்த கருணா நிதி இருவரை அனுப்பினார்.

அவர்களில் ஒருவர் பழையமுகம் ~ கருணாநிதியின் மகன் மு.க.ஸ்டாலின்.

மற்றவர் முற்றிலும் புதிய முகம் ~ முரசொலிமாறனின் மகன் தயாநிதிமாறன்.

மு.க.ஸ்டாலின் அரசியலில் ஏற்கெனவே ஈடுபட்டிருப்பவர். அதனால் அவர் டில்லி செல்வது ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால், மேற்படிப்புகளை முடித்துவிட்டு சினிமா, வர்த்தகத்துறையில் ஈடுபாடு காட்டிய தயாநிதிமாறன் அரசியலில் ஈடுபடத் தொடங்கியதுதான் பலருக்கும் விழிகள் உயரக் காரணமாகிவிட்டது.

### கருணாநிதியின் கணக்கு

எதிர்வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கவும், ம.தி.மு.கவும் கூட்டாகப் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. ஆகவே, மீண்டும் தாய்வீடான தி.மு.கவிற்குள் புகுந்து வரப்போகிறார் வைகோ. முரசொலிமாறன் இல்லாதநிலையில் தி.மு.க.வுக்கென டில்லியில் காய்களை நகர்த்த ஆளில்லாத நிலை. அதிலும் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மைகிட்டாது போய் மீண்டும் கூட்டணி ஆட்சி மத்தியில் ஏற்படும் சூழ்நிலையில், தி.மு.க.கூட்டணி சார்பில் வைகோவின் குரலே டில்லியில் பலமாக ஒலிக்கும் நிலைஏற்படும், அத்தோடு, தி.மு.கவிலும் வைகோவின் செல்வாக்கு உயரத்தொடங்கிவிடும். இது மு.க. ஸ்டாலினின் அரசியல் எதிர்காலத்துக்கு நல்லதாக அமையாது.

~இப்படி எல்லாம் கருணாநிதி கணக்குப் போட்டே, தந்தை மாற னின் செல்வாக்கை பயன்படுத்தி டில்லி அரசியலில் தயாநிதியை நுழைத்திருக்கிறார் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

அப்படியே மாறனின் தென் சென்னைத் தொகுதியில் தயாநிதி நிறுத்தப்பட்டு நாடாளுமன்றத்துக்கும் அனுப்பப்பட வாய்ப்பு உள்ளதை தி.மு.க. மூத்த தலைவர்கள் மறுக்கவில்லை.

கருணாநிதி ~ மாறன் கூட்டணிக்கு அடுத்த ஸ்டாலின் ~ தயாநிதி கூட்டணி தி.மு.கவை ஆளப்போகிறது என்று தி.மு.க. உயர்மட் டத்தில் பேச்சு எழுந்துள்ளதாகவும் கூறப்படு கிறது.

ஆனாலும், கருணாநிதியும் சரி வைகோவும் சரி ஏன் ஸ்டாலினும் கூட தமக்குள் முட்டிமோதும் நிலையில் இல்லை. ஏனெனில், மாநிலசட்டப்பேரவையில் எதிர்க்கட்சிகள் மூச்சுவிடக்கூட முதல்வர் ஜெயலலிதாவின் அனுமதிபெறவேண்டிய நிலை தி.மு.க. பிரமுகர்கள் மீது அ.தி.மு.க. அரசு போடும் வழங்குகளின் எண்ணிக்கை முடிவில்லாமல் தொடர்கிறது.

இந்தப் பிரச்சினை ம.தி.மு.கவுக்கு மாநிலத்தில் இல்லை. ஆனால், மத்தியில் அமைச்சர்களாக இருந்த ம.தி.மு.கவினர் மீதும், தி.மு.கவினர் மீதும் குற்றப்பட்டியல்களை அ.தி.மு.கவினர் தயாரிக்கத் தொடங்கிவிட்டனர் என்று செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் மத்தியில் அ.தி.மு.க ~ பா.ஜ.க. கூட்டணி ஆட்சியைப் பிடித்தால் நிலைமை என்னாகுமோ என்ற அச்சம் இரு கட்சிகளையும் பிடித்தாட்டுகிறது. மாநிலத்தில் செயலலிதாவின் கை ஓங்கியிருப்பது போல மத்தியிலும் ஓங்கிவிட்டால் கருணாநிதி, வைகோ உட்பட தி.மு.க. ~ ம.தி.மு.க. தலைவர்கள் எல்லோரும் வீடுகளை விட்டு சிறைச்சாலைக்கு குடிபெயர நேரிடும் என்ற நிலை இப்போது.

ஆகவே, வைகோவை அணைத்து எப்படியாவது தேர்தலில் ஜெயித்துவிடவும் வேண்டும்.

அதேவேளை மகன் ஸ்டாலினின் அரசியல் எதிர்காலத்துக்கு வைகோ மீண்டும் முட்டுக்கட்டையாக வந்துவிடாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இப்படி ஒரு தர்மசங்கடம் கருணாநிதிக்கு.

அவரும் தனது பொன்விழாக் கண்ட அரசியல் அனுபவத்தை கொண்டு தளராது காய்களை நகர்த்தித்தான பார்க்கிறார். வைகோவும் தீட்டிய மரத்தில் கூர்பார்க்கத் தயாராகவே இருக்கிறார்.

ஆக கருணாநிதியின் காய் நகர்த்தலில் வெட்டுப்படுவாரா வைகோ? விடை காலத்தின் கையில்.

*-சென்னையிலிருந்து இந்திரஜித்.*